DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

HomeLife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY


29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1521 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 30, 2025

# Canada repatriated its Constitution from Britain and achieved full independence and witnessing immense growth.”

**King Charles at the Senate chamber in Ottawa delivering the Throne Speech of the 45th Parliament of Canada.**

# கனடா தனது அரசியலமைப்பை பிரித்தானியாவிடமிருந்து தழுவி மாற்றங்களைச் செய்து முழு சுதந்திரத்துடன், மகத்தான வெற்றிகளையும் ஈட்டி திகழ்கின்றது.

**ஒட்டாவா செனற்சபை வளாகத்தில் கனடாவின் 45வது பாராளுமன்ற சிம்மாசன உரையில் மன்னர் சார்ஸ் புகழாரம்**



(ரொறன்ரோவிலிருந்து
ஆர். என். லோகேந்திரலிங்கம்)

கனடா தனது அரசியலமைப்பை பிரித்தானிய தேசத்திடமிருந்துதான் தழுவிக் கொண்டது. அவ்வாறு இருந்தாலும் தனக்கேற்றவாறு அதில் மாற்றங்களைச் செய்து தற்பொது ”முழு சுதந்திரத்தை அடைந்த ஒரு தேசமாக , மகத்தான வளர்ச்சியையும் வெற்றிகளையும் ஈட்டிய ஒரு தேசமாக உயர்ந்து நிற்கின்றது. அத்துடன். ”கனடிய தேசமானது பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் பூர்வீகக் குடிகளின் பண்பாட்டுக் கோலங்களையும் அவற்றின் மூலததையும் தழுவியவண்ணம், தைரியமானதும், இலட்சியங்கள் பல கொண்ட ஒரு புதுமையான நாடாக தற்போது உலகின் கண்களுக்குத் தெரிகின்றது.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)

# கனடாவின் முக்கிய அமைச்சராக பதவியேற்ற கௌரவ ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றபோது கலந்து கொண்ட அவரது ஆதரவாளர்கள்!



கனடிய மத்திய அமைச்சரவையில் முக்கிய அமைச்சர்களில் ஒருவராகப் பதவியேற்ற கௌரவ ஹரி ஆனந்தசங்கரி, பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற வைபவத்தில் கலந்து கொண்ட அவரது ஆதரவாளர்களும் நண்பர்களும் கடந்த 23-05-2025 வெள்ளிக்கிழமையன்று ஒரு உணர்பூர்வமான அனுபவத்தைப் பெற்றார்கள். கடந்த லிபரல் அரசின் ஆட்சியில் முன்னாள் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையில் முக்கிய அமைச்சராகப் பதவியேற்ற பணியாற்றிய அவர் புதிய அரசாங்கத்தின் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்ற வைபவத்தை பல காட்சி ஊடகங்கள் மூலமாக எமது மக்கள் கண்டு களித்தார்கள்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025
உதயன் சர்வதேச விருது விழா 2025
Music - Dance - Awards Presentation - Dinner
இசை - நடனம் - விருதுவழங்கல் - இராப்போசன விருந்து
Date/Time: Saturday, June 14th, 2025 at 6:00pm
Venue: The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
அனுமதிச்சீட்டுக்களுக்கு: 416-732-1608 அல்லது 647-762-9512

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்

உங்கள் அபிமான

**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா

கலைமாமணி டாக்டர்

## நித்யஸ்ரீ மகாதேவன்

வழங்கும்

## சங்கீத சங்கமம் 2025



ஈழத் தமிழினத்தின்
செஞ்சொற்செல்வர்

## ஆறு திருமுருகன்

அவர்கள் வழங்கும் சிறப்புரை

## வேர்களைத் தேடுங்கள்



இந்நிகழ்வு மூலம் சேகரிக்கப்படும் நிதி **கனடா தமிழ் சமூக மையத்திற்கும்** ஈழத்தின் அறப்பணியாளர் - செஞ்சொற்செல்வர் **ஆறு திருமுருகனது சமூகப் பணிக்கும்** ஈழநாடு வாசகர்கள் சார்பில் வழங்கப்படும்.

அன்பளிப்பு **VIP** **$100** **$50**

என் இனிய உறவுகளே! ஓர் உயர்வான நோக்கத்திற்காகவும் - கனடிய மண்ணில் எமது அடையாளத்துக்காகவும் தாயக மண்ணில் எமது இருப்பை உறுதி செய்யவும் நடாத்தப்படும் இந்நிகழ்வு தொடர்பான இத்தகவலை உங்கள் முகநூல் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் உங்கள் நண்பர்களுக்கும் பகிர்ந்து உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

**SUNDAY**
**JUNE 01 2025**
**@5:30PM**

**METROPOLITAN CENTRE**
**3840 FINCH AVE EAST**
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
**ஈழநாடு பரமேஸ்**
**416-841-9600**
eelanadu1993@gmail.com

**விழா 5.30 மணிக்கு ஆரம்பமாகும். 10.30 மணிக்கு நிறைவு பெறும். நேரடி ஒளி, ஒலி பரப்புக் கிடையாது.**

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com




உதயன் கதிரோட்டம்

# இலங்கையின் ஆட்சி பீடத்தை மீண்டும் கைப்பற்றத் துடிக்கும் "கயவர்"களின் முயற்சிகளை அநுரவின் "படை" முறியடிக்குமா?

இலங்கையில் ஏழு தசாப்தங்களுக்கு மேலாக அரச பீடத்தில் மாறி மாறி அமர்ந்திருந்து தங்களுக்கு பக்கத்துணையாக தமிழ் முஸ்லிம் "கோடரிக் காம்புகளை" வைத்துக் கொண்டு நாட்டையும் சுரண்டி. இனவாதத்தையும் தூண்டி, வளங்களையும் கொள்ளையடித்து வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்து தங்கள் குடும்பங்களையும் சகாக்களையும் சுகபோகத்தின் உச்சத்தை அனுபவிக்கச் செய்த கயவர்களின் ஆட்சி கடந்த பாராளுமன்றத்தில் அப்புறப்படுத்தப்பட்டது.

இவ்வாறான இலங்கையின் ஆட்சி பீடங்களை ஆண்டாண்டு காலம் "அபகரித்து" அதில் அமர்ந்த வண்ணம் முதலாளித்துவத்தை ஊக்குவிக்கும் வகையிலும் அதனை நிலை நிறுத்துவதிலும் முற்போக்குச் சிந்தனைகளுக்கும் கொள்கைகளுக்கு முரணான வகையிலும் வறியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் கைவிட்டு, பணக்காரர்களை மேலும் மேலும் செல்வந்தர்களாக ஆக்கிய வண்ணமும் ஆட்சி செய்து அதன் மூலம் தங்கள் குடும்பங்களை வாழ்க்கையின் சுகபோகங்களை அடையும் உ ச்சத்திற்கு கொண்டு சென்ற ஒரு "கூட்டத்தை" அகற்ற வேண்டும் என்ற "கனவு" இலங்கையின் வாக்காளப்பெருமக்களில் பலருக்கு. குறிப்பாக உழைக்கும் தொழிலாள விவசாயக் குடிமக்களுக்கு இருந்து வந்தது.
இவ்வாறிருக்கையில், இலங்கையில் இதற்கு முன்னர் இடதுசாரிச் சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் தமது கைகளில் எடுத்துக்கொண்டவர்கள்கூட தங்கள் சிந்தாங்கள் சார்ந்து ஆட்சியை அமைக்க வேண்டும் என்பதற்கு பதிலாக, மாறி மாறி ஆட்சி பீடங்களை அபகரிக்கும் முதலாளித்துவக் கயவர்களோடு கைகோர்த்து அவர்கள் ஆட்சியில் அமர்ந்து பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் வருவதற்கு ஆதரவு வழங்கி வந்தார்கள். இதனால் அவ்வாறான இடதுசாரிக் கட்சிகளும் இலங்கை என்ற தேசத்திலிருந்து தங்கள் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டிய நிலையேற்பட்டது.
அதற்கு மேலாக இலங்கைக்கு வெளியேயிருந்து இலங்கையின் அரசியல் நிலைமைகளை அவதானிக்கின்ற அமெரிக்கா மற்றும் இந்தியா சீனா போன்ற நாடுகளும் இலங்கையில் ஒரு இடதுசாரிப் போக்குக்கொண்ட அரசு அமைவதையோ அன்றி வடக்கு கிழக்கு கிழக்கு மாகாணங்களில் தனியாட்சி அமையும் வண்ணம் அங்கு நீண்ட காலமாக இடம்பெற்றுவந்த ஆயுதப் போராட்டம் வெற்றி பெறவேண்டும் என்றோ விரும்பயதில்லை.
இதனால் காலங்கள் தாமாகக் கடந்து செல்லச் செல்ல இலங்கையில் ஆட்சி முறைகளில் மாற்றங்கள் எதுவுமின்றி. இனப்பிரச்சனையும் பொருளாதாரப் பிரச்சனையும் அங்கு எழுந்து நின்று தாண்டவமாடத் தொடங்கின.
எனினும் தொடர்ந்து வந்த நாட்கள் மக்களைச் சிந்திக்கச் செய்தன.

இலங்கையில் வாழும் மத்திய தர மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்களும் எண்ணிக்கையில் குறைந்த செல்வந்தர்களும் இணைந்து ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வர விரும்பினார்கள்.
இதனால் இலங்கையின் ஆட்சி பீடத்தில் அமர்ந்து அதிகாரத்தைக் கைப்பற்றியது தேசிய மக்கள் சக்தி என்னும் அநுர தலைமையிலான அரசாங்கம். அதன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தார்கள் அடித்தட்டு மக்கள்.
புதிய ஆட்சியில் மக்கள் புதிய அனுபவங்களைப் பெற்றார்கள். எளிமையான ஜனாதிபதி, செலவுகளைக் கட்டுப்படுத்தும் பக்குவமான நகர்வு அமைச்சர்களின் எளிமை. அவர்கள் சார்ந்த சாதாரணமான குடும்பச் சூழல். இவ்வாறான நம்பிக்கைகளை தந்த வண்ணம் ஆட்சியில் தொடர்ந்த அநுர அரசாங்கம் தற்போது தள்ளாடும் நிலையில் செல்கின்றதா என்ற தடுமாற்றம் அந்த அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு.
இந்த தடுமாற்றத்தை ஏற்படுத்தியைமைக்கு தோற்றுப் போன தமிழ் சிங்கள மற்றும் அரசியல்வாதிகள் காரணமாகிவிட்டார்களா? அல்லது படைத்தரபில் உள்ள முன்னைய ஆட்சியாளர்களின் சகாக்களா என்ற கேள்விகளை தங்கள் முன் வைத்த வண்ணம் தங்கள் துயரங்களைத் தாங்கியவர்களாக மக்கள் நகர்ந்து செல்கின்றார்கள்.

முன்னைய ஆட்சியினரின் காலத்தை ஒத்து தற்போதும் அதே அடக்கு முறைகள். அளித்த வாக்குறுதிகளை காப்பாற்ற முடியாதவர்களாக துணிச்சல் அற்ற போக்கு. இவை அனைத்தும் மக்களை சந்தேகம் கொள்ளவைத்துள்ளன. எனினும் முன்னைய ஆட்சியாளர்களை விட "இவர்கள்" பரவாயில்லை என்ற கருத்தும் தொடர்கின்றது.

எனினும் நாம் இம்மாதக் தேசக் குரலில் அநுர ஆட்சி தொடர்பாக கேள்விகளை முன்வைத்தமைக்கு காரணம் பலவுள்ளன. அநுரவின் தேசிய மக்கள் கட்சியின் சார்பில் வடக்கிலிருந்து தேர்நதெடுக்கப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளில் காணப்படும் தளர்ச்சி மற்றும் ஆற்றல் குறைந்த தன்மை ஆகியவை தமிழ் மக்களுக்கு பல கேள்விகளை தந்து நின்றாலும். முன்னைய ஆட்சியாளர்களான கொடிதான மகிந்த, கோட்டாபாய மற்றும் ரணில் ஆகியோர் இணைந்த கூட்டணி இலங்கையின் ஆட்சி பீடத்தை கைப்பற்றுவதிலும் பார்க்க அநுரவின் அரசாங்கமே இருப்பது மேல் என்ற எண்ணம் உள்ளவர்களும் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ளார்கள் என்பதையும் நாம் காண்கின்றோம்.

இவ்வாறிருக்கையில் தற்போதைய ஜனாதிபதி அநுர குமாரவின் ஆட்சியில் எண்ணற்ற குறைகள் தோன்றினாலும் நாட்டிற்கு நாசங்களை விளைவித்த மகிந்த, கோட்டாபாய, ரணில் மற்றும் மைத்திரி போன்ற கயவர்களின் கைகளில் மீண்டும் ஆட்சி அதிகாரம் சென்றால் இலங்கையைச் சுற்றியுள்ள கடலைக் கூட அவர்கள் சூறையாடிவிடுவார்கள் என்ற எச்சரிக்கையை நாம் இந்த இடம் பதிவு செய்கின்றோம்!

## கனடா அராலி கலாச்சார அமைப்பின் Dinner Dancer 2025

Araly Cultural Organization Canada Dinner Dance 2025

The annual Dinner Dance of the Araly Cultural Organization Canada will be held on Saturday May 31, 2025 from 6 pm onwards at the Markham Convention Centre at Markham & McNicoll in Scarborough. We request the presence of all the members, village people and the well-wishers.
For further details contact:
Ruba 416-558-6015 Selvaratnam 647-828-4614
Uruthiran 647-294-6863

# நல்லூர் புனித பூமியில் திறக்கப்பட்ட பரிஸ்டாவின் கிளைக்கு எதிர்ப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



சைவத் தமிழர்களின் ஆலயம் அமைந்துள்ள புனித பூமியில் திறக்கப்பட்டுள்ள சொகுசு உணவகத்தின் பெயர்ப் பலகையை அகற்ற யாழ்ப்பாண மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில், நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அருகில் புதிதாக நிறுவப்பட்ட பரிஸ்டா (BARISTA) உணவகத்தின் பெயர்ப் பலகையை, உள்ளூர்வாசிகளின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து, மே 22ஆம் திகதி அகற்ற யாழ்ப்பாண மாநகர சபை நடவடிக்கை எடுத்தது.

யாழ்ப்பாண மாநகர சபையில் முறையான அனுமதிப் பெறுமாறு கூறி, அதன் பெயர்ப்பலகை அகற்றப்பட்ட பரிஸ்டா கோப்பி கடையின் புதிய கிளை, யாழ்ப்பாண மாநகர சபைக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ளதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

திலுப பதிரண பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும், பணிப்பாளராகவும் இருக்கும் இலங்கையில் 60 கிளைகளைக் கொண்டுள்ள, பரிஸ்டா கோப்பி லங்கா பிரைவேட் லிமிடெட்டின் (Barista Coffee Lanka Pvt Ltd), பொதுமக்களின் எதிர்ப்பிற்கு உள்ளான பருத்தித்துறை வீதி கிளைக்கு மேலதிகமாக, யாழ்ப்பாண வைத்தியசாலை வீதியில் மற்றுமொரு கிளையும் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் நல்லூர் சிவகுரு ஆசிரமத்தின் தவத்திரு வேலன் சுவாமிகள் மற்றும் சைவ சிவ பக்தர்களால் யாழ்ப்பாணம் நல்லூர் கோவிலுக்கு அருகாமையில், யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் அமைக்கப்பட்டுள்ள பரிஸ்டா உணவகத்தை உடனடியாக அகற்றுமாறு கோரி கடந்த மே மாதம் 20 ஆம் திகதி பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

மே 20 அன்று நல்லூர் கோயில் முன் எதிர்ப்புப் பேரணியை ஆரம்பித்த சைவத் தமிழர்கள், யாழ்ப்பாணம் மாநகர சபை வரை சென்று இந்த உணவகத்தை உடனடியாக அகற்றக் கோரினர். மே 21 அன்று, நூற்றுக்கணக்கான கையெழுத்துக்கள் கொண்ட கடிதத்தை மநாகர ஆணையாளரிடம் ஒப்படைப்பதன் மூலம் அதே கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தினர்.

இந்த உணவகம் இன, மத சகவாழ்வுக்கு தடையாக இருப்பதாக யாழ்ப்பாணம் நல்லூர் சிவகுரு ஆசிரமத்தின் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவிக்கின்றார்.

"நல்லூர் புனித பூமியில் அனுமதியின்றி சட்டவிரோதமாக அமைக்கப் பட்டுள்ள இந்த அசைவ உணவகத்தை மூடக் கோரி மாநகர ஆணையாளரிடம் கடிதம் சமர்ப்பித்துள்ளோம். தெற்கில் ஒரு பல்தேசிய அசைவ உணவகத்தின் கிளையை நிறுவுவதன் மூலம் இன மற்றும் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் ஒரு சட்டவிரோத செயலாகவே நல்லூர் சமூகத்தினராகிய நாங்கள் கருதுகின்றோம்."

போராட்டக்காரர்களால் மாநகர ஆணையாளரிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், மாவட்ட செயலாளர், நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் மற்றும் இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் மிகப்பெரிய கோப்பி உணவகச் சங்கிலிகளில் ஒன்றான பரிஸ்டாவின் இரண்டாவது கிளை, மே 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபையின் முறையான அனுமதியின்றி அந்த இடத்தில் உணவகம் திறக்கப்பட்டுள்ளதாக உள்ளூர்வாசிகள் குற்றம் சாட்டுகின்றனர்.


யாழ்ப்பாணம் நல்லூர் சிவகுரு ஆசிரமத்தைச் சேர்ந்த தவத்திரு வேலன் சுவாமி, மே 13 ஆம் திகதி யாழ்ப்பாண நகராட்சி அதிகாரிகள் உணவக நிர்வாகத்திற்கு வாய்மொழியாக உணவகத்தை உடனடியாக வளாகத்திலிருந்து அகற்றுமாறு தெரிவித்ததாகக் கூறுகிறார், அதே நாளில் அதே கோரிக்கையை நிறுவன அதிகாரிகளுக்கும் மின்னஞ்சல் மூலம் தான் அனுப்பியதாகவும் கூறுகிறார்.



யாழ்ப்பாணம் நல்லூர் கோயிலில் இருந்து சுமார் 400 மீற்றர் தொலைவில் இந்த உணவகம் நிறுவப் பட்டுள்ளதாகவும், அந்த பிரதேசம் கோயிலின் புனித பூமியில் உள்ளடங்கும் பிரதேசம் எனவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# ஆசியாவின் தலைசிறந்த 100 விஞ்ஞானிகளில் ஒருவராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் தெரிவு!






யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பௌதிகவியல் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் சிங்கப்பூரிலிருந்து வெளியிடப்படும் முன்னணி "ஆசிய விஞ்ஞானி" எனும் சஞ்சிகை இன் "ஆசிய விஞ்ஞானி - 100 பட்டியலில்" இடம் பெற்றுள்ளார்.

ஆண்டுதோறும் வெளியிடப்படும் இந்த பட்டியல், ஆசியாவிலுள்ள தலைசிறந்த விஞ்ஞானிகளின் விசேட சாதனைகளை அங்கீகரிக்கிறது. பொதுவாக, இந்த பட்டியலில் தேர்வு செய்யப்படும் தலைசிறந்த விஞ்ஞானிகள், அவர்களின் தரமான ஆய்வு வெளியீட்டுக்கப்பால் தேசிய அல்லது சர்வதேச விருதை பெற்றிருக்க வேண்டும். பதிலாக முக்கியமான விஞ்ஞான கண்டுபிடிப்பொன்றை மேற்கொண்டிருக்க வேண்டும் அல்லது கல்விசார் அல்லது தொழில்சார் தலைமைத்துவத்தை வழங்கியிருக்க வேண்டும்.

விஞ்ஞானப் பீடாதிபதியாக கடந்த ஐந்து ஆண்டுகள் பணியாற்றிவரும் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் அவர்கள் பல தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார். இவற்றில், துணைவேந்தர்கள் இயக்குனர்கள் சபையினரால் வழங்கப்பட்ட பௌதிக விஞ்ஞானத்திற்கான அதி சிறந்த இள ஆராய்ச்சியாளர் விருது, தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்பட்ட இள விஞ்ஞானி விருது, மற்றும் தேசிய ஆராய்ச்சி பேரவை பல தடவைகள் வழங்கிய சிறந்த ஆராய்ச்சி வெளியீட்டுகளுக்கான ஜனாதிபதி விருதுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவரின் ஆய்வுக் கட்டுரைகள் உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகளால் அதிகளவு மேற்கோளிடப்பட்டு வருகின்றன.

சர்வதேசத்தரத்திலான இவரது ஆய்வுச் செயற்பாடுகளினால் ஆசியாவின் தலைசிறந்த 100 விஞ்ஞானிகளில் ஒருவராக தெரிவாகியுள்ள சிரேஷ்ட பௌதிகவியல் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு மட்டுமல்லாது யாழ் மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

# ஆளும் கட்சியின் அதிகாரம் காணிகளை பந்தாடுவதற்கும் உத்தியோகத்தர்களை அச்சறுத்தவும் பிரயோகிக்கப்படக்கூடாது – பூநகரி சம்பவம் குறித்த முன்னாள் தவிசாளர் நிரோஷ்

உள்ளூராட்சி மன்றங்களில் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை திட்டமிட்டு திரிவுபடுத்தும் வகையில் செயற்பட்டு மக்களை பிழையாக வழிநடத்தி அரச உத்தியோக்தரின் தொழில் சுதந்திரத்திலும் செயற்பாடுகளிலும் தடை ஏற்படுத்தவதை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில், அப் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்ற நடைமுறைகளுக்கும் சட்டத்திற்கும் அமைவாக செயற்பட்டதனை திசை திருப்பும் வகையில் ஆளுங்கட்சி பிரதேச அரசியல்வாதிகள் கத்தரிக்கப்பட்ட வீடியோ பதிவு ஒன்றை தயாரித்துள்ளனர். அதனை யாழ் - கிளிநொச்சி மாவட்ட ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் அவர்கள் தனது முகப்புத்தகத்தில் வெளியிட்டுள்ளார். இது பொறுப்புமிக்க பதவியில் இருந்து கொண்டு அரச உத்தியோகத்தர்களை அச்சுறுத்தும் அடாவடித்தனமாகும்.

அடிப்படையில் இவ்விடயம் குறித்த ஆராய்கையில், ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரின் அனுசரணையில் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட அரசியல் பிரமுகர் ஒருவர் சட்ட திட்டங்களுக்கு முரணாக, பெறுமதியான வீதியோரக் காணிகளை தனக்கு தேவையானவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இதற்கு அரசாங்க ஒத்துழைப்பு காணப்பட்டுள்ளது. இங்கு மீறப்படும் உள்ளூராட்சி சட்டவிதிகள் தொடர்பில் உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை புறந்தள்ளி அரசியல் அதிகார மமதையில் குறித்த எதிர்த்தரப்பினர் உத்தியோகத்தர்கள் மற்றும் அச் சபையின் பொறுப்பதிகாரி, சபையின் தீர்மானங்களை தற்போது மேற்கொள்ளத்தக்க செயலாளர் மீது பலவந்தத்தினை பிரயோகித்துள்ளனர். பலவந்தத்திற்கு இடமளிக்காத உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி சட்டங்களின் அடிப்படையில் சட்டவிரோத கடைகளை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தமது காணி அபகரிப்பு நோக்கம் நிறைவேறுவதற்கு உள்ளூராட்சி மன்றம் தடையாகவுள்ள நிலையில் அங்கு பிரசன்னமாகியிருந்த உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள் மீது அவதூறு மற்றும் அச்சுறுத்தல் பிரயோகிப்புக்கள் நடைபெற்றுள்ளன. மேலும் தாக்குதல் மேற்கொள்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றினை எல்லாம் மேற்கொண்டுவிட்டு தமது வசதிக்கு ஏற்றால் போல் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் அவர்கள் கத்தரிக்கப்பட்ட வீடியோ ஒன்றை தனது முகநூலில் வெளியிட்டுள்ளார். இதனால் உள்ளூராட்சி மன்ற பணியாளர்களின் கௌரவம் மற்றும் தொழிற்சுதந்திரம் அரசாங்க அதிகாரத்தினால் மீறப்பட்டுள்ளது.




இப்படியான அரசாங்கத்தின் அரசியல் அணுகுமுறைகள் ஜனநாயக விரோதமானவை என்பதுடன் சட்டம் ஒழுங்கிற்கும் அப்பாற்பட்டவை. பிரதேச சபைகளின் உத்தியோகத்தர்களின் தொழிற்சுதந்திரத்தினையும் அவர்களது உரிமைகளையும் மீறுவனவாகும். அரசியல் தலையீடுகள் இன்றி நீதியான முறையில் உத்தியோகத்தர்கள் சேவையாற்றுவதற்கான அகப் புறச் சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பள்ள அரசாங்கத் தரப்பு சற்றேனும் அரசியல் தர்மத்திற்கு இடமளிக்காது மக்கள் விரோத நடவடிக்கைளில் ஈடுபடுவதையே இது காட்டுகின்றது. நல்லாட்சிக்கான தத்துவம் தொடர்பாக ஆளுங்கட்சி கவனம் செலுத்த வேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றங்களின் சுயாதீனம் அரச அதிகாரங்களால் பாதிக்கப்படும் போது அவற்றினை நாம் பார்த்திருக்க முடியாது என்றார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பு நகரில் சட்டத்தரணிக்கு அதிர்ச்சி கொடுத்த "புழு சோற்று பாசல்" – மனித பாவனைக்கு உதவாத உணவு தயாரிக்கும் பொருட்களும் மீட்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகரில் சாப்பாட்டு கடை ஒன்றில் வாங்கிய மதிய உணவான சோற்று பாசலில் புழு உள்ளதை கண்ட சட்டத்தரணி ஒருவர் சுகாதார அதிகாரிகளுக்கு 24ம் திகதி அன்று சனிக்கிழமை முறைப்பாடு செய்ததையடுத்து உடனடியாக குறித்த கடையை சோதனையிட்டு அங்கு மனித பாவனைக்கு உதவாத உணவு தயாரிக்கும் பொருட்களை மீட்டதுடன் கடை உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு பதிவு செய்யவுள்ளதாக பொது சுகாதரா பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

குறித்த கடையில் வழமையாக மதிய உணவான சோற்று பாசல் சட்டக்தரணி ஒருவர் வாங்கி சாப்பிட்டு வந்த நிலையில் சம்பவதினமான இன்று சனிக்கிழமை பகல் 2.00 மணியளலில் மதிய உணவான சோற்று பாசலை வாங்கி



கொண்டு தனது காரியாலயத்தில் வைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்த போது அதில் உள்ள கரட் கறியில் புழு ஓடுவதை கண்டு கொண்டார்.

இதனையடுத்து கறுத்த புழு சாப்பாட்டு பாசலுடன் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயத்துக்கு சென்று குறித்த கடைக்கு எதிராக முறைப்பாடு செய்தார். இதனையடுத்து உடனடியாகா பொது சுகாதார பரிசோதகர்கள் குறித்த கடையை முற்றுகையிட்டு சோதனையையடுத்து அங்கு மனித பாவனைக்கு உதவாத உணவு மற்றும் சிற்றுண்டிகள் தயாரிக்கும் பல உணவு பொருட்களை குளிரூட்டியில் இருந்து மீட்டனர்.



இவ்வாறு மீட்டகப்பட்ட மனித பாவனைக்கு உதவாத பொருட்களை கொண்டு உணவு தயாரிக்க வைத்திருந்தமை மற்றும் மதிய உணவான சோற்று பாசல் புழு இருந்தமை தொடர்பாக இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கு எதிரா தனித்தனியாக கடை உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (27) வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த காலங்களில் குறித்த உணவு விற்பனை செய்துவரும் கடையில் இருந்து மனித பாவனைக்கு உதவாத உணவுகள் தயாரித்தமை மற்றும் உணவு தயாரிப்பதற்காக பொருட்களை வைத்திருந்தமை சுகாதார சீர்கேடாக உணவுகளை கையாண்டமை போன்ற பல குற்றச்சாட்டின் கீழ் பொது சுகாதார பரிசோதகர்கள் அதன் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் பல வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அவரை தண்டப் பணம் செலுத்துமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்து தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.



# ஐக்கிய மக்கள் சக்தி கட்சியி மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் மற்றும் மகளிர் அணிச் செயலாளர் ஆகியோர் இராஜனாமா!

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் அருள்ராஜ் ஜெயகாந்தன் மற்றும் மாவட்ட மகளிர் அணி செயலாளர் திருமதி. ரவீந்திரநாதன் கண்ணகி ஆகிய இருவரும் கட்சியில் இருந்து 27ம் திகதியன்று செவ்வாய்க்கிழமை இராஜனாமா செய்துள்ளதாக அறிவித்தனர்.

மட்டக்களப்பு வொய்ஸ் ஒப் மீடியா கற்கை நெறி நிலையத்தில் அன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் இந்த இராஜனமா செய்யும் அறிவிப்பு விடுத்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைந்து கடந்த 5 வருடங்களாக கட்சிக்காக செயற்பட்டதுடன் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாநகர சபைக்கு கட்சி சார்பில் போட்டியிட்டோம் இதன் போது போனஸ் ஆசனமாக இரண்டு ஆசனம் கிடைத்தது.

இந்த இரண்டு ஆசனங்களை மட்டக்களப்பு நகரில் ஒருவருக்கும் மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தில் முஸ்லீம் பெண் ஒருவருக்கும் இந்த ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளது. எனவே கட்சிக்காக உழைத்த பலர் இருக்கின்ற நிலையில் ஒரு வருடத்துக்கு ஒருவர் என மாற்றி ஆசன ஒதுக்கீட்டை செய்யுமாறு கட்சியிடம் கோரினோம் கட்சி அதனை செவிமடுக்க வில்லை.

இந்த நிலையில் மாநகர சபை தேர்தலில் 98 வீதம் தமிழ் வாக்குகளை பெற்று கொடுத்த நிலையில் எங்களுக்காக அளிக்கப்பட்ட வாக்குகளை கொண்டு முஸ்லீம் பெண் ஒருவருக்கு போனஸ் ஆசனம் வழங்குவதை வாக்களித்த தமிழ் மக்கள் குற்றச்சாட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

"எனவே இது தொடர்பாக கட்சியின் கவனத்துக்கு கொண்டு வந்தோம் ஆனால் அவர்கள் அதற்கான தீர்வை தரவில்லை எனவே இவ்வாறு தீர்வை வழங்காத நிலையில் கட்சியில் இருந்து நானும் மகளீர் அணி செயலாளரும் இராஜனாமா செய்வதகாத தீர்மானம் எடுத்து இராஜனாமா கடிதத்தை கட்சிக்கு அனுப்பியுள்ளோம்" என்றார்.



# பல்வேறு காரணங்களால், ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்த முடியவில்லையே என்ற ஏக்கத்தோடே ஒவ்வொரு தேர்தலையும் கடக்கின்றார்கள்?

இலங்கை செய்திகள்
Sri Lanka News

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் முடிவுகள் வெளியாகிக்கொண்டிருந்த மே 7ஆம் திகதி காலை வேளையில், ஒரு வேலை நிமித்தம் மருதானை செல்வதற்கு நான் பேருந்தில் ஏறியபோது, என்னுடைய சக ஊடக நண்பனைக் கண்டேன். "ஹாய் மச்சான். ஓட்டு போட ஊருக்கு போய்ட்டு எப்ப வந்த" என்றேன். "எங்க மச்சான் ஊருக்கு போறது, வேல. ஓட்டுப் போட போகல, அநியாயம் மச்சான் ஒரு ஓட்டு. லாஸ்டா நடந்த பிரசிடன்ட் எலக்சனுக்கும் அப்படித்தான் லீவு கிடைக்கல" என அவன் சலித்துக் கொண்டான். "நானும்தான் மச்சான், இந்த எலக்சனுக்கு ஓட்டுப்போட போகல, டியுடி" என சொல்லிக்கொண்டே மருதானை பொலிஸ் நிலையத்தை அண்மித்த தரிப்பிடத்தில், பேருந்திலிருந்து இறங்கி வீதியை கடந்து சென்றேன்.

நாட்டில் இடம்பெறும் ஒவ்வொரு தேர்தலிலும் கட்டாயக் கடமை, விடுமுறை கிடைக்காமை, விடுமுறை கிடைத்தும் தூர இடங்களுக்கு பயணிக்க முடியாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்துவதில்லை. தன்னுடைய வாக்குரிமையை பயன்படுத்த முடியவில்லையே என்ற ஏக்கத்தை, என்னைப்போல், என் நண்பனைப்போல் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்திகொண்டுதான் இருக்கின்றார்கள். அடுத்தத் தேர்தலிலாவது தன்னுடைய அந்த வாக்கினை பதிவு செய்ய வேண்டுமென நினைக்கின்றார்கள். எனினும் அந்த வாய்ப்பு ஏதோ ஒரு காரணத்தினால் தொடர்ந்து கிடைக்காமலேயே போகின்றது.

இலங்கையராகிய எமக்கு பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலேயே (1931 - டொனமூர் யாப்பு) சர்வசன வாக்குரிமை கிடைத்துவிட்டது. (இடையில் இலங்கையை ஆண்ட அரசாங்களின் அரசியல் தீர்மானங்களால் ஒரு குறிப்பிட்ட இன மக்களுக்கு சிலகாலம் வாக்குரிமை பறிக்கப்பட்டதெல்லாம் வேறு கதை) சர்வசன வாக்குரிமை கிடைத்து நூறு வருட நிறைவை அண்மித்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால் அந்த வாக்குரிமையை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு அனைத்து இலங்கை மக்களுக்கும் கிடைக்கின்றதா? அந்த வாய்ப்பை அரசு உறுதிப்படுத்தியுள்ளதா? என்றால், நிச்சியமாக இல்லை. ஏதோ ஒரு காரணத்திற்காக வாக்குரிமை இருந்தும், வாக்களிக்கும் விருப்பம் இருந்தும், வாக்களிப்பதற்கான வாய்ப்பின்றி ஆயிரக்கணக்கான வாக்குகள் ஒவ்வொரு தேர்தலிலும் அளிக்கப்படாமலேயே போகின்றன. இவற்றுக்கான காரணங்களையும், அதற்கான தீர்வுகளையும் முன்வைக்க முனைகிறது இந்த கட்டுரை.

## வாக்களிக்கும் வாய்ப்பை இழப்பவர்கள்

அத்தியாவசிய கடமையில் ஈடுபடும் அரச ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் (பணிக்குச் செல்வோர்), வர்த்தக வலையங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றுவோர், நீண்டநாள் மீன்பிடி தொழிலாளர்கள், வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகள், சிறைக்கைதிகள், வைத்தியர்கள், தாதியர் உள்ளிட்ட வைத்தியத்துறைசார் அதிகாரிகள், ஊழியர்கள், தேர்தல் கடமையில் ஈடுபடும் ஊடகவியலாளர்கள், போக்குவரத்து வசதியை பெற்றுக்கொள்ள முடியாத மாற்றுத்திறனாளிகள், அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர், தூரப் பயணங்களில் ஈடுபடும் சாரதிகள் மற்றும் பலர்.

## ஒரு வேட்பாளரின் வறுத்தம்

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டம், வலப்பனை பிரதேச சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட குமார் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) இந்தத் தேர்தலில் தன்னுடைய தோல்விக்கு, பலர் வாக்களிக்காமல் போனமையே காரணம் என்கிறார். "என்னுடைய பல நண்பர்கள் கொழும்பு, கண்டி இப்படி பல இடங்கள்ல வேலை செய்றாங்க. சித்திரைக்கு (சித்திரை வருடப் பிறப்பு) ஊருக்கு வந்துட்டு போனதால, அவங்களுக்கு ஓட்டுப்போட லீவு கிடைக்கல. குறைந்தது இந்த பிரதேசத்துல எனக்கு தெரிஞ்ச ஒரு 100 பேராவது ஓட்டுபோடல. அந்த ஓட்டு வந்துருந்தா நான் கண்டிப்பா வின் பண்ணிருப்பேன்." என்கிறார் குமார்.

உண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வலப்பனைத் தேர்தல் தொகுதியில் 91,962 வாக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன. எனினும் 57,170 வாக்குகள் மாத்திரமே அளிக்கப்பட்டிருந்தன. 34,792 வாக்குகள் ஏதோ ஒரு காரணத்திற்காக அளிக்கப்படவில்லை. உண்மையில் இந்த தேர்தல் சிறிய ஒரு தேர்தல் என்பதால் பலருக்கு வாக்களிக்கும் விருப்பம் இருந்திருக்காது என்பது பொதுவான கருத்து, எனினும் அதனைத் தாண்டி வேட்பாளர் குமார் சொன்னதுபோல், வாக்களிக்கும் விருப்பம் இருந்தும் அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டவர்கள்/ கிடைக்காதவர்கள் ஏராளம்.

## "எதுக்கு சும்மா"

கடந்த கால தேர்தல் வெற்றிகளின் சதவீதத்தையும், வாக்களிக்காதவர்களின் சதவீதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இதன் பாரதூரம் தெரியவரும். ஒருவேளை பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் அனைத்தும் செலுத்தப்பட்டிருந்தால், பெறுபேறுகள் வேறு வகையில் அமைந்திருப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன என்கிறார் ஊடகவியலாளர் கலாவர்சினி கனகரட்ணம்.

"வாக்களிப்பின் தாற்பரியம் பற்றி உணராத நிலையே ஒட்டுமொத்தமாக காணப்படுகின்றது. எமது ஒரு வாக்கினால் எதுவும் மாறப்போவதில்லை என்ற மனநிலை பலர் மத்தியில் காணப்படுகின்றது. கடந்த ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் நாடு முழுவதும் வாக்காளர் கல்வி செயலமர்வுகளை நடத்தியிருந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான பல விடயங்களை அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. இது மிகப்பெரிய தவறு. இதற்கு சிறந்த உதாரணம், 2011 உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தின் கொலன்ன பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுக்கொண்ட வாக்குகள் 10,075, ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொண்ட வாக்குகள் 10,074. இங்கு ஒரேயொரு வாக்குதான் வித்தியாசம். ஆனால், இந்த வித்தியாசம் ஏற்படுத்திய மாற்றத்தை பார்த்தால், மூன்று ஆசனங்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 6 ஆசனங்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 3 ஆசனங்களும் பகிரப்பட்டன. இவ்வாறு எவ்வளவோ உதாரணங்கள் உள்ளன. ஆனால் இவ்வாறான விடயங்கள் மக்கள்மயப்படுத்தப்படுவது குறைவு. தமது தெரிவுகள் சரியாக அமையவேண்டுமென நினைக்கின்றார்களே தவிர, அந்த தெரிவுகளுக்கான ஜனநாயக கடமை சரியாக நிறைவேற்றப்படுகின்றதா என்பது குறித்து சிந்திக்க தவறிவிடுகின்றனர்." என்கிறார் அவர்.

உண்மையில் வாய்ப்பு கிடைக்காமல் செலுத்தப்படாத வாக்குகளைவிட வாய்ப்பிருந்தும் "எதுக்கு சும்மா" என வாக்களிப்பதை சிறிய விடயமாகக் கருதி கடந்துப் போகின்றவர்கள் ஏராளம்.

## வாக்களிப்பு நிலையமும் தூரமும்

வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்காளர்களுக்கும் இடையிலான தூரம் அதிகமாக இருக்கின்ற போது வாக்காளர்கள் சென்று வாக்களிப்பதை தவிர்க்கும் சம்பவங்களும் பதிவாகின்றன. குறிப்பாக மலையகத்தின் பலப் பிரதேசங்களில் அமைக்கப்படும் வாக்களிப்பு நிலையங்களுக்கு நீண்டதூரம் நடந்து சென்று வாக்களிக்க வேண்டிய நிலைமை காணப்படுவதாலும் பலர் வாக்களிப்பதில்லை. கட்டுரையாளனாக இதுத் தொடர்பில் நான் வினவியபோது, படிகளில் ஏறி இறங்கி நடந்துச் செல்ல மூத்த பிரஜைகள் பலர் விரும்புவதில்லை அல்லது அவர்களால் முடிவதில்லை என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. முச்சக்கர வண்டி உள்ளிட்ட போக்குவரத்து ஏற்பாடுகளுக்கு அவர்களிடம் போதிய பணம் இன்மையும் அவர்கள் வாக்களிப்பை தவிர்ப்பதற்கு காரணமாக அமைகின்றது.

## நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வாக்களிப்பு நிலைமை

பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - 17,156,338
அளிக்கப்பட்ட வாக்குகள் - 10,616,087 (61.88%)
அளிக்கப்படாத வாக்குகள் - 6,540,251 (38.12%)

## விடுமுறை

மே 6ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. இதற்கமைய ஊழியர் ஒருவர் வாக்களிப்பதற்காக விடுமுறை கோரினால், அது தொடர்பாக பணிக்கு அமர்த்துபவர், ஊழியருக்கு போதுமானதாக கருதப்படும் குறைந்தபட்சம் இரண்டு மணி நேர பணி விடுமுறையை ஊதியத்துடன் வழங்க வேண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாக்களிக்க தகுதி பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் அவர்களது நிறுவனங்கள் விடுமுறை வழங்க வேண்டும் எனவும் இவ்வாறு வழங்கப்படும் விடுமுறை காலம், தற்காலிக ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விசேட விடுமுறையாக கருதப்பட வேண்டும் எனவும், இது ஊழியர்களின் வழக்கமான விடுமுறை உரிமைகளுக்கு வெளியில் இருக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு தொழிலாளருக்கும் வாக்களிப்பதற்காக வழங்கப்படும் விடுமுறை காலம், அவரது பணியிடம் மற்றும் வாக்களிப்பு நிலையத்திற்கு இடையிலான தூரத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தூரம், 40 கிலோமீற்றர் அல்லது அதற்குக் குறைவாயின் அரை நாள் (1/2) 40 - 100 கிலோமீற்றருக்கு இடைப்பட்டதெனில் ஒரு நாள் (1), 100 - 150 கிலோமீற்றருக்கு இடைப்பட்டதெனில் ஒன்றரை 11/2 நாட்கள், 150 கிலோமீற்றருக்கும் அதிகமாயின் இரு நாட்கள் விடுமுறை வழங்கப்பட வேண்டுமென அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த நடைமுறையை எத்தனை நிறுவனங்கள் பின்பற்றின? என்பது கேள்விக்குறியே.

## தேர்தல் ஆணைக்குழு முன்வைக்கும் தீர்வு

இலங்கையர்கள் அனைவரும் தமது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வாய்ப்பளிக்க வேண்டுமென்பதை இலக்காகக் கொண்டே தேர்தல்கள் ஆணைக்குழு செயற்படுவதாக தெரிவிக்கும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (நிர்வாகம்) எஸ். அச்சுதன், இந்த விடயத்தில் நாடாளுமன்றமே இறுதி தீர்மானத்தை எடுக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டுகின்றார்.

"நாங்கள் நாடாளுமன்ற தெரிவுக் குழுக்களுக்கு நாங்கள் எங்களுடைய முன்மொழிவுகளை வழங்கியுள்ளோம். இதில் இரண்டு முன்மொழிவுகள் காணப்படுகின்றன. இதில் முதலாவது முற்கூட்டிய வாக்குப்பதிவு (Early voting) முற்கூட்டிய வாக்குப் பதிவு எனக் குறிப்பிடுகையில் அதில் நாங்கள் ஊடகவியலாளர்கள், அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள், நோயாளிகள், சிறையில் இருப்பவர்கள் என அனைரையும் அதில் இணைப்பது பற்றி முன்மொழிவை முன்வைத்திருக்கின்றோம். அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு, சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அதனை கொண்டுபோய் பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் சட்டமாக்குவது மட்டும்தான் எஞ்சியுள்ள பணி." என்கிறார் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் அச்சுதன்.

பயோமெட்ரிக் அடையாள அட்டையை பயன்படுத்தி இலங்கையருக்கு முற்கூட்டிய வாக்குப் பதிவு வாய்ப்பை வழங்குவதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் இரண்டாவதும் இறுதியுமான இலக்கு எனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (நிர்வாகம்) எஸ். அச்சுதன் மேலும் குறிப்பிடுகின்றார்.

"அடுத்தகட்டமாக இலங்கையில் பயோமெட்ரிக் அடையாள அட்டையை (Biometric identity card) உருவாக்குவது குறித்த முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. நீண்டகாலகவே இந்த முயற்சி இடம்பெறுகிறது. அந்த ஒரு நிலைமை ஏற்படுமாயின் வாக்காளர் பட்டியலையும் இந்த பயோமெட்ரிக் அடையாள அட்டையுடன் இணைக்கும்போது எந்தவொரு மாவட்டத்திலும் முற்கூட்டி வாக்களிப்பது (Early voting) இலகுவாக காரியமாக மாறும். பொதுவாக நாங்கள் வகைப்படுத்தாமல் எந்தவொரு வாக்காளருக்கும் முற்கூட்டிய வாக்களிப்பு வாய்ப்பை வழங்குவது இகுவான விடயமாக அமையும். ஆகவே தேர்தல் ஆணைக்குழுவின் இறுதி இலக்கு அதுதான். அதற்காக தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருக்கின்றோம்.

மேலும் கடந்த வருடம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முடிவுகளுக்கு அமைய தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவான விடயத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்த தேர்தல்கள் ஆணைக்குழு, அந்த சந்தர்ப்பத்தில் அனுர குமார திசாநாயக்கவிடம் விடுத்த வேண்டுகோள் மற்றும் அதற்கு ஜனாதிபதியாக அவர் வழங்கிய வாக்குறுதியையும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஞாபகப்படுத்தினார்.

*(தொடர்ச்சி 8 பக்கம்)*

# தேர்தலில் வெற்றி பெற்றுள்ள உறுப்பினர்களாகிய நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமை எடுக்கும் முடிவுக்கு உறுதுணையாக இருப்போம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

## மன்னாரில் வெற்றி பெற்ற உறுப்பினர்கள் ஒருமித்து தெரிவிப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (27-05-2025)



மன்னார் மாவட்டத்தில் உள்ளுராட்சி சபைகளை அமைக்கின்ற போது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமை எடுக்கும் முடிவுக்கு தேர்தலில் வெற்றி பெற்றுள்ள உறுப்பினர்களாகிய நாங்கள் உறுதுணையாக இருப்போம் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சார்பாக மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாக மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கிடையில் 27ம் திகதி அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மதியம் மன்னாரில் அமைந்துள்ள தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ அலுவலகத்தில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலை தொடர்ந்து அக்கட்சியின் மாவட்ட அமைப்பாளர் டானியல் வசந்தன் தலைமையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளுராட்சி சபைகளை யாருடன் இணைந்து ஆட்சி அமைப்பது.யாருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவான அனைத்து உறுப்பினர்களும் இணைந்து கலந்துரையாடல்களை மேற்கொண்டோம்.

அந்த வகையில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எவ்வாறான நடவடிக்கைகளை மேற் கொள்ளுகின்றதோ, அந்த முடிவுக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவை வழங்குவதாக தீர்மானித்துள்ளோம். தேர்தல் காலங்களில் மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கி இருந்தோம். தமிழ் தேசிய கட்சிகளுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளை ஆட்சி அமைப்போம் என்று.

இன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ள அனைத்து உறுப்பினர்களும் அவ்வாறான ஒரு நிலைப்பாட்டில் இருக்கின்றோம். அந்த நிலைப்பாட்டில் இருந்து நாங்கள் ஒருபோதும் மாறிச் செல்லவில்லை..மாறி போகவும் மாட்டோம்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் தலைமை சரியான முடிவை இத்தருனத்தில் எடுக்கும் என நாங்கள் நினைக்கிறோம். அனைத்து தமிழ் மாவட்டங்களிலும் தமிழ் தேசிய பரப்பில் இருக்கின்ற கட்சிகள் ஆட்சியை அமைக்க வேண்டும். அதற்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு. மன்னார் மாவட்டத்தில் அனைத்து சபைகளில் இருந்தும் 13 உறுப்பினர்களை பெற்றுள்ளோம். தமிழ் தேசிய பரப்பில் மன்னார் மாவட்டத்தில் 2வது பெரிய கட்சியாக நாங்கள் இருக்கிறோம்.

ஆட்சி அமைக்கின்ற போது சரியான பங்கு எமக்கும் கிடைக்க வேண்டும் என்பதே எமது உறுப்பினர்களின் கோரிக்கையாக உள்ளது. ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கு வாக்குகளை வழங்கிய அனைத்து மக்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் தேசிய கட்சிகளுடன் இணைந்து நாங்கள் ஆட்சியை அமைப்போம்.சரியான ஊழலற்ற நிர்வாகத்தை அமைந்து செயல் படுவோம். கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெற்ற ஊழல்களை நாங்கள் வெளியில் கொண்டு வருவோம்.

மேலும் தேர்தல் காலங்களில் நாங்கள் மக்களுக்கு தெரிவித்தோம். மத்திய அரசாங்கத்தை ஆதரிக்காதீர்கள். அவர்கள் மக்களை பாதிக்கும் திட்டங்களை எமது மண்ணில் கொண்டு வருவார்கள் என்று நாங்கள் பல முறை எடுத்துக் கூறினோம்.

அதனையும் மீறி சில மக்கள் தமது அறியாமையினால் அவர்களுக்கு வாக்களித்தனர். அதன் விளைவாக இன்று இந்த அரசாங்கம் வளங்களை கொள்ளை அடிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

நாங்கள் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தும் அதை பொருட்படுத்தவில்லை. அதன் பலனை இன்று அனைவரும் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம்.

தமிழ் தேசிய கட்சிகள் இணைந்து மன்னார் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றும் பட்சத்தில் மாவட்டத்தில் இடம்பெற அமுல் செய்யப்பட முயற்சிக்கும் மக்களுக்கு பாதகமான திட்டங்களை எம்மால் தடுத்து நிறுத்த முடியும்.

எனவே சுய தேவைகளுக்காக மற்ற கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்கும் எண்ணத்தை கைவிட்டு, மக்களின் நலன் கருதியும் மாவட்டத்தின் நலன் கருதியும் தமிழ் தேசிய கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்க வேண்டும்.

நாங்களும் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றோம். தலைமை எடுக்கும் முடிவுக்கு நாங்கள் உறுதுணையாக நிற்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.


# Thana Insurance Inc

### T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

### PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

### NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

### 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100%
ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இயற்கை வளங்கள் இருந்தும் அனல் மின் உற்பத்தியிடம் நாடு சரணாகதியாயிருப்பதே மின் கட்டணம் உயர்வுக்கு காரணம்

## பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவுக்கு அனுசியா ஜெயகாந்த் சுட்டிக்காட்டு!

சுற்றிவர கடலிருந்தும் உப்பு இறக்குமதி செய்வதைப் போலவே நாடுமுழுதும் நீர், காற்று, சூரிய ஒளி என இயற்கை வளங்கள் இருந்தும் அனல் மின் உற்பத்தியிடம் நாடு சரணாகதியாயிருப்பதால் தான் இன்று இந்த கருத்தாடல் நிகழ்வுற காரணமாகி இருக்கின்றது என WCA அமைப்பின் இலங்கைக்கான நிகழ்ச்சி இணைப்பாளர் அனுசியா ஜெயகாந்த் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்ட 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதிக்கான மின்சார கட்டண திருத்தம் தொடர்பான மாற்றுப் பரிந்துரை குறித்து பொதுமக்களிடம் கருத்துக் கோரும் நடவடிக்கை 27ம் திகதி அன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில், அனைத்தும் வரி குறைக்கப்படும் விலை குறையும் என்றார்கள் ஆட்சியாளர்கள். எதற்காக மீண்டும் மின்சாரத்துக்கு 18 வீதத்துக்கும் அதிக உயர்வு? இதில் என்ன நியாயம் இருக்கின்றது துறைசார் விற்பனரே இதற்கு சொல்லவேண்டும்.

இதேவேளை நாட்டில் ஆட்சி மாற்றம் மட்டுமே மாற்றமாக ஏற்பட்டுள்ளதே தவிர பொருளதார நெருக்கடியோ வழங்கிய வாக்குறுதிகளோ நிறைவு செய்யப்படாது மக்கள் ஏமற்றப்பட்டதே மிச்சமாக உள்ளது.

இன்னிலையில் மக்களின் மீது மீண்டும் மின் கட்டண அதிகரிப்பு என்ற சுமை சுமத்தப்படுவதகாகவும் அது தொடர்பில் இங்கு ஆலோசனை செய்ய ஒன்றுகூடியுள்ளது நகைப்புக்குரியது.

நாட்டின் இயற்கை வளத்தால் நிறைவுசெய்யும் உற்பத்தி செய்யக்கூடிய ஏதுனிலை இருந்தும் உலக வங்கியின் நிகழ்ச்சி நிரலுக்காக குறைக்க வேண்டிய மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதற்காக ஆராய்கின்றோம் என்பதே உண்மை நிலைமைதாக உள்ளது.

வலுவான பொறிமுறைகள் இன்றி தள்ளாடும் இலங்கையின் திட்டமிடல்களுள் இது நிர்ப்பந்த உயர்வாகவே அமைகின்றது.

ஆனாலும் இந்த கட்டண உயர்வை ஏற்க முடியாது. இது மக்களை மேலும் வறியவர்களாக்குவதுடன் சிறுதொழில் முயற்சியாளர் மட்டுமல்லாது விவசாயிகள் பெரும் நிறுவனங்களும் செயலிழக்கும் நிலையை உருவாக்கும் என்பதே உண்மை.

இலங்கையில் தற்போது சூரிய மின் உற்பதி, காற்றாலை மின் உற்பத்தி, நீர் மின் உற்பத்தி என இயற்கை வடிவில் குறைந்த செலவில் உற்பத்தி செய்யும் ஏதுனிலை இருக்கும் போது ஏன் அனல் மின் உற்பத்திக்கு ஊக்குவிப்பும் அதில் தங்கி இருக்கும் நிலையிலும் எமது நாடு இருக்கின்றது. இதை ஏன் வல்லுனர்கள் சிந்திப்பதாக இல்லை. இதற்கு தீர்வு காணப்படுதல் அவசியம்.

ஆட்சியில் தற்போது இருக்கும் அரசாங்கம் ஆட்சிக்கு வர முன்னர் கூறியது கடந்த அரசாங்கங்கள் ஊழல் மோசடி செய்ததாக.



ஆனால் இன்று ஆட்சிக்கு வந்த அவர்களால் ஏன் கட்டணங்களை குறைக்க முடியாதுள்ளது. அல்லது சர்வதேச நாணய நிதியத்துக்கு அரசு பணிந்து விட்டதா?

அல்லது இவர்களும் ஊழல் செய்கின்றார்களா? அல்லது கடந்த ஆட்சியாளர் மேல் இவர்கள் பொய் குற்றம் சுமத்தி உண்மையை மறைத்து மக்களை ஏமாற்றினார்களா? என்ற சந்தேகம் மக்களிடம் எழுகின்றது.

இதேவேளை மின்சாரம் என்பது மக்களின் அடிப்படை தேவைகளுள் ஒன்று. மக்களின் இந்த அடிப்படை தேவையை வைத்து அரசியல் செய்வது நல்லதாகாது. ஏற்கனவே கட்டண உயர்வுக்கன முடிவை எடுத்துவிட்டு கண்துடைப்புக்காக இப்போது கருத்துக் கேட்பதும் ஊழல் தான். இதற்கும் மக்களின் வரியே அரச நிதியாக செலவாகின்றது.

அத்துடன் வறிய மக்களை உழைப்பை மேலும் சுரண்டும் செயலாகவும் இது அமையும். இது ஒருபுறம் இருக்க தற்போது எங்கு பார்த்தாலும் சூரிய மின் உற்பத்திக்கன கட்டமைப்புகள் முளைக்கின்றன.

ஆனால் அந்த மின்சாரத்தை பிரதான கட்டமைப்பில் இணைப்பதில் மின்சார சபை செய்யும் குழறுபடியும் ஆயிரம் அரசியலும் நடக்கின்றது.

சுற்றிவர கடலிருந்தும் உப்பு இறக்குமதி செய்வதைப் போலவே நாடுமுழுதும் இயற்கை வழங்கள் இருதும் அதைப் பயன்படுத்தாது அனல் மின் உற்பத்தியிடம் நாடு சரணாகதியாயிருப்பது வெட்கக்கேடாகும்.

அந்தவகையில் பொதுப் பயன்பட்டு ஆணைக்குழு எடுக்கும். இந்த கருத்துக் கேட்கும் முயற்சியில் மின்கட்டணம் அதிகரிக்க கூடாது, மக்களை மீண்டும் வறுமைக்கு உள்ளாக்க கூடாது என்பதை எனது பதிவாக முன்வைப்பதுடன் சூரிய மின் உற்பதி, காற்றாலை மின் உற்பத்தி, நீர் மின் உற்பத்தி ஆகிவவற்றை மேம்படுத்த சிறந்த பொறிமுறை வகுக்கப்பட்டு அனல்மின் மாபியாவின் படியிலிருந்து நாட்டை மீட்பது அவசியம் என்றும் வலியுறுத்துகின்றேன்னென்றும் தெரிவித்திருந்தமை குறிப்புடத்தக்கது.

# பெரிய நீலாவணை விஸ்ணு மகா வித்தியாலத்திலிருந்து பல்கலைக் கழகம் புகுந்துள்ள மாணவிகளுக்கு உதவிகள் வழங்கிய கனடா – விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை



இலங்கையின் கிழக்கு மாகாணம் - அம்பாறை மாவட்டம் - பெரிய நீலாவணை விஸ்ணு மகா வித்தியாலத்திலிருந்து பல்கலைக் கழகம் புகுந்துள்ள மாணவிகளைப் பாராட்டும் வைபவம் 27ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் பெரிய நீலாவணை விஸ்ணு மகா வித்தியாலத்திலிருந்து பல்கலைக் கழகம் புகுந்துள்ள மாணவிகளைப் பாராட்டும்வகையில் அன்பளிப்புக்கள் வழங்கிய கனடா வாழ் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களையும் பாடசாலை அதிபர் திருமதி. வாசுகி ஐங்கரன் மற்றும் உப - அதிபர் ஆகியோரையும் பாடசாலைச் சமூகம் வரவேற்றது.

இந்த பாடசாலையில் ஆண்-பெண் இருபாலாரும் கல்வி கற்று வந்தாலும் 12 மாணவிகள் இந்த வருடம் பல்கலைக்கழகம் செல்வதற்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி வைபவத்தில் கனடா "உதவும் பொற்கரங்கள்" அமைப்பின் தலைவர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை (விசு) அவர்களும் ஏனைய விருந்தினர்களும் மலர் மாலைகள் அணிவிக்கப்பெற்று ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பெறுவதனை படங்களில் காணலாம்.



செய்தியும் படங்களும் சரவணன் - மட்டக்களப்பு

(6 பக்கம் தொடர்ச்சி)

"தேர்தல் ஆணைக்குழு ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் வெற்றிபெற்றவரை ஜனாதிபதியாக அறிவிப்பது தேர்தல் ஆணைக்குழுவின் ஒரு பணி, ஆணைக்குழு அதனை அறிவிக்கும் அந்த நேரத்தில் இருந்து ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆரம்பமாகும். இதற்கமைய கடந்த வருடம் ஜனாதிபதி வெற்றிபெற்றதை அறிவித்த சமயத்தில் இவ்வாறு நிறைவேற்றப்படாத சட்டங்களை நிறைவேற்றித்தருமாறும், நடத்தப்படாமல் இருக்கும் தேர்தல்களை நடத்துவதற்கு எமக்கு உதவுமாறும் நாம் கோரிக்கை விடுத்தோம். ஜனாதிபதி தான் அதனை செய்வதாக அறிவித்திருந்தார். அதனை ஜனாதிபதி செய்வார் என எதிர்பார்க்கின்றோம்." என்கிறார் அவர்.

**முன்மொழிவுகள்**

தேர்தல் தினத்தன்று கட்டாய கடமையில் உள்ளோருக்கு அரச, தனியார் துறை என்ற பாகுபாடு இன்றி, தபால்மூல வாக்களிப்பு வாய்ப்பை வழங்க முடியும்.

சொந்த மாவட்டத்தைவிட்டு வெளி மாவட்டங்களில் வசிப்பவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களிலேயே வாக்களிப்பதற்கான வாய்ப்பை வழங்க முடியும். இதற்கென விசேட வாக்குச் சாவடியை உருவாக்க முடியும். (மாத்தறையில் உள்ளவருக்கு கொழும்பிலும், கண்டியில் உள்ளவருக்கு யாழ்ப்பாணத்திலும், மன்னாரில் உள்ளவருக்கு காலியிலும் வாக்களிப்பதற்கான வாய்ப்பை உருவாக்குதல்).

வர்த்தக வலையங்கள் போன்ற இடங்களில் விசேட வாக்குச்சாவடியை உருவாக்க முடியும். பயணித்து வாக்களிக்க இயலாத விசேட தேவையுடையோருக்கு நடமாடும் வாக்களிப்பு வசதியை (mobile voting system) ஏற்படுத்தலாம்.

அரசியல் ரீதியாக தாங்கள் கொண்டுள்ள கருத்தியல் காரணமாக வாக்களிக்காமல் உள்ளவர்களின் தொகைதான் அதிகம். ஆகவே அவர்களுக்கு "மேலே உள்ளவை எதுவும் இல்லை" (NONE OF THE ABOVE – NOTA) என்ற விடயம் வாக்குச் சீட்டில் சேர்க்கப்பட முடியும். இந்தியா போன்ற நாடுகளில் இந்த தெரிவு காணப்படுகிறது.

பலருக்கு "ஒரு வாக்கினுடைய" பலம் தெரிவதில்லை. அது எத்தகைய மாற்றத்தே ஏற்படுத்தும் என்பதை அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள். ஆகவே ஜனநாயக கடமையை நிறைவேற்றுவது உள்ளிட்ட அடிப்படை அரசியலை


அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் கட்டாய பாடமாக்க முடியும். அதேபோன்று, வளர்ந்தோருக்கு வாக்காளர் கல்வியை வழங்குவது அவசியம்.

இவை உள்ளிட்ட பல்வேறு முன்மொழிவுகள், ஆலோனைகளை பலர் தொடர்ச்சியாக முன்வைத்தாலும் இலங்கையில் இருக்கக்கூடிய அரசியல் மற்றும் அரச நிர்வாகக் கட்டமைப்புச் சிக்கல்களால் உரிய நடைமுறைகளை ஏற்படுத்துவதில் தொடர் காலத்தாமதம் ஏற்படுகின்றது. கடந்த கால தேர்தல் பெறுபேறுகளின் விகிதம் மற்றும் வாக்களிக்காதவர்களின் விகிதம் என்பவற்றை அவதானித்து, அதன் பாரதூரத்தை உணர்ந்து, இப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்பதே பலரது வேண்டுகோளாக அமைந்துள்ளது.

ச.பார்தீபன் - நன்றி தமிழன்

# சைனைட் குப்பிகள் — தமிழ்ழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் அமைதியான குறியீடு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



ஒரு சிறிய கண்ணாடி குப்பி, ஒரு பதக்கம் அளவுக்கு மட்டுமே - ஆனால் அதில் நிரப்பப்பட்டிருந்தது விரைவு செயல்படும் விஷம். இருப்பினும், அது ஒரு முழு தேசத்தின் விடுதலை வேட்கையின் பாரத்தை தாங்கியது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் போராளிகளுக்கு, சயனைடு குப்பி என்பது வெறும் மரண சாதனம் அல்ல. அது ஒரு உறுதியின் சின்னம், தியாகம், மானம் மற்றும் சரியாத எதிர்ப்பின் அடையாளம்.

இந்த குப்பி, இதயத்திற்கு அருகே அணியப்பட்டது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அமைதியான இதயத் துடிப்பாக மாறியது. இது ஒரு ஆழமான தத்துவத்தை பிரதிபலித்தது:

"நாங்கள் சரணடைய மாட்டோம். நாங்கள் துரோகம் செய்ய மாட்டோம். சங்கிலிகளில் வாழ்வதை விட, மானத்துடன் மரிப்பதை தேர்ந்தெடுப்போம்."

1970களின் பிற்பகுதியில், தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கம், சைனைட் குப்பிகளை தனது உறுப்பினர்களுக்கு கொடுக்க தொடங்கியது.

இதற்கு முக்கிய காரணமாக விளங்கியது இயக்க உறுப்பினர்கள் எதிரிகளிடம் பிடிபடும்போது, பாதுகாப்புத் தகவல்களை எதிரிக்கு சொல்ல முடியாதவாறு தங்களைத் தாங்களே மாய்த்துக்கொள்ளும் நோக்கம் ஒன்றேயாகும்.

ஆனால் அது ஒரு வெறும் பாதுகாப்புக் கருவி இல்லை. அது ஒரு தேசிய சின்னமாக உயர்ந்தது. ஒரு புரட்சியாளர் தங்கள் காரியத்தில் வைத்திருக்கும் இறுதி நம்பிக்கையை இது குறிக்கும்.

சயனைடு என்பது விஷம் - வினாடிகளில் உயிரை குடிக்கக்கூடியது. ஆனால், விடுதலைப் புலிப் போராளிகளுக்கு:

இது பயத்தில் அணியப்படவில்லை, நம்பிக்கையில் அணியப்பட்டது.

இது தற்கொலைக்கு அடையாளம் அல்ல, மாறாக மானத்தின் கேடயம்.

இது ஒரு வீரனின் பிரமாணம் - "என் உயிர் என் மக்களுக்கு உரியது, என் எதிரிக்கு அல்ல."

தினமும் மரணத்தை கழுத்தில் அணிந்திருப்பது என்பது விரக்தியின் அடையாளம் அல்ல - அது மானத்தின் சத்தியமாகும். அது சொல்லாமலே சொல்லியது:

"என்னை பிடி, அடி, சித்திரவதை செய் - ஆனால் நீ என்னை ஒருபோதும் உன்னுடையவனாக்க முடியாது."

சைனைட் குப்பி என்பது புலிகளின் உள்ளார்ந்த அரசியல் மெய்ப்பொருளை உலகிற்கு எடுத்துச் சென்றது.

இது சுய மரியாதையின் சின்னம்.

இது சட்ட முறைகள் சிதைந்துவிட்டன என்ற அறிவிப்பு.

இது ஒரு இனத்தின் உளமார்ந்த விடுதலை ஆசையின் ஆதாரம்.

இலங்கை அரசும், சர்வதேச சக்திகளும் விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாக குறைத்து காட்டின. ஆனால் சயனைடு குப்பி அந்த மேலோட்டமான முத்திரையை தகர்த்தது.

எந்த பயங்கரவாதியும் தன்னை மட்டும் கொல்லும் ஆயுதத்தை சுமந்து செல்வதில்லை.

எந்த பயங்கரவாத அமைப்பும் தங்கள் ரகசியங்களை தங்கள் உயிரால் பாதுகாக்க பயிற்சி அளிப்பதில்லை.

எந்த பயங்கரவாத இயக்கமும் பயத்தை பரப்புவதற்கு பதிலாக, தியாகத்தை சுற்றி கலாச்சாரத்தை உருவாக்கவில்லை.

சயனைடு குப்பி ஒவ்வொரு விடுதலைப் புலிப் போராளியையும் ஒரு அரசியல் பிரதிநிதியாக மாற்றியது - அவர்களின் விசுவாசம் தனிப்பட்ட பாதுகாப்புக்கு அல்ல, தமிழ் மக்களின் விடுதலைக்காக இருந்தது.

ஒவ்வொரு புலி உறுப்பினருக்கும் சைனைட் வழங்கப்பட்டது இது ஒரு உயிர் கொடுக்கத்தயார் என்ற சத்தியத்தின் கடைசி கட்டம்.

சைனைட் குப்பியை அணிந்த பெண் புலிகள், உலகின் எந்தச் சுதந்திர இயக்கங்களிலும் பெரிதாகப் பதிவானதில்லை.

அவர்கள் நூற்றாண்டுகால ஆணாதிக்க விதிமுறைகளை தகர்த்து, மாற்றினர்:

போராளிகள்

திட்டமிடுபவர்கள்

தியாகிகள்

மற்றும் தமிழீழத்திற்கான அதே மரண சபதத்தை தாங்கியவர்கள்.

சயனைடு குப்பி ஒரு பெண்ணிய சின்னமாக மாறியது - பாதிக்கப்பட்டவர்களின் அடையாளம் அல்ல, மாறாக சக்திவாய்ந்த எதிர்ப்பின் அடையாளம். நவீன வரலாற்றில் எந்த இராணுவமும் பெண்களை இவ்வளவு அளவுக்கு அதிகாரம் வழங்கவில்லை போராட மட்டுமல்ல, தங்கள் தேசத்திற்காக மரணிக்கவும்.

சைனைட் குப்பியை, சிலர் "தற்கொலைப் படைவீரர்கள்" என தவறாக விளங்கினர். ஆனால் உண்மையில்:

சைனைட் என்பது தற்காப்பிற்கான கருவி. அது பிறரை கொல்ல அல்ல, தங்களை பாதுகாக்க.

"கரும்புலிகள்" எனும் தனி படைப்பிரிவு தற்கொலை தாக்குதல்களைச் செய்தது.

பொதுவாக, பெரும்பாலான புலிகள் சைனைட்டை தங்களுக்காக மட்டுமே பயன்படுத்தினர்.

இராணுவத்துக்கும் புலனாய்வுத்துறைக்கும், சைனைட் மிகப்பெரிய தலைவலியாக இருந்தது ஏனெனில் அது அவர்களின் முக்கிய உத்தியை - கட்டாய விசாரணையை - தடுத்தது.

பிடிக்கப்பட்ட புலிகள் வாழ்ந்து ஏமாற்ற மாட்டார்கள்.

எந்த திட்டத்தையும் வெளியிட மாட்டார்கள்.

தங்களுடன் தகவல்களையும் அழித்துவிடுவார்கள்.

இது உளவுத்துறைக்கு அதிர்ச்சியும், போர்க்களத்தில் எச்சரிக்கையுமான ஒன்றாக இருந்தது.

போராளிகள் விசாரணைக்கு முன் இறந்தால்:

நடவடிக்கைகள் பாதுகாக்கப்பட்டன

கட்டமைப்புகள் பாதுகாக்கப்பட்டன

உணர்வுகள் உடைக்கப்படவில்லை

இது இராணுவ உளவுத்துறையை விரக்தியடையச் செய்தது, அரசுக்கு பிணங்கள் மட்டுமே கிடைத்தன, ஒப்புதல்கள் அல்ல. போரில், மனோபலம் எல்லாமாகும், சயனைடு குப்பிகள் விடுதலைப் புலிகளுக்கு ஒரு மனோதத்துவ மேலாதிக்கத்தை கொடுத்தது.



25 ஆண்டுகளுக்கும் மேலான விடுதலைப் போராட்டத்தில், சைனைட் குப்பி:

மாற்றத்தை நாடும் இளைஞர்களின் சின்னம்,

அணிகள், மாணவிகள், பெண் போராளிகள் அனைவருக்கும் ஒன்றிணைக்கும் அடையாளம், மரணத்தையும் பொருட்படுத்தாத கூட்டாகிய உறுதிமொழி.

அது ஒரு சின்னம் மட்டும் இல்லை - அது ஒரு உயிர்மொழி:

"ஒரே மொழி. ஒரே கனவு. ஒரே தியாகம். ஒரே தாயகம்."

இன்றும், வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மற்றும் முன்னாள் போராளிகளிடையே, இது போராட்டத்தின் ஒரு மதிக்கப்படும் நினைவுச் சின்னமாக உள்ளது.

இன்றைய தமிழர்களுக்கு, சைனைட் ஒரு கடுமையான நிகழ்வாகத் தோன்றலாம். ஆனால்:

இது மரண வழிபாடு அல்ல

இது ஒரு எதிர்ப்பின் கலாச்சாரம்

இது அரச பயங்கரவாதம், ஊடகங்களின் தவறான விளக்கங்கள் மற்றும் உலகின் மௌனம் ஆகியவற்றுக்கு எதிரான ஒரு அமைதியான கிளர்ச்சி.

சயனைடு குப்பியை புரிந்துகொள்வது என்பது தமிழீழ தேசிய இயக்கத்தின் ஆன்மாவை புரிந்துகொள்வது - அதன் இராணுவ உத்திகள் மட்டுமல்ல, அதன் ஆன்மீக மையத்தை.

சைனைட் குப்பியின் வரலாறு ஒரு விஷக் குப்பி அல்ல - அது ஒரு தேசம் சுதந்திரமாக வேண்டுமென்ற ஒரே இனத்தின் இரத்த சத்தியம்.

"நாங்கள் நஞ்சினை மாலையாய் அணிந்தோம்,
நம்முடைய நாட்டினைக் காக்க, சாகத் துணிந்தோம்."

இவை வெறும் கவிதை வரிகள் அல்ல.

இவை ஒரு தேசியத்தின் இரத்தத்தால் எழுதப்பட்ட சத்தியங்கள்.

சைனைட் குப்பி, வரலாற்றில் ஒரு சாவுக்கருவி அல்ல - அது ஒரு இனத்தின் மௌனமான சத்தமில்லா சத்தியாக நிலைத்திருக்கும்.

**ஈழத்து நிலவன் (30-05-2025)**





# புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது காணிகளைத் தானம் செய்வார்களா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

சர்ச்சைக்குரிய அரச வர்த்தமானியை அரசாங்கம் மீளப் பெற்றிருக்கிறது. தமிழ்க் கட்சிகள் இந்த விடயத்தில் திரண்டு நின்று எதிர்ப்பைக் காட்டியதன் விளைவாக அது நடந்திருக்கிறது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சிங்கள பௌத்த கடும்போக்குப் பிடிவாதத்தோடு அந்த வர்த்தமானியை நியாயப்படுத்தாமல் அதிலிருந்து பின்வாங்கியிருக்கிறது.

அதே சமயம் இதில் கிடைத்த வெற்றிக்கு உரிமை கோரி அடிபடும் தமிழ்க் கட்சிகள் அதைவிட ஆழமான ஒரு விடயத்தின் மீது கவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு.

தாய் நிலத்தை நிலப் பறிப்பிலிருந்து காப்பாற்றுவது அவசியம். அதேயளவு அவசியமானது, தாய் நிலத்தைச் சனச் செழிப்புடையதாகக் கட்டி எழுப்புவது.

ஒருபுறம் உரிமை கோரப்படாத, அல்லது உரிமை கோர ஆட்கள் இல்லாத, அல்லது உரிமை கோரத் தேவையான ஆவணங்கள் இல்லாத காணிகள். இன்னொருபுறம் ஒரு துண்டுக் காணிகூடச் சொந்தமாக வைத்திருக்காத ஏழைகள்.

ஒருபுறம் பற்றைகள் மண்டிக் கிடக்கும் அல்லது பூதம் காக்கும் பிரம்மாண்டமான மாளிகைகள். அல்லது சிசிரீவி கமராக்களால் அல்லது செக்யூரிட்டி நிறுவனங்களால் பாதுகாக்கப்படும் பிரமாண்டமான மாளிகைகள். இன்னொரு புறம் ஒரு துண்டுக் காணி கூட இல்லாத ஒரு தொகுதி மக்கள்.

தமிழ் மக்கள் நிலப் பறிப்புக்கு எதிராகப் போராட வேண்டும். அதே சமயம் தாய் நிலத்தில் உள்ள ஆளில்லாத வீடுகளையும் காணிகளையும் வீடில்லாதவர்களுக்கும் காணி இல்லாதவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க முன் வர வேண்டும். அதை ஒரு தேசக் கடமையாகச் செய்ய வேண்டும். தேசத்தைக் கட்டி எழுப்பும் பணிகளில் ஒன்றாகச் செய்ய வேண்டும்.

அண்மையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஈடுபட்ட பெண் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்றின் போது, யாழ் புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த, ஒரு பெண் செயற்பாட்டாளர் சொன்னார் தன்னுடைய பகுதிக்குள் மட்டும் 24 ஆளில்லாத வீடுகள் உண்டு என்று.

அதுபோல கடந்த வாரம் மானிப்பாய் அந்தோணியார் கோவிலில் நடந்த பொதுமக்கள் சந்திப்பு ஒன்றின்போது அங்கு வந்திருந்த இளவாலைக் கோட்டத்தைச் சேர்ந்த வெவ்வேறு பிரிவினர் தந்த தகவல்களின்படி, ஒவ்வொரு கிராமத்திலும் சராசரியாக பத்துக்குக் குறையாத ஆளில்லாத வீடுகள் உண்டு என்று தெரிகிறது.

தமிழர்கள் மத்தியில் ஆளில்லாத வீடுகள் இரண்டு வகைப்படும். முதலாவது வகை, ஆள் இல்லாத அல்லது பாழடைந்த சிதைந்த வீடுகள். இரண்டாவது வகை புலம்பெயர்ந்த தமிழர்கள் கட்டி எழுப்பும் மாடமாளிகைகள். புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்கள் சொந்த ஊர்களில் காணிகளை வாங்கி வீடுகளைக் கட்டுகிறார்கள். அல்லது வீடுகளை வாங்கி அவற்றைப் புனரமைத்து வருகிறார்கள். இந்த வீடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் நிரந்தரமாக வசிப்பதில்லை. பருவ காலப் பறவைகளைப் போல அவ்வப்போது வந்து போகிறார்கள். ஊர்த் திருவிழாக்களுக்கு அல்லது நல்லது கெட்டதுக்கு வந்து போகிறார்கள். அவர்களுடைய அந்தஸ்தின் சின்னமாகிய அந்த வீட்டை ஒன்றில் சிசிரீவி கேமராக்கள் கண்காணிக்கும். அல்லது பாதுகாப்பு நிறுவனங்கள் கண்காணிக்கும்.

இவ்வாறாக, தமிழர் தாயகத்தில் இரண்டு வகை ஆளில்லாத வீடுகள் உண்டு. அதிலும் குறிப்பாக ஆளில்லாத பாழடைந்த வீடுகள் என்று பார்த்தால் தீவுப் பகுதிதான் அவ்வாறான வீடுகளை அதிகமாகக் கொண்டிருக்கிறது. இலங்கைத் தீவிலேயே ஏன் இந்தப் பிராந்தியத்திலேயே ஆளில்லா வீடுகளை அதிகமாகக் கொண்ட கிராமங்களைத் தீவுப் பகுதியிலும் காண முடியும்.

இவ்வாறு அளிலா வீடுகளை அதிகமாகக் கொண்ட ஒரு தேசத்தில், ஆண்டு அனுபவிக்க ஆளில்லாத காணிகளை அரசாங்கம் அபகரிக்க முயற்சிக்கின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்பு பலாலியில் காணிகளை விடுவிக்கும் ஒரு நிகழ்வில் பேசிய ஒரு தளபதி, தமிழ் மக்கள் காணிக்காகப் போராடுகிறார்கள் ஆனால் விடுவிக்கப்பட்ட காணிகளில் வந்து குடியேறுகிறார்கள் இல்லை என்று பேசியதாக ஒரு சமயப் பிரமுகர் என்னிடம் சொன்னார். முகாமை அண்டிய பகுதிகளில் ஏன் மக்கள் குடியேற மறுக்கிறார்கள் என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. முன்பு அவர்கள் இருந்தது ஒரு கிராமம். இப்பொழுது அவர்களுக்கு கையளிக்கப்படுவது பெரும்பாலும் ஒரு மைதானம். ஒரு பெரிய முகாமின் சிறிய பகுதியாக மாற்றப்பட்டு வெட்டையாக்கப்பட்ட ஒரு இடம். எனவே அங்கே திரும்ப ஒரு கிராமத்தை ஸ்தாபிப்பதற்கு பல ஆண்டுகள் செல்லும்.

கிராமம் என்பது நிலம் மட்டுமல்ல. கிணறு வேண்டும் கோயில் வேண்டும் குளம் வேண்டும் பாடசாலைகள் அரச அலுவலகங்கள் வேண்டும்; மின்சார நீர் வினியோகங்கள் வேண்டும்... அதற்குரிய எல்லா உட்கட்டுமானங்களும் கட்டி எழுப்பப்படும் பொழுதுதான் அது ஒரு கிராமமாக மீள எழுச்சி பெறும். எனவே மீளக் குடியேற்றம் எனப்படுவது தனிய நிலத்தைக் கையளிப்பது மட்டுமல்ல. அங்கு ஏற்கனவே செழிப்பாக இருந்து பின்னர் சிதைக்கப்பட்ட அழிக்கப்பட்ட ஒரு வாழ்க்கையை மீளக்கட்டி எழுப்புவது. வெட்டப்பட்ட வேர்களில் இருந்து மீண்டும் ஒரு வனத்தை உருவாக்குவது போல.

இத்தனைக்கும் பலாலி என்ற கிராமமே இப்பொழுது வரைபடத்தில்தான் உண்டு. ஏனென்றால் அது வடபகுதி படைக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டு மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகிவிட்டது.

மேலும் மூன்று தசாப்தங்களுக்கு முன்பு இடம்பெயர்ந்த மக்களுக்குப் பிறந்த பிள்ளைகள் இடம்பெயர்ந்து வாழும் புதிய இடங்களுக்குப் பழக்கப்பட்டு விட்டன. புதிய தலைமுறையின் தொழில் வாய்ப்புகளும் புதிய இடத்தைச் சுற்றித்தான் இருக்கும். இதனால் பூர்வ நிலத்துக்குத் திரும்பிச் செல்ல அந்தப் புதிய தலைமுறை தயங்குகிறது.

இப்படிப்பட்டதோர் சமூகபு பொருளாதார, அரசியல் பின்னணியில், அண்மையில் கிடைத்த சனத்தொகை புள்ளிவிபரங்களின்படி, வடபகுதியில் சனத்தொகை வீழ்ச்சி கண்டுள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் பிள்ளைப் பேறு விகிதம் தாயகத்திலும் புலம்பெயர்ந்த மக்கள் மத்தியிலும் குறைந்து கொண்டே போகிறது. ஒருபுறம் ஜனத்தொகை சிறுக்கின்றது. இன்னொரு புறம் நிலமும் சிறுக்கின்றது. தவிர இருக்கின்ற நிலத்திலும் ஆளில்லா வீடுகள். எனவே இந்த விடயத்தில் நிலத்தை அபகரிக்க முற்படும் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்திடமிருந்து தாய் நிலத்தைக் காப்பாற்றுவதற்காகப் போராடும் அதே சமயம் நிலத்தை தாய் நிலத்தை சனப் புழக்கம் உடையதாகக் கட்டி எழுப்புவது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

ஆளில்லா வீடுகளை வைத்திருக்கும் உள்நாட்டு தமிழர்களும் புலம்பெயர்ந்த தமிழர்களும் தங்களிடமுள்ள மேலதிக காணிகளையும் வீடுகளையும் வீடில்லாதவர்களுக்கும் காணிகள் இல்லாதவர்களுக்கும் தானமாக வழங்கலாம்.

தமது பூர்வீக காணியை, பூர்வீக வீட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற விருப்பத்தை நாங்கள் குறைத்து மதிப்பிட முடியாது. எல்லாரும் தங்களுடைய பூர்வீக வீட்டையும் காணியையும் தானம் பண்ண வேண்டும் என்று இந்தக் கட்டுரை கேட்கவில்லை. மாறாக தமிழர் தாயகத்தில் பூதம் காக்கும், ஆளில்லாத வீடுகளை வீடுகள் இல்லாதவர்களுக்கும்; பற்றைகள் மண்டிக் கிடக்கும் காணிகளை நிலம் இல்லாதவர்களுக்கும் விரும்பினவர்கள் தானமாக வழங்கலாம். அதை ஒரு அரசியல் செயற்பாட்டு இயக்கமாக முன்னெடுக்கலாம்.

இந்திய சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில் வினோபா அவ்வாறு பூமிதான இயக்கம் ஒன்றை நடத்தினார். சுதந்திரப் போராளியான அவர் காந்தியின் செல்வாக்கு உள்ளாகி குறிப்பாக ஆந்திராவில் இடம்பெற்ற நிலமற்ற விவசாயிகளின் போராட்டப் பின்னணியில் *1951* ஆம் ஆண்டு பூமிதான இயக்கத்தைத் தொடங்கினார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்த விடயத்தில் முன்னுதாரணமாக இருக்க முடியும். அதற்கு முன்னுதாரணங்கள் ஏற்கனவே உண்டு. கிளிநொச்சியில் பன்னங்கண்டிக் கிராமத்தில் சிவா பசுபதி கமம் சில ஆண்டுகளுக்கு முன்பு அங்கே குடியிருக்கும் மலையகத் தமிழர்களுக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டது.

அது ஒரு சுவாரசியமான கதை. கிளிநொச்சியில் உள்ள காவேரி கலாமன்றத்தின் நிகழ்வு ஒன்றில் பங்குபற்றுவதற்காக ஒஸ்ரேலியாவில் இருந்து மாலதி என்ற பெயருடைய ஒரு மருத்துவர் வந்திருந்தார். அவரோடு உரையாடிய கிளிநொச்சியைச் சேர்ந்த ஓர் ஊடகவியலாளர் பன்னங்கண்டியில் குறிப்பிட்ட கமத்தில் சில தசாப்தங்களாக வசித்து வரும் மக்கள் ஆயுதப் அந்தக் காணியில் தங்களை நிரந்தரமாக குடியிருக்கவிடக் கோரிப் போராடி வருவதை எடுத்துக் கூறியுள்ளார். அந்தப் பெண் மருத்துவர் அந்தக் காணியின் பெயரை கேட்டபின் அது தன்னுடைய தந்தை வழிக் காணி என்று கூறியுள்ளார். தனது தந்தை ஆகிய முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி தற்போது ஒஸ்ரேலியாவில் வசிப்பதாகவும் அவரோடும் ஏனைய சகோதரர்களோடும் கதைத்தபின் இது தொடர்பில் முடிவு கூறுவதாகவும் உறுதியளித்துள்ளார். சில நாட்களிலேயே அந்தக் குடும்பம் தமது கமத்தை அங்கு வாழும் மக்களுக்கு தானமாகக் கொடுக்கும் உன்னதமான ஒரு முடிவை எடுத்தது.

இது போற்றத்தக்க ஒரு முன்னுதாரணம். நிலம் இல்லாத தன் இனத்தவனுக்கு நிலத்தைக் கொடுப்பது என்பது தேசத்தை கட்டி எழுப்பும் பணிகளில் ஒன்று. மருத்துவர் மாலதியின் முன்னுதாரணத்தை ஏனைய புலம் பெயர்ந்த தமிழர்களும் பின்பற்றினால் என்ன?

காணி உரிமைக்கும் சாதி ஒடுக்கு முறைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ள பலருக்கும் சொந்தமாகக் காணியில்லை. சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் இருந்து ஆராய்ச்சித் தேவைகளுக்காக இலங்கைக்கு வந்த கலாநிதி இசபெல்லா எனப்படும் ஒரு புலமையாளரை யாழ்ப்பாணத்தின் சில கிராமங்களுக்குப் போகுமாறு தூண்டினேன். அவ்வாறு சில கிராமங்களுக்குச் சென்று ஆராய்ந்தபின் அவர் சொன்னார் சாதி ஒடுக்குமுறைக்கும் நில உரிமைக்கும் இடையே தொடர்புகள் உண்டு என்று. அது மிக வெளிப்படையான, எளிமையான ஓர் உண்மை.

எனவே நிலமில்லாத மக்களுக்கு தமது நிலத்தை வழங்குவதற்கு தமிழ் மக்கள் மத்தியில் உள்ள நிலச் சுவாந்தர்கள் முன் வர வேண்டும். புலம்பெயர்ந்த தமிழர்கள் முன் வர வேண்டும். அரசியல் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மேற்படி பணியை ஒருங்கிணைக்கலாம். அதை ஒரு செயல்வாதமாகவே ஒழுங்கமைக்கலாம். புதிய உள்ளூராட்சி சபைகள் விரைவில் உருவாக்கப்படவிருக்கின்றன. ஒவ்வொரு பிரதேசத்திலும் ஆளில்லா வீடுகளைக் கணக்கிட்டு பிரதேச சபைகளே அதைச் செய்யலாம்.

நில அபகரிப்புக்கு எதிராக போராட சட்டச் செயற்பாட்டாளர்கள் தேவை. அதுபோலவே நிலத்தை தானமாக கொடுப்பதற்கும் செயற்பாட்டு இயக்கங்களும் அறக் கொடைகளும் தேவை. தாய் நிலத்தைக் காப்பாற்றுவது என்பது தாய் நிலத்தை அபகரிக்க முற்படும் அரச வர்த்தமானிகளுக்கு எதிராகப் போராடுவது மட்டுமல்ல, அதைவிட ஆழமான பொருளில் தாய் நிலத்தில் காணியற்ற மக்களுக்கு காணிகளை வழங்கி வீடற்ற மக்களுக்கு வீடுகளை வழங்கி கிராமங்களை சனப்புழக்கம் உள்ளவைகளாக மாற்றுவதும்தான்.

கனடிய செய்திகள்
Canadian News

## Canada's Member of Parliament for Scarborough Centre - Don Valley East, Salma Zahid swears as a MP in Ottawa along with her Supporters gathered there.

# தமிழ் மக்களின் நெருங்கிய நண்பி பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் ஒட்டாவாவில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் Scarborough Centre - Don Valley East, தொகுதியின் உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்



ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் ஒரு அலுவலராக இணைந்த சமூக அக்கறையுடன் செயற்பாட்டும். பல்லினங்கள் சார்ந்த நண்பர்களோடும் அமைப்புக்களோடும் இணைந்து செயற்பட்டு அரசியலில் உயர்ந்தவரும் தமிழ் மக்களின் நெருங்கிய நண்பியுமான பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்கள் ஒட்டாவா மாநகரில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் கடந்த 21ம் திகதி புதன்கிழமையன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.







அந்த நாளில் ரொறன்ரோ நகரிலிருந்து புறப்பட்ட பஸ் ஒன்றில் தனது ஆதரவாளர்களோடும் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களோடும் பயணித்து ஒட்டாவாவை அடைந்து அங்கு இடம்பெற்ற அரச வைபவம் ஒன்றில் அன்னார் Scarborough Centre - Don Valley East, தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

அங்கு எடுக்கப்பெற்ற படங்கள் இங்கு காணப்படுகின்றன.







**படங்களும் செய்தியும்: சத்தியன்**

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவின் முக்கிய அமைச்சராக பதவியேற்ற கௌரவ ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற வைபவத்தில் கலந்து கொண்ட அவரது ஆதரவாளர்களும் நண்பர்களும்!



கனடிய மத்திய அமைச்சரவையில் முக்கிய அமைச்சர்களில் ஒருவராக பதவியேற்ற கௌரவ ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற வைபவத்தில் கலந்து கொண்ட அவரது ஆதரவாளர்களும் நண்பர்களும் கடந்த 23-05-2025 வெள்ளிக்கிழமையன்று ஒரு உணர்பூர்வமான அனுபவத்தை தமதாக்கிக்கொண்டார்கள் என்றால் அது மிகையாகாது.



கடந்த லிபரல் அரசின் ஆட்சிக் காலத்திலும் முன்னாள் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்களின் தலைமையில் முக்கிய அமைச்சராகப் பதவியேற்ற பணியாற்றிய அவர் புதிய அரசாங்கத்தின் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்ற வைபவத்தை பல காட்சி ஊடகங்கள் மூலமாக எமது மக்கள் கண்டு களித்தார்கள்.

இந்த வகையில் ஏற்கெனவே கனடாவின் ஆளுனர் நாயகம் மற்றும் பிரதம மந்திரி மார்க் கார்னி ஆகியோர் முன்னிலையில் கனடாவின் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்ற கௌரவ ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை 23ம் திகதி ஸ்காபுறோ - கில்வூட் - ரூஜ்பார்க் (Scarborough - Guildwood - Rouge Park) தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக கனடிய தலைநகரான ஒட்டாவாவில் உள் பாராளுமன்ற வளாகத்தின் விசேட மண்டபம் ஒன்றில் உயர் அதிகாரி ஒருவரின் முன்பாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.


















மேற்படி அரச வைபவத்தில் அழைக்கப்பெற்ற விருந்தினர்களாகக் கலந்து கொண்டவர்கள் அனைவருமே தேர்தல் பிரச்சாரக் காலத்தில் கௌரவ ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் வெற்றிக்காக உழைத்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அன்றைய நிகழ்வானது கலந்து கொண்ட அனைவருக்கும் புதிய உணர்வுகளை தட்டி எழுப்பியதாக அமைந்தது. அங்கு பாராளுமன்றத்தின் ஆசனங்களில் தனது ஆதரவாளர்களையும் நண்பர்களையும் அமரவைத்து அழகு பார்த்த அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தானும் மகிழ்ச்சியுடன் அனைவரையும் வரவேற்றார்.

# வட இந்தியர்கள் தமிழ்நாட்டில் குடியேறும் மாபெரும் அலையினால் விளையப்போகின்ற எதிர்கால ஆபத்துகளும் தமிழர் விழிப்பின் அவசியமும்

இலங்கை செய்திகள்
Sri Lanka News




இணைபிரிய முடியாத இந்தியாவின் பல்வகைத் தன்மையிலும், தமிழ்நாடு ஒரு தனிப்பட்ட அடையாளமும், மொழி, பண்பாடு, வரலாறு கொண்ட மாநிலமாகத் திகழ்கிறது. ஆனால், சமீப ஆண்டுகளில் வட இந்தியா மாநிலங்களிலிருந்து வேலை மற்றும் வணிக நோக்கில் பெருமளவில் குடியேறும் அலை தமிழ்நாட்டில் பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை உருவாக்கத் தொடங்கியுள்ளது. இது ஒரு சாதாரண குடியேற்றம் மட்டும் அல்ல, வருங்காலத்தில் தமிழர்களின் அடையாளத்தையே அழிக்கக்கூடிய ஆபத்தான மாற்றமாக பார்க்கப்படலாம்.

**ஒரே நாடு - ஒரே குடும்ப அட்டை: ஜனநாயகத்தின் வழியாக அரசியல் ஆக்கிரமிப்பு**

மத்திய அரசால் முன்வைக்கப்படும் “ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை” திட்டம், பார்வைக்கு நலனாகத் தோன்றினாலும், உண்மையில் வாக்களிக்க தகுதியான குடியேற்ற மக்களை உருவாக்கும் தந்திரமாகவும் இருக்கலாம். தமிழ்நாட்டில் குடியேறும் வடநாட்டவர்கள், இங்குள்ள முகவரிகளை வைத்தே வோட்டர் ஐடி பெற ஆரம்பிக்கிறார்கள். இதன் விளைவாக, பாஜக போன்ற தலைநகர அரசியல் கட்சிகள், தமிழர்களின் மதிப்பீட்டு எண்ணிக்கையில் செருகி, பெரும்பான்மையை எட்ட முயற்சிக்கலாம்.

**பணிக்குத் தயாரில்லை - ஆனால் பணி இழக்கின்றார்கள் தமிழர்கள்**

தமிழர்களில் ஒரு பகுதி, இலவச வசதிகள், நலத் திட்டங்கள் ஆகியவற்றால் ஊக்குவிக்கப்பட்ட சோம்பேறித்தனத்தினால், வேலை செய்யும் எண்ணமின்றி வாழ்கின்றனர். இதனால் கட்டிட வேலை, உணவகம், துணிக்கடை, குடியிருப்பு துறைகள் போன்றவற்றில் வேலை செய்யும் எண்ணிக்கையில் தமிழர்கள் குறைந்துள்ளனர். இதனால் வட இந்தியர்கள் வெகு எளிதில் இப்பணிகளை கைப்பற்றுகிறார்கள்.

**தமிழர்களின் கல்வி மற்றும் வேலைமுறை: எதிர்மறையான விளைவுகள்**

பொறியியல் மற்றும் மேற்படிப்புகளுக்கு பெரும்பாலான மாணவர்கள் செல்கின்றனர். ஆனால், படிப்புக்கேற்ற வேலை வாய்ப்புகள் இல்லாமல், அவர்கள் வேலை இல்லா இளைஞர்களாக மாறுகிறார்கள். கீழ்மட்ட வேலைகளை செய்யத் தயங்குகிறார்கள். இதுவே வெளிமாநில வேலைவாய்ப்பை உயர்த்துகிறது. இப்போது இந்த வெறிறிடங்களை வடநாட்டவர்கள் நிரப்புகிறார்கள்.

**வடநாட்டுப் பண்ணையினர் தமிழரின் அடையாளங்களை ஆக்கிரமிக்கிறார்கள்**

வடநாட்டு சேட்டுக்கள் வட்டிக்கடை, குட்கா கடை, சினிமா, நகைக்கடை, சநயட நளவயவந முதலிய தொழில்களில் தங்கள் பிடியை ஏற்படுத்தி வருகின்றனர். அதேபோல வடநாட்டு நடிகைகள் தமிழ்ப்படங்களில் கதாநாயகிகளாக நடித்து பணம் சம்பாதிக்கின்றனர். இது தமிழின் பண்பாட்டு மையத்தையே குலைக்கக்கூடிய சூழலை உருவாக்குகிறது.

**தமிழர்களின் வெளி மாநிலப் புலம்பெயர்வு: எதிர்மறையான எதிர்வினைகள்**

தமிழர்கள் வேலை தேடி வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் செல்வதைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக்கூறும் சிலர், இதுவும் தமிழ் இன அடையாளத்தை காப்பாற்றும் முயற்சி என நம்புகின்றனர். ஆனால், இதன் எதிர்வினையாக, வட இந்தியர்கள் தமிழ்நாட்டில் வந்து, அடிப்படை வேலையை மட்டும் அல்ல, அரசியலையும் கைப்பற்றும் சூழல் உருவாகலாம்.

**அரசியல் ஆக்கிரமிப்பு: எச்சரிக்கைத் தகவல்**

பாஜக போன்ற வடமாநிலங்களை ஆதரிக்கும் கட்சிகள், இங்கு அதிகப்படியான குடியேற்றத்தை தேர்தல் வாக்காக மாற்றிக் கொள்ளலாம். இதுவே நாளைய தமிழக அரசியல் அடையாள மாற்றத்திற்கு வழி வகுக்கக்கூடும். இது தமிழ் மொழி, பண்பாடு, அடையாளங்களை ஒழிக்கும் பாசிச திட்டமாகவும் கருதப்படுகிறது.

தீர்வுகள்:

- தமிழ்நாட்டில் உள்ளூர் வேலை வாய்ப்புகளை தமிழர்களுக்கே வழங்கும் சட்டங்கள்.
- கட்டுப்பாடற்ற குடியேற்றத்தை தடுக்கும் மாகாண தனிச்சட்டங்கள்.
- தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் தொழிற்பயிற்சி மற்றும் ஊக்கத் திட்டங்கள்.
- சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஊடக நிகழ்வுகள், கல்வி பயிற்சிகள்.
- குடியேற்றத்தை உநளௌரள, மற்றும் வாக்களிப்பு சோதனைகள் மூலம் கண்காணிக்க வேண்டிய அவசியம்.

தமிழர்கள் பல துறைகளிலும் முன்னேறியவர்கள், ஆனால் தங்கள் அடையாளத்தை பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வில் பின்தங்கியவர்கள். இந்த பின் தங்கிய விழிப்புணர்வே, நாளைய அடையாள அழிவிற்கும், அரசியல் அழுத்தத்திற்கும் வழி வகுக்கும். இப்போது விழித்துக் கொள்ளாவிட்டால், நாளைய தமிழ்நாடு, தமிழ் மொழி பேசத் தெரியாத ஒரு ஜனநாயக திகட்டின் கீழ் ஆட்சி செய்யப்படும் ஆபத்து உறுதியாகும். இது மிகைப் படுத்தலாக அல்ல, வரலாற்று மாற்றத்தின் உண்மையான நிழல்.

**ஈழத்து நிலவன் (28-05-2025)**

**இணுவில் திருவூர் ஒன்றியம் – கனடா**
**25ஆவது ஆண்டு வெள்ளிவிழா**


**காலம்:** 07-06-2025 (சனிக்கிழமை)
**இடம்:** The metropolitan centre
3840 Finch Ave East
Scarborough
**நேரம்:** மாலை 5:00

கலைநிகழ்வுகள், நடனம்,
நகைச்சுவைநாடகம், தாளவாத்தியக்கச்சேரி
மற்றும் இசைக்குழுவினரின பாடல்கள் இடம்பெறும்.

சிறப்புப்பேச்சாளர்:
செஞ்சொற்செல்வர் திரு. ஆறு. திருமுருகன்

**அனுமதிச்சீட்டு விபரங்களுக்கு:**
(647) 200-2177 (416) 389-7399
(416) 732-5898

விழாவில் சேரும் நிதியில் ஒரு பகுதி
ஸ்காபுரோவில் கட்டப்படும் தமிழ் சமூக மையத்திற்கும்
சிவபூமி அறக்கட்டளைக்கும் வழங்கப்படவிருக்கிறது.



உதயன் UTHAYAN
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2025

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL - 2025

# உதயன் சர்வதேச விருது விழா - 2025

19வது ஆண்டில்.......

கனடாவின் ஒன்ராரியோ மற்றும் கியுபெக் மாகாணங்களிலிருந்தும், அத்துடன் வெளிநாடுகளிலிருந்தும் வெவ்வேறு துறைகளில் சாதனை படைத்த வெற்றியாளர்கள் சிறப்பான முறையில் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

*Music - Dance - Awards Presentation - Dinner*

இசை - நடனம்- விருதுவழங்கல் -இராப்போசன விருந்து



Date: Saturday. June 14th, 2025
Time: 6.00 PM

Venue: The Estate Banquet & Event Centre
430 Nugget Avenue
Scarborough, ON M1S 4A4

அனுமதிச்சீட்டுக்களுக்கு:
(416) 732-1608
அல்லது (647) 762-9512



# Congratulations

## UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL - 2025

My best wishes for a successful event.



## Salma Zahid

**MP for Scarborough Centre—Don Valley East**

5-2155 Lawrence Avenue East
Scarborough, ON M1R 5G9
Tel: (416) 752-2358
Email: salma.zahid@parl.gc.ca
SalmaZahid15
@SalmaZahid15

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24






## OCCUPATIONAL DISABILITY RESPONSE TRAINING

PREVENTION LINK

### தொழிலாளர் இழப்பீடு குறித்து கற்றுக்கொள்வது ஏன்?

தொழிலாளர் இழப்பீட்டை நிர்வகிக்கும் விதிகளைப் விளங்கிக்கொள்ள.

பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டுச் சட்டத்தின் (WSIA) கீழ் சலுகைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன.

பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டுச் சபை (WSIB) எவ்வாறு செயல்படுகிறது.

ஒரு பயனுள்ள வாதிடுபவராக வருவது எப்படி.

VIRTUAL & IN-PERSON
**TRAINING 2025**
Contact us at info@preventionlink.ca

Scan the QR code to register for a course.

**Levels 1 & 2: Workers' Compensation Fundamentals**
» June 2-6

**Prevention Link Activist Bundle**
» July 20-25
· Principles of Accommodation Law
· Workers' Compensation 101
· Electronic Evidence · Return to Work 101

**NRLC Health and Safety/WSIB Educational**
» July 21-25
Levels 1 and 2: Fundamentals OR
Level 4: Return to Work
(Prerequisites: Levels 1 & 2)

**Return to Work 101**
» June 19 » December 2

**Principles of Accommodation Law**
» June 26 » December 3

**Level One: Rights and Obligations**
» September 3-17

**Level Two: Benefits and Services**
» October 9-23

**Psychological Health & Safety and Return to Work**
» September 28 – October 3



## NISSAN | VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**

*DAA ROTATION



**25 SENTRA**
*S CVT* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
*S* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION




**25 ROGUE**
*S AWD*
**0.99%** | **30** MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com





**Nick Mantas**

Councillor

Ward 22, Scarborough-Agincourt

100 Queen Street West, Suite A1
Toronto, ON M5H 2N2
Phone: (416) 392-1374
Fax: (416) 392-7431
Nick.Mantas@toronto.ca




**UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL - 2025**

**My best wishes for a successful event.**




Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# கனடா மேடையில் தோன்றிய “யாழ் நூலகம் காகிதத் தாய்களின் ஆலயம்”



**டாக்டர் போல் ஜோசேப் - கனடா**

44 ஆண்டுகளுக்கு முன்பு அந்த அதிகாலைப் பொழுதில் உலகத் தமிழினமே ஏக்கத்தில் உறைந்து போனது. வானொலி செய்திகள் பத்திரிகைச் செய்திகள் என எல்லா ஊடகங்களிலும் தலைப்புச் செய்திகளாக வந்து நம் உள்ளத்தை ஊடறுத்து இதயங்கள் சற்று அதிர்ந்து நின்று மீண்டும் துடித்த அந்த கணப் பொழுதுகள் இன்னும் என்றும் பலரின் நீங்கா நினைவுகளில். அதற்கு முன் இரவு வைகாசி *31, 1981.*

அதிகாலை ஒலிகளுக்கு பதிலாய்
ஒப்பாரி கேட்கிறது
அமைதி பொங்கும் இராப் பொழுதில்
என்ன நிகழ்ந்திருக்கும்?
எங்கும் ஏக்ககப் பெருமூச்சுகள்...
ஈழ தேசமே ஏன் இந்த நிசப்தம்
யாழ்ப்பாண பெருநகரே! ஏன் இந்த மௌனம்?

ஓ எங்களின் அறிவு கருவூலம் தீக்குளித்து விட்டதா
எம்மண்ணின் அறிவு களஞ்சியம் புகை கக்கிக் கிடக்கிறதே.
கடவுளே! வாரி இறைக்கப்பட்ட வக்கிரத்தின் வடுக்கள்
கோரமாய் தெரிகின்றன நாம் கோலமிட்ட இடமெல்லாம்.
கம்பீர தோற்றம் கரைந்து கரும்புகையாக காட்சி தருகிறது...

இப்படி, உதயன் லோகேந்திரலிங்கம் அவர்களின் கண்ணீர் எழுதிய வரிகளுக்கு அவரின் வாரிசு நடன ஆசிரியை ஜனனி ரவிசங்கர் தன் நடன உடல் மொழியால் மௌனமாய் பேசிய ஒவ்வொரு அசைவுக்கும் பார்வையாளர்களின் கண்களில் வழிந்த துளிகளால் ஒரு குட்டி நாயகராக்கள் ஓடிக் கொண்டிருந்தன. ஆம் கடந்த மே 17 அன்று கனடாவின் விற்பி நகரின் கலையரங்கில் நடன ஆசிரியையும் வங்கி அதிகாரியுமான திருமதி. ஜனனி ரவிசங்கர் அவர்களின் சக்தி நர்த்தனாலையா வழங்கிய “நாட்டிய மாலிகா” எனும் நிகழ்வில், அவரும் அவரின் மாணவிகளும் பக்தி இலக்கியங்கள் முதல் சங்க இலக்கியங்கள் வரையும் காவடிச்சிந்தெனும் ஆற்றுப்படுத்தும் கலை தொடங்கி தில்லானா வரை பல்வேறு நடனக்காட்சிப்படுத்தல் கண்களுக்கு விருந்தாக அமைந்திருந்தது.

நிகழ்வின் நடுவில் யாழ் நூலக எரிப்பின் நினைவாக ஜனனியின் தலைமையில் காட்சிப்படுத்தலோடு மேடையின் திரையில் நூலகத்தின் வரலாறு சித்தரிக்கப்பட அதற்கான நடன உத்திகள் சக்தி நர்த்தனாலையா மாணவிகள் வெளிப்படுத்த அரங்கமே சில மணித்துளிகள் கண்கள் துளிர்த்த கண்ணீரை துடைத்தபடி நூறாயிரம் காகிதத் தாய்களை அரவணைத்து வைத்திருந்த அந்த அறிவு திருக்கோவிலை சிங்கள அரசை பயங்கரவாதம் எரித்த நினைவுகளுக்குள்ளே மூழ்கிப்போயிருந்தனர்.

திட்டமிட்ட இனவழிப்பின் ஒருமுகம் இனப்படுகொலை, இன்னொரு முகம் அறிவுப் படுகொலை. இனவாதிகள் எண்ணினர் நூல்களைக் கருக்கினால் அறிவுத் தமிழனின் மூளையையும் கருக்கி பொசிக்கி விடலாமென்று. அறிவில் சிறந்த ஈழ இனத்தை புத்திப் படுகொலை செய்ய சிங்கள தேசம் முயன்ற புதிய யுக்தியிது.

அந்த நள்ளிரவு நானும் நாலு நண்பர்களும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி விடுதியில் கண்விழித்துப் படித்துக் கொண்டிருந்தோம். ஜன்னல் வழியே செந்நிற வானம் போலத் தோன்ற ஏதோ தொலைவில் எரிகிறது என்று உணர்ந்து, அதிபரின் அறைக்குச் சென்று (அன்று அதிபராக இருந்தவர் முள்ளி வாய்க்காலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களில் ஒருவரான அருட்தந்தை மைக்கேல் பிரான்சிஸ் ஜோசப்) அவரிடம் சொன்னோம் உடனே காவல் நிலையத்திற்கு தொலைபேசியில் அழைத்து கேட்டபோது, நூல்நிலையம் எரிகிறது ஃபாதர் என்று பதில் வந்தது. அவரின் அடுத்த அறையில் தன் ஓய்வு காலத்தினை தமிழ் ஆய்வுகளில் முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருந்தவர் அருட்தந்தை கலாநிதி டேவிட் அடிகளார், பன்மொழி வித்தகரான பல டாக்டர் பட்டங்களுக்கு சொந்தக்காரர் உறங்கிக் கொண்டிருந்தார். எழுப்பி தகவலைச் சொன்னபோது பலத்த சத்தத்தோடு கதறிக்கத்தி அழுதார். அவரின் பல ஆய்வுகள் வெற்றிகரமாக நிறைவேற உதவியது அந்த நூலகம் தான். மார்பை பிடித்தபடி இருக்கையில் அமர்ந்தார், மயக்கமான அவரை நாங்கள் படுக்க வைத்து விட்டு, அதிபர் மருத்துவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டார், சற்று நேரத்தில் மருத்துவரும் வந்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அன்றிரவே மரணத்திற்குள் அமைதியானார். அவரின் அந்த கதறல்கள் இன்னும் என் காதுகளில் அந்த நினைவுகள் வரும்போது எல்லாம் மறையாது எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

காலையில் வீதியெங்கும் ராணுவ வாகனங்களையும் பொருட்படுத்தாமல் மக்கள் கூட்டமாக யாத்திரை செல்வது போல நூலகம் எனும் ஆலயம் நோக்கி சென்ற மக்களோடு நாங்களும் சென்றோம். எங்கும் ஒரே கரும் புகைமண்டலம், இனவாதம் எனும் நெருப்பினால் கருகிய தூண்களோடு அறிவு பசிதீர்த்த வெண்மாளிகை அரை நூற்றாண்டு வயதை அண்மித்த போது இனவெறிப் பசிக்கு இரையாகி இனத்தின் அடையாளங்களின் அழியா வரலாற்று அரிய ஆவணங்கள் அத்தனையும் அழித்துவிட்ட அழியாத காயங்கள் ஆறப்போவதில்லை. எதையும் மன்னிக்கச் சொன்னார் இயேசு, ஆனால் மன்னிக்க மனம் மறுக்கிறது பாவிகளை மன்னிக்கலாம், சாத்தான்களை எப்படி மன்னிப்பது. கவிஞர் லோகேந்திரலிங்கம் அவர்களின் தொடரும் கவிதை வரிகளோடு என் கருத்தினை நிறைவு செய்கிறேன்.

நேற்றல்லவா இங்கு கூடி வந்து
அரிய நூல்களின் வாசனையை நுகர்ந்து சென்றோம்,
அறிவைச் சுமந்தவர்களாய் மிடுக்குடன் விடேகினோம்.
இன்று எப்படி ஈழத்தவர் அறிவுச்சுடர் மரணப்படுக்கையில்
கல்விமான்களை உற்பவித்த
தாயின் கருப்பையை சிதைத்தனர் சிங்களக் காடையர்கள்.

எங்கள் படிப்பின் பலம் எதுவென்று தேடி
அதற்குள்ளே கொள்ளி வைத்தனர்.
காலங்கள் கடந்த பல சித்தாந்தங்களை
தேடி வைத்திருந்த இடம் அல்லவா அது
எங்களின் வரலாறுகள் இங்குதானே பதிவாகி கிடந்தன,
அரச பயங்கரவாதிகளின் இனவாதப் பசிக்கு
இரையாகியதோ எங்கள் அறிவாலயம்.

காலணிகளை கழட்டி வைத்து விட்டல்லவா
இந்த கலைமகளை உடசென்று தரிசிப்போம்.

அதோ பாருங்கள் வெண்மையும் கருமையுமாய்
வானை நோக்கி புகை கூட்டங்கள் சூரிய சந்திரர்களின்
காதுகளில் சேர்ப்பதற்காய் போலும்,

ஐம்பதுகளிலிருந்து நேற்று வரை
அழகாய் எழுந்த நூலகம்
இன்று தீக்கிரையாகி,
நூறாயிரம் நூல்களும் சாம்பலாகிப் போயினவே.
ஏரிப்பின் எதிரொலி ஊரெங்கும் கேட்கிறது,
கல்விமான் தாவீது அடிகளின் இதயத்துடிப்பை
நிறுத்திய கொடுமை இது.
மீண்டும் இதே கொடுமை நிகழாதிருக்கட்டும்! நிகழாதிருக்கட்டும்.!



## நம்பிக்கை நாயகன்

---

*சுற்றியே பள்ளிச் சிறார்கள் நிற்க*
*சுறுசுறுப்பாய் அப்துல் கலாமும்*
*கற்றபின் அரசியலில் இறங்க எத்தனைபேர்*
*கரிசனை கொண்டு உள்ளீர்?*

*எத்தனை பேரிதில் எதிர்கால விஞ்ஞானி?*
*எல்லாக் கைகளும் எழுந்தன*
*சத்திய மனிதனின் சாதனை இதுவென*
*சரித்திரம் நிச்சயம் சொல்லுமே!*

*இலட்சக் கணக்கில் இளைய மாணவரை*
*இந்தியாவைத் தமிழை நேசித்தார்*
*இலட்சியம் கொண்ட எல்லோரின் உதாரணம்*
*இலக்குள்ள இவரின் வாழ்க்கை*

*எத்தனை விருதுகள் எவ்வளவு பட்டங்கள்*
*எல்லாம் மேலாக புனிதன்*
*இத்தனை காலமும் இவரொரு பிரமச்சாரி*
*இப்புவி இளைஞர் இவர்மகவே!*

*இந்த மனிதர் இறைத்த விதைகள்*
*இங்குள்ள இளைஞரில் முளைக்கும்*
*சொந்தச் சொத்தாம் “அக்கினிச் சிறகுகள்”*
*சோதியாய் சுடர்விட்டு நிலைக்கும்*


*நம்பிக்கை ஊட்டும் நல்லுரை செய்த*
*நல்லாசான் ஒப்பற்ற விஞ்ஞானி*
*எம்மை விட்டு எங்கோ சென்றாலும்*
*எந்நாளும் மறையா அவர்பெயரே!*

---

***ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்***
***(416) 844-7453***



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராாசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
**1147**

## சுவஉணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரசுவாமி ஆலயம்

### முகத்துவாரம், கொழும்பு

*“ சத்திநீ தயவுநீ தயங்கு சங்கின் ஓசை நீ*
*சித்திநீ சிவனும்நீ சிவாயமாம் எழுத்துநீ*
*முத்திநீ முதலும்நீ மூவரான தேவர்நீ*
*அத்திபூரம் உம்முள்ளே அறிந்துணாந்து கொள்ளுமே. ”*

ஈழத்தின் இந்துசமய வரலாற்றில் பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோரின் பங்களிப்பு, கல்லின் எழுத்தாக காலங்காலமாக நிலைத்து விளங்குகின்றது. தலைநகரிலே சிவாலயங்களை அமைத்த பெருமை இக்குடும்பத்தவர்களையே சாரும். பொன்னம்பலமுதலியார் அவர்களுடைய திருப்பணிக்குச் சான்றாக, கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் காணப்படுகின்றது. பொன்னம்பலமுதலியார் அவர்களுடைய இளைய புதல்வாரன சேர். பொன். அருணாசலம் அவர்கள், முகத்துவாரக் கடலோரத்தில் பரம்பொருளாகிய சிவலிங்கப்பெருமானுக்கு கோயிலெடுத்துள்ளார்.

முகத்துவாரம் பிரதேசத்தில் சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரர் ஆலயம் எழுந்த வரலாறு சிறப்புடையது. ஈழம் எனும் நிலப்பரப்பு, சித்தர்கள் வாழ்ந்த புண்ணிய பூமி. சிவயோகசுவாமிகள், கடையிற் சுவாமிகள், ஆனைக்குட்டி சுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள் போன்ற பலர் வாழ்ந்து மறைந்துள்ளனர். முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் கோயில் எழுவதற்கு, பெரியஆனைக்குட்டி சுவாமியார்மீது பொன்னம்பலம்முதலியார் அவர்களுடைய பிள்ளைகள் கொண்ட மாறாத பக்தியே காரணமாகியுள்ளது.

எமது தாயகமாகிய ஈழத்தில் காலத்தால் மறவாத சித்தர் பெருமக்கள் பலரிருந்தும், முற்றத்து மல்லிகை மணக்காத கதையாக அவர்களை மறந்து, மாற்றான்தோட்டத்து மல்லிகைகளை முகர்ந்து, அழகு பார்த்துவாழும் சமூகமாக எமது சமூகம் மாறியுள்ளது. இவ்வாறான சித்தர் பெருமக்கள் இன்றும் எமது ஆலயங்களில் சங்கமித்து, அருள்மழை பொழிவதை நாமறிய முயலவில்லை என்ற ஆதங்கம், சித்தர்பெருமக்களின் ஆன்மசாதனைகளை அறிந்தோரிடம் வேர்விட்டுப் பரவியுள்ளது. இவ்வாறான சித்தர் பெருமக்களின் பெருமையை தமிழ்ச்சமூகம் உணராமையும், அவர்கள் வாழ்ந்த காலத்திலும், இன்றும் அவர்களைப் போற்றாமையும், எமது துன்பங்களுக்கு ஒரு விதையாக அமைந்திருக்க வேண்டும்.

முற்பிறவியில் பட்டகடனைத் தீர்க்க, சலவைத்தொழிலாளியின் வளர்ப்பு மகனாக இருந்து, அவர்களைவிட்டகன்று பற்றறுத்துத் திரிந்த பெரிய

## (வரலாறும் மரபும்)

ஆனைக்குட்டியை, இறைவன் பல சாதனைகளில் ஈடுபடச் செய்து, அவரின் உள்ளுணர்வை மேம்படுத்திக் கொண்டிருந்தான். சித்தர்கள் மற்றவர்கள் தம்மைப்பற்றி என்ன எண்ணுகின்றார்கள் என்பதை மறந்த, இறைநிலைப்பட்டவர்களாக வாழ்ந்துள்ளனர். பெரியஆனைக்குட்டியும் இதற்கு விதிவிலக்கானவர் அல்ல. பெரியஆனைக்குட்டி தினமும் கடைவீதிக்குச் சென்று, அங்கு வீசப்படும் எச்சில் இலைகளைப் பொறுக்கி, அவற்றிலுள்ள எஞ்சிய உணவைச் சாப்பிட்டுவிட்டு கோயில்படிக்குத் திரும்பவும் வந்து அவ்விடத்திலேயே படுத்துவிடுவார்.

தாம் யார்? தமது நிலை என்ன? என்பதை யாருக்கும் வெளிப்படுத்தாத, அனைத்தையும் துறந்த நிலையிலேயே சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். பணம், பொருள், மற்றும் சுகபோகங்களை மறந்த நிலையே சித்தர்நிலை. இந்நிலையில் காணப்பட்ட பெரியஆனைக்குட்டி, ஆணவம் அழிந்தநிலையில், அனைத்தும் சமம் என்ற உளப்போக்கோடு காணப்பட்டுள்ளார். பெரியானைக்குட்டி, கண்டியில் இருக்கும்போது தான் யார் என்பதை காட்டிக்கொள்ளாது வாழ்ந்துள்ளார். சித்தர்கள் தாம் வாழ்ந்த இடத்தில் போற்றப்படுவதில்லை. காரணம் இம்மகான்களின் பூர்வாச்சிரமத்தை வைத்து அவர்களைச் சமூகம் புறந்தள்ளிவிடுவதுண்டு. சலவைத் தொழிலாளியின் வளர்ப்பு மகனாக இருந்த பெரியானைக் குட்டியையும், மக்கள் அந்த நிலையிலேயே கருதுவர்.

இவ்வாறான நிலையிலே ஜீவன்முத்தரான பெரியானைக்குட்டி, இந்தியா சென்றடைந்தார். இங்கு நவநாதசித்தர் போன்றோரோடு சேர்ந்து, பல அற்புதங்களைச் செய்தார். சிலகாலத்தின் பின்னர் மீண்டும் திரும்பிவந்து, கொழும்பிலுள்ள கப்பித்தாவத்தை என்ற இடத்தை வந்தடைந்தார். இங்கு வாழ்ந்துவந்த ஈனமுத்து என்பவரோடு சேர்ந்து வாழ்ந்துவந்தார். மிகவும் வறியநிலையில் வாழ்நத ஈனமுத்து அவர்கள், சுவாமியை கண்ணேபோல் காத்து வந்தார். ஒருநாள் ஈனமுத்து வெளியே சென்றுவிட்டுத் திரும்பியபொழுது, பெரியஆனைக்குட்டிச்சுவாமியார் சுவரில் சாய்ந்தவண்ணம் காலைநீட்டியபடியே, உயிர்பிரிந்தவர்போல மூச்சை அடக்கிக் காணப்பட்டார். அவ்விடத்திலே சுவாமி மலசலம் கழித்தநிலையும் காணப்பட்டது.


சுவாமியின் நிலையை அறியமுடியாத ஈனமுத்து, சுவாமி பரலோகம் சென்றுவிட்டார் எனக் கண்ணீர்விட்டுக் கதறினார். கையிலோ பணம் இல்லை. சுவாமியின் ஈமக்கிரியைகளை எப்படி நடத்துவது? அவருக்கு ஒரு விபரீத எண்ணம் தோன்றியது. குடிசையைக் கொளுத்திவிட்டால் சுவாமியின் உடலும் அதனுள் எரிந்து சாம்பராகிவிடும். வீடு நெருப்புப் பிடித்ததாகக் கூறிச் சமாளித்துவிடலாம் என, அந்தப் பேதைமனம் எண்ணியது. இவ்வாறு என்ன செய்வதென்று அறியாத நிலையிலே ஈனமுத்து தவித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது திடீரெனச் சுவாமிகள் கண்விழித்து, என்ன ஈனமுத்து வருத்தத்தோடு இருக்கிறாய்? கப்பல் கவிழ்ந்துவிட்டதா? ஏன்று கேட்டார். உடனே ஈனமுத்து சுவாமியின் பாதங்களில் தலையை வைத்து விம்மி விம்மி அழஆரம்பித்தார். பின் சுவாமியைத் தூக்கி எடுத்து துப்புரவு செய்தார். சுவாமியைச்சுற்றி சந்தனமணம் வீசிக்கொண்டிருந்தது. சுவாமியை உட்காரவைத்து வணங்கிநின்றார். அப்பொழுது “ஈனமுத்து கலங்காதே. இனி பெரியாட்கள் வருவாங்கள். காசுபணம் வரும். கவலைப்படாதே” என்று கூறினார்கள்.

**வளரும்...**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராாசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
**1148**

## சுவஉணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரசுவாமி ஆலயம்

### முகத்துவாரம், கொழும்பு

*“ குணங்கள் பலவிதமாய்க் கொள்ளாதே நெஞ்சே*
*வணங்குங் குணமாக வந்து - வணங்கியே*
*மண்டலமெ லாங்கடந்து மாவீட்டை நீதிறந்து*
*கண்டெடுத்துக் கொள்வாய் கனம். ”*

பெரியானைக்குட்டிசுவாமியின் வாக்கு பலிக்க ஆரம்பித்தது. ஊரிலே பெரியவர்கள், பணக்காரர்கள், வியாபாரிகள் என பல்வேறு நிலையில் இருந்தவர்களும், சுவாமியைத் தேடி வர ஆரம்பித்தனர். பணமும் பெருகியது. ஈனமுத்துவின் மகிழ்ச்சிக்கு எல்லையேது? சுவாமி வீதிசுற்றிவர ஒரு வண்டியும், ஒரு சோடி மாடும் வாங்கினார். அதிகாலையிலே எழுந்து செட்டிமார் இருக்கும் வீதிவழியே சுவாமி செல்வார். அப்பொழுது நோயாளிகளும், வறியவர்களும் வழியெங்கும் சுவாமியின் வருகைக்காகக் காத்துநிற்பார்கள்.

நோயாளிகள், சுவாமியிடமிருந்து வாய்வழியாக வழியும் தாம்பூல எச்சிலை எடுத்து, நோய்க்கு மருந்தாகப் பாவிப்பார். அதனால் சுகமுற்று நோயாளிகள் செல்வர். செட்டிமார் பணப்பெட்டியோடு, தமது பெட்டியில் சுவாமி கைவைத்துப் பணம் எடுக்க வேண்டும் என ஏங்கி நிற்பார்கள். சுவாமியும் ஒருவரின் பெட்டியில் கை வைத்து பணத்தை எடுத்து, அதனைத் தானதருமங்களைச் செய்வார். காசெடுத்தவர்களுக்கு சகல செல்வங்களும் நிறையும் என்பது நம்பிக்கையாகக் காணப்பட்டது. இவற்றோடு அரிசி மற்றும்பொருட்களையும் பெற்றுக்கொண்டு வீடு திரும்புவார். சுவாமியோடு கூட்டங்கூட்டமாக வரும் ஏழைகளுக்கு, அன்று முழுவதும் சாப்பாடு போட்டுக்கொண்டே இருப்பார்கள். சுவாமி கொண்டு சென்ற பொருட்களில் ஒன்றுமே மிஞ்சாது. அடுத்தநாளும் இவ்வாறே தொடரும்.

வசதிபடைத்தவர்களும், கொடுக்கும் நல்லெண்ணங் கொண்டோரும் கொடுப்பற்றை, ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்து, அவர்களோடு அமர்ந்து சுவாமிகளும் உணவு உண்ணுவார்கள். சிறிதாக உணவை எடுத்துவிட்டு, தன்னிடமுள்ள மிகுதி உணவை குழைத்து, சுவாமி அனைவருக்கும் கொடுப்பது வழக்கம். இதனைப் பெறுவதற்காக அனைவரும் ஏங்கி நிற்பது வழக்கம். “உணவளிப்பவர் ஈசன். ஆதலால் உணவை பழிக்கக்கூடாது. அளிக்கப்பட்ட உணவை உதறித்தள்ளியவன் பெரும் பாவத்துக்குள்ளாவான்” என்ற கொள்கையில் பிடிப்புள்ளவராகவே, சுவாமியின் செய்கைகள் காணப்பட்டன. அதனையே தன்னிடம் வருபவர்களுக்கும் சுவாமி போதனை செய்தார். சுவாமியின் பெருமையைக் கேள்வியுற்ற கண்பார்வை

## (வரலாறும் மரபும்)

இழந்த பிராமணப் பெரியவர் ஒருவர், சுவாமியை நாடிவந்து கண்பார்வை பெற்றுச் சென்ற விந்தையும் நடைபெற்றுள்ளது.

பெரியானைக்குட்டி சுவாமியார் தினமும் வீதிவழியே செல்லும்பொழுது, சுவாமியைத் தரிசனம் செய்யும் பாக்கியம், திரு. பொன்னம்பலம் அருணாசலம் அவர்களுக்கும் கிடைத்தது. சுவாமியைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தபோதிலும் அவரது தரிசனம் கிடைத்தமையைத் தனது தவப்பயனாகவே, திரு. அருணாசலம் அவர்கள் கருதினார்கள். இதன் பின்னர் சுவாமியை பலவழிகளிலும் போற்றி வணங்கி உபசரித்து வந்தார். சுவாமி சொன்ன பல விடயங்கள், திரு. பொ. அருணாசலம் அவர்கள் வீட்டிலே நடைபெற்றது. இச்சம்பவங்களின் காரணமாக மேலும் சுவாமிமீது திரு. அருணாசலம் அவர்களுக்கு பக்தியும், மதிப்பும் மேலிட்டது.

பெரியானைக்குட்டிச் சாமியாரின் தலையாய சீடராக, சித்தானைக் குட்டிச்சாமியார் விளங்கினார். பெரியானைக்குட்டிச்சாமியார் சமாதி அடையும் காலம் நெருங்கியதை, தனது உள்ளுணர்வால் அறிந்து கொண்ட சித்தானைக்குட்டிச்சாமியார், உடனடியாக பெரியானைக்குட்டிச் சாமியார் இருந்த இடத்திற்கு வந்து, அவரையே சுற்றிக்கொண்டு திரிந்தார். பெரியானைக்குட்டிச்சாமியாரை யாழ்ப்பாணம் கொண்டு சென்று சமாதி வைக்க வேண்டும் என்பது, சித்தானையின் எண்ணமாக இருந்தது. ஆனால் பெரியானைக்குட்டிச்சாமியார், கொழும்பிலேயே சமாதியடையவேண்டும் என்ற எண்ணத்தோடு காணப்பட்டார். இவ்வெண்ணத்திற்கு வேறோர் உள்நோக்கம் சுவாமியின் உள்ளத்திலே புதைந்திருந்தது.

சித்தானையின் எண்ணக்கருத்தை உணாந்துகொண்ட சுவாமியார், அவரை அழைத்து, “வடக்கே ஒரு பெரியவருடைய சமாதி உள்ளது. அந்த மண்ணிலே அடிமை மிதிக்கத் தகுதியற்றவன். எனவே யாழ்ப்பாணத்தில் எனக்குச் சமாதி வைக்கும் எண்ணத்தைக் கைவிடு” என்று கூறினார். சுவாமிகள் குறிப்பிட்ட மகான், கடையிற் சுவாமிகள் ஆவார். சித்தானையின் அன்பிலே கரைந்த சுவாமிகள், அவருடன் அன்பாகப் பேசிக் கொண்டிருந்த வேளையில், அடுப்பிலே கிடாரத்தில் சோறு வெந்து கொண்டிருந்தது. அந்த அடுப்பிலிருந்து தீப்பிடித்துள்ள பெரிய கொள்ளிக்கட்டையொன்றை எடுத்துவருமாறு சித்தானைக்குட்டிச் சாமியாருக்கு அன்புக்கட்டளையிட்டார்.

ஏன்? எதற்கு? என்ற கேள்வி எழுப்பாது, குருநாதரின் சிந்தையையுணர்ந்த சித்தானை, சுவாமி கூறியவாறே கொள்ளிக்கட்டையைக் கொண்டுவந்து கொடுத்தார். நெருப்பு கொள்ளிக்கட்டையில் தகதகவென எரிந்து தணலாகிக் கிடந்தது. அதனை வாங்கிய சுவாமி, சித்தானையின் புயத்திலே வைத்து அழுத்தினார். சித்தானையும் அதனைப் புன்சிரிப்போடு ஏற்றுக்கொண்டார். சித்தானைக்கு, பெரியானைக்குட்டிச்சாமியார் கொடுத்த குருதீட்சை இதுவாகும் என்பதை சித்தானை உணர்ந்தார். பெரியானைக்குட்டிச் சாமியார், சமாதியடையும் நேரம் வந்தபொழுது, சித்தானையை நோக்கி, “நீ முனீஸ்வரம் போ” என்று அனுப்பிவைத்தார். சித்தானை முனீஸ்வரத்தில் இருக்கும் பொழுது, பெரியானைக்குட்டிச்சாமியார் அவரது எண்ணப்படியே கொழும்பிலே சமாதியடைந்து விட்டார்.

**வளரும்...**




# கனடாவின் நினைவுத் தூபியும் அலறித் துடிக்கும் இலங்கை அரசும்

***"கனடா பிரம்டன் நகரிலுள்ள சிங்காவுசி பூங்காவில் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுணால் திறந்து வைக்கப்பட்ட "தமிழினப் படுகொலை நினைவுத்தூபி" போன்று ஏனைய புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் "தமிழினப் படுகொலை நினைவுத்தூபிகள்" அமைக்கப்படலாம் என்ற அச்சம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால்தான் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்,நாட்டில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளதாக கூறுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று மிரட்டுகின்றார்."***

**------------------------------------------------------ - கே. பாலா ----**

இலங்கையில் தமிழர் தாயகப்பகுதியில் இலங்கை அரசினாலும் அதன் இராணுவத்தினாலும் நடத்தப்பட்டது அப்பட்டமான இனப்படுகொலை என்பதை வடக்கு, கிழக்கு மக்கள் உரத்து கூறிவரும் நிலையில் அந்தக்குரலுக்கு ஆதரவான குரல்கள் உலக நாடுகளில் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இவ்வாறான உலக நாடுகளுக்கு முன்மாதிரியாக இலங்கையில் தமிழ்த்தேசிய இனம் மீது, இலங்கை அரசால் வலிந்து மேற்கொள்ளப்பட்ட மனிதப் பேரவலத்தை "இனப்படுகொலை" என்று ஏற்றுக்கொண்ட முதலாவது நாடாக கனடா போற்றப்படுகின்றது.

இலங்கையில் வந்தேறுகுடிகளான சிங்களவர்களுக்கும் பூர்வீக குடிகளான தமிழர்களுக்கும் 3 தசாப்தங்களுக்கும் மேலாக இடம்பெற்ற ஒரு போரின் முடிவு இலங்கையின் வடக்கு கிழக்கில் "இனப்படுகொலை" யாக நினைவுகொள்ளப்படுகின்ற நிலையில், தென்னிலங்கையில் "இனப்படுகொலை" என்பதனை நிராகரித்து "போர் வெற்றிக் கொண்டாட்டம்" என்ற பெயரில் வெற்றிநாளாக அனுஸ்டிக்கப்பட்டு வருகின்ற நிலையில்தான் இலங்கையின் தமிழர் தாயகப்பகுதியில் இலங்கை அரசினாலும் இராணுவத்தினாலும் நடத்தப்பட்டது "தமிழ் இனப்படுகொலை" என்பதனை கனடா ஏனைய உலக நாடுகளுக்கு உரத்துக் கூறியுள்ளது.

இலங்கை அரசினதும் இராணுவத்தினதும் இறுதிக்கட்ட யுத்த தமிழின அழிப்பால் உயிரிழந்தவர்கள், மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக உருவாக்கப்பட்ட தமிழின அழிப்பு நினைவுத்தூபி, "தமிழின அழிப்பு நினைவகம்" என்ற பெயரில் கனடா பிரம்டன் நகரிலுள்ள சிங்காவுசி பூங்காவில் கடந்த 11 ஆம் திகதி பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுணால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டதுடன் மே மாதம் 18ஆம் திகதியை தமிழின அழிப்பை நினைவு கூரும் நாளாக கனேடிய அரசாங்கம் அறிவித்தும் "தமிழினப் படுகொலை" நடந்தது என்பதனை சர்வதேச மயப்படுத்தியுள்ளது.

கனடாவின் இந்த துணிச்சலான, மனித உரிமைகளுக்கு மதிப்புக்கொடுக்கின்ற, சிறுபான்மையினங்களின் உரிமைகளுக்கு குரல் கொடுக்கின்ற, அநீதிகளை சமரசமின்றி எதிர்க்கின்ற, நியாயத்தின் பக்கம் நிற்கின்ற, உண்மையை உரத்துக்கூறுகின்ற உயரிய அரசியலும் உயர்ந்த குணமும்தான் இன்று இலங்கை அரசுக்கும் சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகளுக்கும் சிம்ம சொப்பனமாக மாறியுள்ளதுடன் இவர்களை நெருப்பில் விழுந்த புழுக்களாக துடிக்கவும் துள்ளவும் வைத்துள்ளது.

தமிழின படுகொலையை நினைவுகூரும் வகையில் கனடா, பிரம்டன் நகரிலுள்ள சிங்காவுசி பூங்காவில் கடந்த 11ஆம் திகதி தமிழின அழிப்பு நினைவுத்தூபி உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டதற்கு இலங்கை அரசாங்கம் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் கடந்த 14 ஆம் திகதி இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் எரிக் வோல்ஸை அழைத்து, இலங்கை அரசாங்கம் இனப்படுகொலை குறித்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கடுமையாக நிராகரிப்பதாகவும், கனடாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னத்தை கடுமையாக எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்த இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இனப்படுகொலை நடந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டானது, தேசிய அல்லது சர்வதேச அளவில் எந்தவொரு நம்பகமான அதிகாரியாலும் ஆதாரத்துடன் நிரூபிக்கப்படவில்லை. அவை தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட குற்றச்சாட்டுகள் என இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் வலியுறுத்துகிறது. இந்தப் பொய்யான கதையை இலங்கை முற்றிலும் நிராகரிப்பதுடன், கனடாவிற்குள் தத்தமது தேர்தல் ஆதாயங்களுக்காக இவ்வாறு பிரசாரம் செய்யப்பட்டுள்ளதாக நம்புகிறது.

2021, ஏப்ரலில், கனடாவின் வெளிநாட்டு அலுவல்கள், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தித் திணைக்களம், இலங்கையில் இனப்படுகொலை நடந்ததாக எந்தவொரு கண்டுபிடிப்பையும் கனடா அரசு மேற்கொள்ளவில்லை என்பதை அதிகார பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது. மேலும், 2006 இல் கனடாவானது தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பொன்றாக அறிவித்ததுடன், 2024 ஜூனில் இவ்வகைப்படுத்தலை மீண்டும் உறுதிப்படுத்தியது.

கனடாவின் பிரம்டன் நகரில் உள்ள சிங்காவுசி பூங்காவில், தமிழ் இனப்படுகொலையைக் குறிக்குமுகமாக நினைவுச்சின்னமொன்றை நிர்மாணிப்பது குறித்து, இலங்கை அரசு பலமுறை தனது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளது. பிரம்டன் நகர சபையின் இவ்வருந்தத்தக்க முயற்சியைத் தலையிட்டுத் தடுக்குமாறு, கனடாவின் மத்திய அரசை இலங்கை அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இச்செயற்பாடு குறித்த முன்னெடுப்புக்களை, பரந்தளவிலான இலங்கை மற்றும் கனேடிய சமூகங்களுக்கு எதிரானதான ஒன்றாகவே இலங்கை அரசு கருதுகிறது.

இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைப் பரப்புவதும், கட்டுக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட நினைவுச்சின்னங்களை நிர்மாணிப்பதும் பொதுமக்களை தவறாக வழிநடத்துவது மட்டுமல்லாமல், அனைத்து சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை மற்றும் நீடித்த அமைதிக்கான இலங்கையின் அயராத முயற்சிகளைச் சீர்குலைப்பவையாக அமையுமென, இலங்கை அரசு உறுதியாக நம்புகின்றது எனவும் கனடிய தூதுவரிடம் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கடும் தொனியில் கண்டனம் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கையிலுள்ள பிரதான தமிழ் தேசியக் கட்சிகள், அமைப்புக்கள், புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழர் அமைப்புக்கள் கனடா அரசுக்கும் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுணுக்கும் கனேடிய தூதுவருக்கும் தமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தன. இலங்கைத் தமிழர்களின் பிரதான கட்சியான இ லங்கைத் தமிழரசுக்கட்சி கனேடிய தூதுவர் எரிக் வோல்ஸை நேரில் சந்தித்து நன்றிகளை தெரிவித்தது.

கனடாவின்பிரம்டன்நகரில்இனப்படுகொலை நினைவுத்தூபி அமைக்கப்பட்டமை காலப்பெறுமதி மிக்க செயல் என்று கனேடிய உயர் ஸ்தானிகர் எரிக் வோல்ஸை சந்தித்த இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்ததுடன் தமிழர்கள் சார்பில் கனேடிய அரசுக்கு நன்றி தெரிவித்து கடிதமொன்றையும் கையளித்துள்ளார். மேற்குறித்த நினைவுத் தூபி அமைப்புக்கு நன்றி தெரிவித்து கனேடியப் பிரதமர் மார்க் ஹானிக்கும், பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுணுக்கும் கடந்த 19ஆம் திகதி மின்னஞ்சலில் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களின் பிரதியே கனேடிய ஸ்தானிகரிடம் நேரில் கையளிக்கப்பட்டது.



இவ்வாறான நிலையில்தான் கனடா பிரம்டன் நகரிலுள்ள சிங்காவுசி பூங்காவில் கடந்த 11 ஆம் திகதி பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுணால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்ட "தமிழின படுகொலை நினைவுத்தூபி" போன்று ஏனைய புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் "தமிழினப்படுகொலை நினைவுத்தூபிகள்" அமைக்கப்படலாம் என்ற அச்சம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால்தான் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்,நாட்டில் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளதாக கூறுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டி மூலம் அச்சுறுத்தியுள்ளார்.

பிரம்டன் நகரில் தமிழின அழிப்பு நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்ட போது பிரம்டன் நகர மேயர், ஏனைய நகர மேயர்கள் மற்றும் அரசியல்வாதிகளும் கலந்து கொண்டுள்ளனர். 2021 ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசாங்கம், வெளிவிவகார அமைச்சு மற்றும் கனடாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் கொன்சியுலர் காரியாலயம் இந்த நினைவுத்தூபிக்கு எதிர்ப்பை தெரிவித்து இராஜதந்திர மட்டத்தில் தலையீடு செய்துள்ளது. இது கனடாவின் மத்திய அரசுடன் இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தையில் ஈடுபட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இன அழிப்பு இடம்பெற்றதாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உறுதிப்படுத்தப்படவில்லை. கனடாவினால் அமுல்படுத்தப்பட்ட இனவழிப்பு வாரத்தை ஏற்க முடியாது என்பதை வெளிவிவகாரத்துறை அமைச்சு கொழும்பில் உள்ள கனடா உயர்ஸ்தானிகராலயத்துக்கு அறிவித்துள்ளது என பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவும் இலங்கையின் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆனால் இந்த சலசலப்புகளுக்கெல்லாம் கனடா அசரவில்லை. பிரம்டன் முதல்வர் பட்ரிக் பிரவுண் இது தொடர்பில் கூறுகையில். நாங்கள் தமிழர்கள் இனவழிப்பின் அளவை மறக்கக் கூடாது. இது ஒரு உடல்ரீதியான இனப்படுகொலை மாத்திரமல்ல உலகின் அனைத்து பகுதிகளிலும் உள்ள தமிழர்கள் மீதான தாக்குதல் மேலும், தமிழர் படுகொலை நினைவுத்தூபி என் நகரத்தில் உருவாகியுள்ளமை குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன் ஆனால் இன்னமும் செய்யவேண்டிய பணிகள் உள்ளன. எனவே இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படவில்லை என தெரிவிப்பவர்களிற்கு பிரம்டனில் இடமில்லை. கனடாவில் இடமில்லை கொழும்பிற்கு திரும்பிச் செல்லுங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிவிப்பினால்தான் கனடாவிலுள்ள சிங்களவர்கள் இந்த நினைவுத்தூபி தொடர்பில் சிங்கக்கொடியை தூக்கிக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்யமுடியாத நிலையில் உள்ளனர்.

அதுமட்டுமல்ல இலங்கை அரசுக்கு அடுத்த அடியாக கனடாவின் ரொரென்ரோவின் ஈழத்தமிழர்கள் அதிகம் வாழும் ஸ்காபொரோவில் தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபியை அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கவுன்சிலர் பார்த்தி கந்தவேள் முன்மொழிந்த தீர்மானமே ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பிரம்டனில் அமைக்கப்பட்ட தமிழின இன அழிப்பு நினைவுத்தூபிக்கு எதிராக அநுர அரசு மற்றும் ராஜபக்ஸக்கள் சிங்கள இனவாதிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வரும் நிலையில்தான் கனடாவின் அடுத்த நினைவுத்தூபி அறிவிப்பு இலங்கை அரசுக்கும் சிங்களபேரினவாதிகளுக்கும் கடும் சினத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# இலங்கைச் சிறையில் கைதி ஒருவரின் ஆடைகளை அவிழ்த்து தாக்கியதாக அதிரடிப்படை பொலிசார் மீது குற்றச்சாட்டு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

சிறையில் கைதி ஒருவர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் (STF) எவ்வாறு கொடூரமாகத் தாக்கப்பட்டார் என்பதை, கைதிகளின் உரிமைகளுக்காக வாதிடும் நாட்டின் முன்னணி அமைப்பு ஒன்று வெளிப்படுத்தியுள்ளது.

இணைய வசதியைப் பயன்படுத்தி பூசா சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட ஒரு கைதியை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நிர்வாணமாக்கி, தாக்கியதாக, சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு கொழும்பில் ஒரு ஊடக சந்திப்பை நடத்தி வெளிப்படுத்தியுள்ளது.

"மே 23, 2025 அன்று, பூசா சிறைச்சாலையில் ஒரு கைதி கொடூரமாகத் தாக்கப்படுகிறார். இந்தக் கைதி ரவிது சங்க சில்வா எனவும் அறியப்படுகின்றது."

நீதிமன்றத்திற்குச் செல்லாமல் இணையத்தின் ஊடாக நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்பதை சட்டப்பூர்வமாக்கும் சட்ட மூலத்தை நீதி அமைச்சர் ஹர்'ன நாணயக்கார நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த நாளில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

சிறைச்சாலையில் உள்ள ஒரு கைதியை அதே வளாகத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லும்போது, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், அவரைச் சோதனை செய்ய வேண்டியதன் அவசியம் என்னவென? கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவின் தலைவர் சுதேஷ் நந்திமால் சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

"ஆகவே, இந்தக் கைதியை, அதற்காக, பூசா சிறைச்சாலை அலுவலகத்திற்குதான் அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. பூசா சிறைச்சாலையில் இருந்து அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லும்போது, இந்த STF அவரை சோதனை செய்துள்ளனர். எனவே, சிறைச்சாலைக்குள் இருக்கும் கைதியை சிறைச்சாலை அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லும்போது ஏன் சோதனை செய்கிறார்கள் என்பதுதான் எங்களுக்கு உள்ள கேள்வி?"

கைதி ஏற்கனவே ஸ்கேனரைப் பயன்படுத்தி ஸ்கேன் செய்யப்பட்டிருந்தாலும், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைதியின் ஆடைகளை கழற்றி சோதனை செய்ததாக கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு கூறுகிறது.

"ஏனென்றால் சிறைச்சாலைக்கு சரியான பாதுகாப்பை ஜூவுகு வழங்கவில்லை. அவ்வாறு சோதனைச் செய்ய வேண்டுமெனின், சிறையில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் அல்லது ஆயுதங்கள் இருக்க வேண்டும். மேலும், இந்த நபரை ஸ்கேனர் இயந்திரத்தில் சோதனை செய்விட்டுதான் சோதனை செய்கிறார்கள். பின்னர் அவரை முழுமையாக நிர்வாணமாக்கி சோதனை செய்கிறார்கள்."

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், தடுப்புக் கைதியான ரவிது சங்க சில்வாவின் தலையை குறிவைத்து தாக்கியதாகக் கூறும் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு, சிறைச்சாலை அதிகாரிகள் இருக்கின்றபோது, எந்த அதிகாரத்தின் கீழ் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைதிகளின் ஆடைகள், அணிகலன் சோதித்தனர் என கடுமையாகக் கேள்வி எழுப்பியது.

"அவர் ஒரு சந்தேக நபர், அவர் ஒரு விசாரணைக் கைதி. இந்தத் தாக்குதலுக்குக் காரணம் அவர் தலையில் அணிந்திருந்த ஒரு பட்டி. இந்த பட்டியை பார்த்த ஜூவுகு அதிகாரி, அது உங்களுக்கு உரிமையா என்று கேட்டுள்ளாராம். கேட்கின்ற கதையை பாருங்கள். இது ஜூவுகு-உடன் தொடர்புடையதா? கைதி அணிந்திருப்பது STF-உடன் தொடர்புடையதா? அதை ஆராய்ந்து பார்க்க சிறைச்சாலை இருக்கிறது. ஆனால் அவரை நிர்வாணமாக்கி, பரிசோதித்து, எரிச்சலடைய செய், தாக்கியும் உள்ளனர். இந்த கைதி மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் தாக்கப்பட்டுள்ளார். இந்த பட்டியை அடிப்படையாகக் கொண்டுதான் அவர் தாக்கப்படுகிறார்."

பூசா சிறையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்ட இந்த இளைஞனின் உயிரை சிறை அதிகாரிகள் காப்பாற்றியதாக சுதேஷ் நந்திமால் சில்வா குறிப்பிடுகின்றார்.

"இந்தக் கைதியை சிறை அதிகாரி காப்பாற்றப்படுகிறார். இல்லையெனில், அவர் இந்த STF-இனால் அடித்துக் கொல்லப்பட்டிருப்பார். அவர், இணையத்தின் ஊடாக நீதித்துறை நடவடிக்கைகளுக்கு முன்னிலையாகும்போது, இது குறித்து நீதிபதியிடம் முறைப்பாடு அளித்தமையால் தான், இன்று, இந்த விடயம் குறித்து விசாரணை நடத்தவும், இந்த கைதியை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லவும் நீதிபதி உத்தரவிடுகிறார்."

இந்த தாக்குதல் குறித்து விசாரணை நடத்தி, கைதியைத் தாக்கிய பொலிஸ் விசேட அதிரடிப்படையினரை தண்டிக்குமாறு கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. பூசா சிறைச்சாலையில் உள்ள கைதிகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தொடர்ந்து கடுமையான சித்திரவதைகளுக்கு உட்படுத்துவதாக இந்த குழு கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் குற்றம் சாட்டியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# 37 ஆண்டுகளின் பின்பு தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய 75 வயது முதியவர் கைது

போர்க் காலத்தில் உயிரைக் காக்க யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகத்திற்குத் தப்பிச் சென்வர் 37 ஆண்டு கடந்து நாடு திரும்பியபோது சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறிய குற்றச் சாட்டின் கீழ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சின்னையா சிறிலோகநாதன் என்னும் ஏழாலையைச் சேர்ந்த 75 வயது முதியவர் யாழ்ப்பாணம் விமான நிலையம் ஊடாக நேற்றைய தினம் நாடு திரும்பியபோதே விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் காரணமாக உயிரை காக்கும் நோக்கில் லட்சக்கணக்கானோர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றபோது 1987 ஆம் ஆண்டு படகு மூலம் தமிழகத்திற்கு தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு தப்பிச் சென்றவர் தமிழகத்தின் திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள முகாமில் தங்கி வாழ்ந்து தற்போது ஏழாலையில் வசிக்கும் தனது மகனுடன் முதுமைக் காலத்தில் வாழ்வதற்காக ஐக்கிய நாடுகளின் அகதிகளிற்கான அமைப்பில் (யு.என்.எச்.சி.ஆர்) பதிவு செய்து தாயகம் திரும்பியபோதே 28ம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனால் இனி வரும. காலத்தில் தாயகம் திரும்பும் அகதிகள் கைது செய்யப்படுவார்களா என்ற அச்சம் எழுப்பப்படுகின்றது.

கனடிய செய்திகள்
Canadian News

# ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் Aris Babikian அவர்களால் ஏற்பாடு செய்யப்பெற்ற 3வது ஆண்டு ஆர்மேனியன் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்

## 3rd Armenian Heritage Month Celebrations hosted by MPP Aris Babikian at the Legislative Assembly of Ontario

3rd Armenian Heritage Month Celebrations hosted by MPP Aris Babikian at the Legislative Assembly of Ontario, took place on 26-05-2025. As per the invitation sent by Scarborough Agincourt MPP Aris Babikian, Ontario's Premier Doug Ford, few Ministers of Ontario Government, MPP's from various Political Parties and other dignitaries were gathered there to grace the event.



றொறன்ரோ பெரும்பாகத்தில் வாழும் தமிழ் மக்களுடனும் தமிழர் அமைப்புக்களுடனும் இறுக்கமான தொடர்புகளைப் பேணிய வண்ணம் தனது அரசியல் மற்றும் சமூகப் பணிகளை ஆற்றிவரும் ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் Aris Babikian அவர்களால் ஏற்பாடு செய்யப்பெற்ற 3வது ஆண்டு ஆர்மேனியன் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்.

கடந்த 26-05-2025 அன்று திங்கட்கிழமை ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றமான "குயின்ஸ்பார்க்" வளாகத்தில் இடம்பெற்றது.







மேற்படி நிகழ்வில் ஆர்மேனிய தேசத்தினதும் மக்களினதும் பண்பாட்டுக் கோலங்கள் நடனங்களாகவும் இசையாகவும் பார்வையாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பெற்றன.

ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் மற்றும் அமைச்சர்கள் அத்துடன் பல கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் நண்பர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.





## "வீரச் சுடராய் வாழ்ந்தவர்கள் – தமிழரின் விடுதலைக்காய் உயிர்தந்தவர்கள்"

**(ஈழத் தாய்மண்ணில் வீரச்சாவைத் தழுவிய தமிழீழ விடுதலைப் போராளர்களுக்கு)**

-------------------------



*தமிழரின் விடுதலைக்காய் எழுந்த ஒவ்வொரு உருவமும்*
*தமக்கென வாழவில்லை –*
*தமக்குள்ள கனவுகளையல்ல;*
*மக்களின் கனவுகளையே சுமந்தனர்.*
*மனம் தீண்டா வலிகளுக்குள்*
*மனிதமாய் மீண்ட வீரங்கள்.*

*நமக்காக...*
*அவர்கள் தமிழருக்கான சுயநிர்ணயக் கனவுக்காய்,*
*தம்மையே தியாகமாக மாற்றி,*
*அந்த மண்ணிலேதான் எமது விடுதலைக்காக*
*வீரவணக்கமாக மடிந்தார்கள்.*
*அவர்கள் எமக்காகவே வாழ்ந்தார்கள்,*
*எமக்காகவே போராடினார்கள் –*
*புயல்கெஞ்சாத அந்தக் கனலான இதயங்களாய்.*

*தெய்வங்கள் எங்கே என்று தேட வேண்டாம்,*
*மண்ணைத் தாங்கிய அந்தக் கருந்தூண்கள் தான்,*
*தீயில் சுடப்பட்ட நம் வீரங்கள் தான் –*
*தியாகத்தின் உயிர்புள்ளிகள்.*

*வெறுப்பும் வலியும் வாதைகளை மீறி,*
*விடுதலை என்ற கனவுக்காக*
*தொட்டு எழுந்த வெம்மையான சத்தம் –*
*அவர்கள் தேகம் கிடந்த இடமே*
*இன்று நம் நம்பிக்கையின் கோயில்.*

*நான் பேசும் ஒவ்வொரு சொல்லிலும்,*
*நீ நடக்கும் ஒவ்வொரு பாதையிலும்,*
*அவர்கள் ரத்தத்தால் எழுதப்பட்ட வரலாறுகள்*
*அழியாத அரிச்சுவடி.*

*நம் கண்ணீர் அவர்களின் பூஜை,*
*நம் போராட்டம் அவர்களின் தொடர்ச்சி.*
*தமிழரின் விடுதலைக்காய் வாழ்ந்தார்கள்,*
*வீரச்சுடராக எமக்குள் நிலைத்திருக்கின்றார்கள் –*
*அவர்கள் நமக்காக மட்டுமே மடிந்தார்கள்!*



-------------------------

**- ஈழத்து நிலவன் -**
*23-05-2025*



## மறையும் முன்னரே மக்களால் "மறக்கப்"பட்டவர்கள்!

"மக்கள் பிரதிநிதிகள்" என்ற பெயர்ப் பலகையோடு
பாவப்பட்ட தமிழ் மக்களின் பாராளுமன்ற உறுப்பினர்களாய்
எக்காலமும் "இருந்து" இறந்து போன இருவரைப் பற்றி
சற்று எண்ணத் தொடங்கியபோது தோன்றிய வரிகள்
யாழ் மண்ணின் "மாவை", திருமலை என்னும் தமிழர்களின் கனவுத் தலைநகரில் தோன்றிய
சம்பந்தர் என இரண்டு பெருமக்கள் இப்போது எம்மோடு "இல்லை".
இவர்கள் எம் மக்களால் மறக்கப்பட்டவர்கள் தான்
இவர்களது காலத்தில் மக்களால் மதிக்கப்பெற்றவர்களாய் பணி செய்திருக்க வேண்டியவர்கள்..
பாவம் செய்தவர்களாய்
பரலோகம் நோக்கிப் புறப்பட்டார்கள்.
மக்கள் இந்த இருவரையும் மிதிக்கவில்லை
ஆனால் இறக்கும் வரை இவர்கள் "ஏதாவது"
செய்வார்கள் என காத்திருந்தார்கள்.
இவர்களது பெயர் சொல்ல பல இருக்கின்றன
ஆனால் தமிழ் மக்களின் துயர் துடைப்பதற்காய் செய்த பணிகள் பற்றிய தகவல் எதுவுமே இல்லை.
இவர்கள் சேர்த்து வைத்த சொத்துக்கள் இலங்கையிலும் தமிழகத்திலும் திரைச்சீலைகளின் மறைவில் வாடிக்கிடக்கின்றன
இவர்களால் பல தடவைகள் காப்பாற்றப்பட்ட "தமிழினப் படுகொலையாளர்கள்" மகிந்தாவும் கோட்டாவும் ரணிலும் இவர்களுக்கு நன்றியுடையவர்களாயும் தமிழர்களின் எதிரிகளாயும்
தலைநகரில் வாசம் செய்கின்றார்கள்.
இதய சுத்தியுடன் தன் நலன் இன்றி மக்களுக்காய்
பணி செய்திருக்க வேண்டியவர்கள் அவற்றை மறுதலித்து
பாவம் செய்ததனால் மறக்கப்பட்டவர்களாய்.. விண்ணுலகில்...
மூத்தவர் தலைநகரின்
ஜொலிக்கும் மாளிகையின் உள்ளே
நினைவிழக்கும் நாள் வரை "உயர்ந்த தமிழர் தலைவர்" என்று தென்னிலங்கை இனவாதிகள் அழைத்திட "புகழுடன்" .இயற்கையாய் மடிந்தவர்.
இளையவர் இறுதிநாட்களில் வடக்கின் முதல்வராய்
சிம்மாசனத்தில் அமரந்திருந்து ஓய்வு பெயவேண்டும்
என்ற கனவுகளோடு "காலம்" சென்றவர்.
இவர்கள் எமது மக்களால் அவ்வப்போது இவ்வாறு
"நினைக்கப்படுவார்கள்.
ஆமாம்! ஈழத் தமிழர்கள் தங்கள் "தலைவிதியை" எண்ணி அழுது கண்ணீர் வடிக்கின்ற போதெல்லாம்
அவர்கள் மனக்கண்ணின் முன்பாக
மறக்கப்பெற்ற இருவரும்
தவறாது தோன்றுவார்கள்!

---------------------------------------------------

**முகநூலில் கிட்டிய நிஜமான வரிகள்**

---------------------------------------------------

## கனடாவில் "தமிழர் இனப்படுகொலை" முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி சேதமாக்கப்பட்டமைக்கு தமிழகத்தின் இயக்குனர் கௌதமன் கண்டனம்!



ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை வெளிப்படுத்தும் வகையில், கனடாவின் பிரம்டன் நகரில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி திறந்துவைக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் அந்த நினைவுத்தூபியானது இனந்தெரியாத நபர்களால் சேதப்படுத்தப்பட்டது.

அந்த நினைவுத்தூபி உருவாக்க குழுவின் உறுப்பினர்களில் ஒருவரும், பிரபல திரைப்பட இயக்குனரும், தமிழ் பேரரசு கட்சியின் தலைவருமாகிய வ.கௌதமன், குறித்த சம்பவத்துக்கு கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த நினைவுத்தூபி அமைப்பதற்கு தமிழ்நாட்டின் மகாபலிபுரத்தில் முக்கிய முன்னெடுப்புகள் இடம்பெற்றது. அந்த குழுவில் நானும் ஒரு முக்கியமான உறுப்பினராக இருந்துள்ளேன். இவ்வாறு நினைவுத்தூபி உடைக்கப்பட்டு விட்டது என்ற செய்தி அறிந்து மிகவும் மனமுடைந்து போனேன். இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டவர்களை கனடா அரசாங்கம் தண்டிக்க வேண்டும்.

எங்களுடைய உறவுகளை அழிக்கலாம், எங்களுடைய நினைவுச் சின்னங்களை தகர்க்கலாம் ஆனால் எங்களுடைய நினைவுகளை ஒருபோதும் அழிக்க முடியாது. இன்னும் இன்னும் ஆயிரமாயிரம் நினைவுச் சின்னங்கள் உலகம் முழுதும் எழுந்துகொண்டே இருக்கும். இதனை எவனாலும், எமனாலும்கூட தடுக்க முடியாது.

எங்களுடைய மக்களையும் அழித்துவிட்டு அவர்களை நினைவுகூருகின்ற நினைவுத் தூபிகளையும் சேதப்படுத்துவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். நினைவு சின்னங்களையே அழிக்க வேண்டும் என நினைக்கும் இலங்கை அரசானது தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் என நாங்கள் எவ்விதம் நம்புவது? எனவே இவ்வாறான விடயங்கள் குறித்து சர்வதேசம் உன்னிப்பாக கவனம் செலுத்த வேண்டும். தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்குவதற்கு அனைவரும் ஓர் அணியில் திரள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி அநுர அரசின் அண்மைய ஊடக தணிக்கைக்கு எதிராக ஊடகவியலாளர்கள் கொழும்பு வீதியில்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

நாட்டு மக்களின் அனைத்து அபிலாசைகளையும் நிறைவேற்றுவதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், ஊடகவியலாளர்களை கொலை செய்த குற்றவாளிகளைப் பின்தொடர்வதற்குப் பதிலாக ஊடகவியலாளர்கள் மீது கூட்டுத் தடையை விதித்தமைக்கு கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

“இன்று வரை, லசந்த விக்ரமதுங்க, பிரகீத் எக்கெனலிகொட, போத்தல ஜெயந்த ஆகியோரைக் கடத்தியது யார்? இந்த மக்களைக் கொன்றது யார்? அவர்களை யார் காணாமல் ஆக்கியது என்பதைக் கண்டுபிடிப்பதில் இந்த அரசாங்கத்திற்கு எந்த ஆர்வமும் இல்லை. ஆனால் இந்த அரசாங்கம் எங்களிடம் அடையாள அட்டைகளைக் கேட்கிறது.”

அரசாங்க தகவல் திணைக்களத்தில் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பு முன்தினம் (மே 27) நடைபெற்றபோது, ஊடக அமைச்சின் வளாகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினரான ஊடகவியலாளர் சாந்த விஜேசூரிய, அரச அடையாள அட்டைகளைக் கொண்ட ஊடகவியலாளர்களுக்கு மாத்திரமே அரசாங்கத்தின் தீர்மானங்களை வெளிப்படுத்துவது என்ற அரசாங்கத்தின் தீர்மானத்தை கண்டித்து, இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

“ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க ஊடக அடையாள அட்டைகளை கட்டாயமாக்குவதை எதிர்ப்போம், இனிமேல் அரச ஊடகக் கொள்கை மோசடி வேண்டாம்” என்ற தலைப்பில் நடைபெற்ற போராட்டத்திற்கு வழிவகுத்த அரசாங்கத்தின் ஊடக தணிக்கை குறித்து, தகவல் திணைக்கள ஊடக அடையாள அட்டைகளை வைத்திருக்கும் எந்த ஊடகவியலாளரும் அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளரிடம் கேள்வி எழுப்பவில்லை.

ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்ட இந்த போராட்டத்தின் போது, லங்கா ஸ்கை நியூஸ் வலைத்தளத்தின் ஆசிரியர் சாந்த விஜேசூரிய, தகவல் திணைக்களம் தற்போது ஊடக அடையாள அட்டைகளுக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாகவும், ஊடக நிறுவனங்களின் தலைவர்களும் அடையாள அட்டைகளைப் பெறுவதால் தொழில்முறை ஊடகவியலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தினார்.

“இதில் உண்மையான விசேடம் என்னவென்றால், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் பிற ஊடகங்களில் பணிபுரியும் சக ஊடகவியலாளர்களுக்கு, உண்மையில், இப்போது நிறுவனங்களில் உள்ள முதலாளிகளுக்கே ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. இப்போது, இந்த முறை, ஊடக அடையாள அட்டைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, வெளியில் பணிபுரியும் சுயாதீன ஊடகவியலாளர்களுக்கு முன்னர் அடையாள அட்டை வழங்கப்பட்டாலும், இப்போது அடையாள அட்டைகள் வழங்கப்படுவதில்லை, அதில் ஒரு பெரிய சிக்கல் உள்ளது. பின்னர் அவர்கள் தங்கள் வேலையை எப்படிச் செய்வார்கள்?”

லங்கா ஸ்கை நியூஸ் இணையதளத்திள் ஆசிரியர் சாந்த விஜேசூரிய, மே 8, 2025 அன்று காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் பங்கேற்க, அரசாங்க தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டை இல்லை என்ற காரணத்திற்காக, பணிப்பாளர் நாயகம் அனுமதிக்கவில்லை.

“இது எனக்கு ஒரு அச்சுறுத்தல் என்பதை விட, இது இந்த நாட்டின் முழு ஊடகங்களுக்கும் ஜனநாயகத்திற்கும் ஒரு கடுமையான சூழ்நிலை. ஏனென்றால், ஒவ்வொரு அரசாங்கமும் ஆட்சிக்கு வரும்போது செய்யும் முதல் விடயம் ஊடகங்களைத் தொடுவதுதான்.”

அரசாங்க தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டை இல்லாததால் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் பங்கேற்கும் வாய்ப்பு மறுக்கப்பட்ட நாட்டின் பிரபல யூடியூபர் லால் பெரேராவும் போராட்டத்தில் இணைந்தார்.

அழைக்கப்பட்டவராக அவர் கலந்து கொண்ட அமைச்சரவை ஊடக சந்திப்புகளில் “ஜீரணிக்க முடியாத” கேள்விகளைக் கேட்ட பின்னர் அவருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டதாக? அவர் கேள்வி எழுப்பினார்.

“இந்த ஊடக சந்திப்பில் நாம் நுழைய முடியாது என்பது இப்போது உங்களுக்குத் தெரியும். ஆனால் நான் வருவதற்கு இருக்கவில்லை, என்னைத்தான் வரச் சொன்னார்கள். நான் நான்கு முறை வந்தேன். நான் வந்து கேள்விகள் கேட்டபோது, அதை ஜீரணிக்க முடியவில்லையா? என எனக்குத் தெரியவில்லை.”

அரசாங்க தகவல் திணைக்களத்தால் ஊடகவியலாளர்களுக்காக வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டையை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை எனக் குறிப்பிட்ட ஊடகவியலாளர் சாந்த விஜேசூரிய, அரசாங்கத்தை விட ஊடக அடையாள அட்டையை வழங்கும் அதிகாரம் தனது சங்கத்திற்கு உள்ளது என்பதை வலியுறுத்துகிறார்.

“நாங்கள் இந்த அடையாள அட்டையை நாங்கள் எப்படியும் தயார் இல்லை. நாங்கள் அரசாங்க அடையாள அட்டையை ஏற்க மாட்டோம் என்றே எங்கள் சங்கம் இருந்தது. ஏனென்றால் அரசாங்க தகவல் திணைக்களத்தை விட எங்களுக்கு அதிக உரிமை உள்ளது. எங்கள் சங்கம். இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம், 1978 இல் நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு சங்கமாகும். ஆகவே, அடையாள அட்டையை வழங்கும் அதிகாரம் எங்களிடம் உள்ளது.”

மே 8 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவிலாளர் சந்திப்பிற்கு லங்கா ஸ்கை நியூஸ் இணையதள ஆசிரியர் சாந்த விஜேசூரியவை அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்திற்குள் நுழைய முற்பட்டபோது, அதன் பணிப்பாளர் நாயகம் அவரை தடுத்த நேரத்தில், சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு மற்றும் இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் இணைந்து வழங்கிய ஊடக அடையாள அட்டையையும், அவர் பணிபுரியும் லங்கா ஸ்கை நியூஸ் இணையதளத்தின் அடையாள அட்டையையும் ஊடகவியலாளர் வைத்திருந்ததாக இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பில் காலி முகத்திடலில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மே தின பேரணியில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க உரையாற்றும் புகைப்படத்தை வெளியிடுவதை நிறுத்துமாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு லங்காதீப புகைப்பட ஊடகவியலாளர் லஹிரு ஹர்ஷன மீது அழுத்தம் கொடுத்ததையும் ஊடகவியலாளர் சாந்த விஜேசூரிய மே 27 போராட்டத்தின் போது நினைவு கூர்ந்தார்.

“இந்த அரசாங்கம் மிகவும் ஜனநாயக விரோதப் பயணத்தில் உள்ளது. இந்த ஊடகத்தின் மீது அது கை வைத்துள்ளது. லங்காதீப ஊடகவியலாளர், அனுர குமாரவின் புகைப்படத்தை எடுத்திருப்பதைக் கண்டோம், அவரது ஆசிரியரிடம் பேசி அதை தணிக்கை செய்தனர். அவருக்கு சங்கடத்தை ஏற்படுத்தினர்.”

அரசாங்கம் ஆட்சிக்கு வந்த உடனேயே, சர்வதேச கவனத்தை ஈர்த்த ஊடகவியலாளர், லசந்த விக்ரமதுங்க, தர்மரத்னம் சிவராம் மற்றும் பிரகீத் எக்னாலிகொட உள்ளிட்டவர்கள் தொடர்பான பல வழக்குகளை மீண்டும் விசாரிப்பதாக கூறியிருந்தாலும், அந்த விடயத்தின் முன்னேற்றம் தொடர்பில் அண்மைக் காலத்தில் வெளிப்படுத்தியதா என்பது தெரியவில்லை.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ்க் கட்சிகள் ஆட்சியமைக்க தமிழ் தேசிய பேரவை ஆதரவு வழங்கும்

## தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் நா.உ. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவிப்பு

கனகராசா சரவணன்

தமிழர் தாயகத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் கூடிய ஆசனங்களை பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்றிருப்பின் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மாநகர முதல்வர், மற்றும் தவிசாளர் தெரிவுகள் தொடர்பில் தமிழ் தேசிய பேரவை ஆதரவு வழங்கும். என தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பேரவை 26ம் திகதி அன்று திங்கட்கிழமை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது அதில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் கச்சேரி அருகாமையிலுள்ள வை எம் சி ஏ மண்டபத்தில 25.05.2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தமிழ்த் தேசிய பேரவைத் தலைவர்கள் மற்றும் தமிழ்த் தேசிய பேரவையின் சார்பில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பெயரிலும் அதன் சைக்கிள் சின்னத்திலும் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற மேலதிக ஆசனங்கள் மூலம் கட்சியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் கூடிக் கலந்துரையாடி கொள்கை அடிப்படையில் ஒருமனதாக மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்களின் வெளிப்பாடு, சபைகளின் ஆட்சி நிர்வாகத்தை அமைப்பதில் மக்களின் தற்போதைய எதிர்பார்ப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு பேரவை இத்தீர்மானத்தை எடுத்துள்ளது. இத்தீர்மானத்துக்கமைய பின்வரும் முடிவுகள் தமிழ்த் தேசிய பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

தமிழர் தாயகத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் கூடிய ஆசனங்களை பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்றிருப்பின் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மாநகர முதல்வர், மற்றும் தவிசாளர் தெரிவுகள் தொடர்பில் தமிழ் தேசிய பேரவை ஆதரவு வழங்கும்.

அதேபோன்று உள்ளூராட்சி மன்றங்களில் இரண்டாவது நிலையில் கூடிய ஆசனங்களை பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்றிருப்பின் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு பிரதி முதல்வர், மற்றும் உப தவிசாளர் தெரிவுகள் தொடர்பில் தமிழ் தேசிய பேரவை ஆதரவு வழங்கும்.

மாநகர சபைகள் உட்பட தமிழர் தாயகத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடந்து முடிந்த தேர்தலில் கூடிய ஆசனங்களை பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்ற சபைகளில் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு தவிசாளர் தெரிவில் ஆதரவு வழங்குவதுடன் அவ்வாறான சபைகளுக்கான தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசியப் பேரவை போட்டியிடமாட்டாது.

அதேபோன்று தமிழ்த் தேசியப் பேரவை அதிகூடிய வாக்குகளைப் பெற்ற சபைகளில் தவிசாளர் தெரிவுக்குப் போட்டியிடும். அதன்போது மக்கள் தேர்தலில் வழங்கிய ஆணைக்கு மதிப்பளிக்கும் வகையில் ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகள் ஆதரவு வழங்கவேண்டுமென எதிர்பார்க்கிறது.

பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையில் தமிழ்த் தேசியப் பேரவை இரண்டாவது நிலையில் இருக்கும் சபைகளில் துணைத் தவிசாளர் பதவிக்குப் போட்டியிடும்.

பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையில் இரண்டாவது நிலையில் இருக்கும் தமிழ்த் தேசிய கட்சிக்கு துணைத் தவிசாளர் தெரிவுக்கு ஆதரவு வழங்கும்.

எந்தவொரு நிலையிலும் சிங்கள பௌத்த பேரினவாத கட்சிகளுக்கும் அவற்றுக்கு ஆதரவான கட்சிகளுக்கும் இவ்வாறான பதவிகளுக்கான தெரிவுகளுக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது.

இவற்றின் மூலம் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி நிர்வாகத்தை தமிழ்த் தேசியக்கட்சிகளின் கைகளில் வைத்திருப்பதுடன் எதிர்காலத்தில் எவ்வித இடையூறுகளுமில்லாது மக்களுக்கான பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியுமென்று பேரவை எதிர்பார்ப்பதுடன் இதன்மூலம் கட்சிகளுக்கிடையே புரிந்துணர்வை வளர்க்க முடியுமென்றும் தமிழ்த் தேசியப் பேரவை நம்புகிறது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இயற்கையும் செயற்கையுமாய் மரணங்கள் மலிந்து போன பாலைவனம் ஆகிவிட்டதா எமது தமிழ் மண்

இலங்கை செய்திகள் Sri Lanka News

## யாழ்ப்பாணத்தில் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்ட குடும்பஸ்தர்!

யாழ்ப்பாணத்தில் 29ம் திகதி அன்றையதினம் வியாழக்கிழமை குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளாளர். இதன்போது யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த இரத்தினம் சண்முகராசா (வயது 64) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கையில், குறித்த நபரை வியாழக்கிழமை அன்றையதினம் காணவில்லை என உறவினர்கள் தேடினர். இதன்போது அவர் கிணற்றடியில் சடலமாக காணப்பட்டார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



# மண்டைதீவில் உயிர் நீத்த வீரர்களை நினைவுகூரும் வகையில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு!

முக்கிய உள்ளூர் பிரதிநிதிகள் மற்றும் கடற்படை சிப்பாய்களின் பங்கேற்புடன் மண்டைதீவில் 29ம் திகதியன்று காலை 10 மணிக்கு மரம் நடும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

மே 18 ஆம் தேதி உயிர் நீத்த மாவீரர்களை நினைவுகூர்ந்து கௌரவிக்கும் முதன்மை நோக்கத்துடன், SLNS வேலுசுமனவின் கட்டளை அதிகாரியின் வழிகாட்டுதல் மற்றும் யோசனையின் கீழ் இந்த முயற்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த அஞ்சலியின் ஒரு பகுதியாக, COP சம்பகுளத்தில் முந்திரி செடிகள் மற்றும் தென்னங் கன்றுகள் நாட்டப்பட்டன.



# இலங்கையில் பலர் "நீதி கிடைக்காமலேயே காலமாகின்றனர்" என கவலையுடன் தெரிவித்த ஆளும் NPP கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்




நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை மிகப்பெரிய அளவில் இருப்பது அண்மைய வரலாற்றில் மிகப்பெரிய பிரச்சினைகளில் ஒன்றாகும் என சுட்டிக்காட்டிய ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், கடந்த ஜூன் மாதம் வரை, இலங்கையில் உள்ள நீதவான் நீதிமன்றங்களில் எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருந்ததாக தெரிவித்துள்ளார்.

"2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதியாகும்போது உயர் நீதிமன்றங்களில் 27,324 வழக்குகள் முடிவுக்குக் கொண்டுவரப்படால் இருந்தன. 2024 ஆம் ஆண்டு ஜூன்ம மாதம் 30ஆம் திகதியாகும்போது நீதவான் நீதிமன்றங்களில் 813,726 வழக்குகள் முடிவுக்குக் கொண்டுவரப்படால் இருந்தன."

மே 23, வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பின் போது, நீதி அமைச்சின் புள்ளிவிபரங்களை மேற்கோள் காட்டி உரையாற்றிய, ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சட்டத்தரணி அனுஷ்கா திலகரத்ன, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் நீதவான் நீதிமன்றங்களில் நிலுவையில் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை எட்டு இலட்சத்தைத் தாண்டியுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

"நீதியமைச்சில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய, 2023ஆம் ஆண்டு உயர் நீதிமன்றங்களில் 29,664 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதில் 21,937 வழக்குகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. அதேபோல் நீதவான் நீதிமன்றங்களில் 2023ஆம் ஆண்டு நிறைவடைந்தபோது முடிவுக்குக் கொண்டுவரப்படாத வழக்குகளின் எண்ணிக்கை 805,502 ஆகும். சிறுவர் நீதவான் நீதிமன்றங்களில் 1,215 வழக்குகள் முடிவுக்குக் கொண்டுவரப்படாமல் காணப்படுகின்றன."

நீதிமன்றங்களிலிருந்து நீதியை எதிர்பார்க்கும் பல இலங்கையர்கள் அது கிடைக்காமலேயே உயிரிழக்க நேரிட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

"இந்த நாட்டு மக்களின் பிரச்சினை, இந்த நாட்டு மக்கள் நீதிமன்றத்தில் நீதியை எதிர்ப்பார்க்கின்றனர். நியாயமான நீதியை நீதிமன்றில் எதிர்பார்க்கின்றனர். இந்த வழக்கு என்று நிறைவடையும் என்பதே மக்கள் எப்போதும் எம்மிடம் கேட்கும் கேள்வி. இந்த பிரச்சினையில் இருந்து எப்போது விடுதலைப் பெறுவது? அவர்களின் வாழ்வில் எத்தனை நாட்கள் சில வழக்குகளுக்கு வரும் நபர்களுக்கு அவர்களின் வழக்கு குறித்த உத்தரவு கிடைக்கவில்லை. இறுதியில் அவர்களுக்கான நியாயத்தை அனுபவிக்க வாய்ப்பில்லை, அவர்கள் இறந்து போயிருக்கின்றார்கள்.."

சந்தேக நபர்களை நீதிமன்றத்திற்கு அழைத்து வராமலேயே தடுத்து வைக்க முடியும் எனவும், தடுப்புக் காவல் காலத்தை நீட்டிக்க முடியும் எனவும், அவர்கள் இணையத்தின் (audio-visual link) ஊடாக நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்க முடியும் எனவும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அண்மையில் குறிப்பிட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

கனடிய செய்திகள்
Canadian News

## Canada repatriated its Constitution from Britain by achieving full independence, and witnessing immense growth. King Charles, at the Senate chamber in Ottawa, delivers the Throne Speech of the 45th Parliament of Canada.



# கனடா தனது அரசியலமைப்பை பிரித்தானியாவிடமிருந்து தழுவி மாற்றங்களைச் செய்து முழு சுதந்திரத்துடன், மகத்தான வெற்றிகளையும் ஈட்டி திகழ்கின்றது.

## ஒட்டாவா செனற்சபை வளாகத்தில் கனடாவின் 45வது பாராளுமன்ற சிம்மாசக உரையில் மன்னர் சார்ஸ் புகழாரம்.

**- ரொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்**



கனடா தனது அரசியலமைப்பை பிரித்தானிய தேசத்திடமிருந்துதான் தழுவிக் கொண்டது. அவ்வாறு இருந்தாலும் தனக்கேற்றவாறு அதில் மாற்றங்களைச் செய்து தற்பொது "முழு சுதந்திரத்தை அடைந்த ஒரு தேசமாக, மகத்தான வளர்ச்சியையும் வெற்றிகளையும் ஈட்டிய ஒரு தேசமாக உயர்ந்து நிற்கின்றது. அத்துடன்.

"கனடிய தேசமானது பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் பூர்வீகக் குடிகளின் பண்பாட்டுக் கோலங்களையும் அவற்றின் மூலததையும் தழுவியவண்ணம், தைரியமானதும், இலட்சியங்கள் பல கொண்ட ஒரு புதுமையான நாடாக தற்போது உலகின் கண்களுக்குத் தெரிகின்றது. மேலும், இருமொழிகள், வெளிப்படையான பன்முக கலாச்சார மற்றும் நல்லிணக்கம் சார்ந்த கொள்கைகளைப் பின்வற்றிய வண்ணம் தன்னை சரியான பாதையில் பயணிக்கச் செய்துள்ளது" இவ்வாறு கடந்த திங்கட்கிழைமை 26ம் திகதி ஒட்டாவா மாநகரில் அமைந்துள்ள கனடாவின் செனட் சபை வளாகத்தில் இடம்பெற்ற கனடாவின் புதிய லிபரல் அரசாங்கத்தின் 45வது பாராளுமன்றத்தின் சிம்மாசன உரையை ஆற்றிய போது திறந்த மனதுடனும் உண்மையான வார்த்தைகளுடனும் தெரிவித்தார்.

கனடாவின் பிரதமர் மார்க் கார்னி மற்றும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் செனற் சபை உறுப்பினர்கள் என நூற்றுக்கணக்கானவர்க்ள அமர்ந்திருந்த அவையொன்றில் பிரித்தானியாவின் மன்னர் சார்ள்ஸ் அவர்கள் தனது சிம்மாசன உரையை வாசித்த போது பல தடவைகள் சபையோரின் பாராட்டுக்களையும் கரகோசங்கள் மூலம் பெற்றுக்கொண்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மன்னர் சார்ள்ஸ் அவர்கள் தனது உரையில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் பொருளாதார மற்றும் கனடா தொடர்பான அச்சுறுத்தல்களுக்கு எதிராக கனடாவின் சுயாட்சியை அதிகரிக்கவும் பாதுகாக்கவும் உதவும் வகையில் மிகவும் அவதானமாக தனது கருத்துக்களைப் பகிர்ந்த கொண்டார்.

அவர் மேலும் உரைய்ற்றிய போது கனடாவின் இறையாண்மையையும் அதன் தனித்துவமான அடையாளத்தையும் தொடர்ந்த தக்கவைத்துக் கொண்டு ஒரு செழிப்பான நாடாக விளங்குவதைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். என்று தெரிவித்த அவர் கனடிய தேசிய கீதத்தின் சில வரிகளை அழுத்தமாக உச்சரித்து அதன் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்ட போது சபையோர் எழுந்து நின்று கரகோசம் செய்து மகிழ்ந்தனர்.

அமெரிக்காவின் குடியரசுக் கட்சியினரிடமிருந்து வேறுபட்ட ஒரு அமைப்பில் அரசியலமைப்பு அதிகாரத்தின் உடல் உருவகமான மன்னர் சார்லஸ், கனேடிய அரசாங்கம் ஒரு தருணம் நெருக்கடி என்று அழைத்ததில், 24 மணி நேர சூறாவளி வருகைக்காக நாட்டின் தலைநகருக்கு வந்தார், ஒரு சக்திவாய்ந்த அமெரிக்க ஜனாதிபதியான டொனால்ட் டிரம்ப் ஒரு வர்த்தகப் போரில் ஈடுபட்டுள்ளார் மற்றும் பிராந்திய விரிவாக்கத்திற்காக போராடுகிறார்.

மேற்படி தனது உரையை கனடியப் பிரதமர் மார்க் கார்னி அவர்களின் அலுவலகத்துடன் கலந்தாலோசித்து மோனார்க் எழுதிய உரையைஆரம்ப கருத்துக்களின் அடிப்படையில் புதிய தாராளவாத கொள்கையுடன் ஆளும் கட்சியின் நிகழ்ச்சி நிரலை சார்ந்து தனது உரையை ஆற்றினார் என பல துறைசார்ந்தவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் மூலம் தெளிவாகியுள்ளது, உருவாக்கியது.

மன்னர் சார்ள்ஸ் அவர்கள் தொடர்ந்து தனது உரையில் " அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பின் கனடாவை அமெரிக்காவின் ஒரு மாகாணமாக இணைக்கும் அச்சுறுத்தல்களை எதிர்ப்பதில் உள்ள தனது ஆதரவைக் காண்பிப்பதாகவும் கனடா ஒரு ஆபத்துக்களை எதிர்கொள்ளாது உலகில் முன்னோடியான நாடாக சவால்களை எதிர்கொள்கிறது என்றும் பாராட்டினார்.

ம்னனர் சார்ள்ஸ் அவர்கள் தனது உரையில் கனடாவின் முடியாட்சி மற்றும் பழங்குடி மக்களுடனான நாட்டின் உறவு பற்றிய தனிப்பயனாக்கப்பட்ட பிரதிபலிப்புக்களாக தனத உரையை தொடர்ந்த மேலும் கனடா தேசமானது உண்மை மற்றும் நல்லிணக்கத்தை நோக்கியயதும் வார்த்தைகள் மற்றும் செயற்பாடுகளில் ஒரு நேரான பாதையில் தொடர வேண்டும் என்ற தனது விருப்பத்தையும் வெளியிட்டார்.

ஒரு குறிப்பிடத்தக்க தருணத்தில், இந்த கனடிய தேசமானது காலனித்துவப்படுத்தப்பட்ட பிரித்தானிய முடிக்குரிய நாடாக விளங்குவதை பிரித்தானியா விரும்புகின்றது என்றும், தொடர்ந்து கனடாவின் தனித்துவமான தேசிய தன்மையை அடிக்கோடிட்டுக் காட்டும் தொடர்ச்சியான அறிக்கைகள், மற்றும் கனடாவின் "தனித்துவமான அடையாளத்தைபாராட்டிய வண்ணம் அதை தொடர வேண்டும். இது தேசிய விழுமியங்களைப் பாதுகாப்பதில் உள்ள துணிச்சலுக்கும் தியாகத்திற்கும் கனடா உதாரணமாக விளங்குகின்றது என்றும் அதை உலகெங்கிலும் உள்ள நாடுகள் அங்கீகரித்துள்ளன," என்றும் கூறினார்.

மேலும் மன்னர் சார்ள்ஸ் அவர்கள் தனத உரையின் இறுதிப் பகுதியில் "கனடாவின் அனைத்து பகுதிகளிலிருந்தும், பாதுகாப்பு இராணுவ மற்றும் பொலிஸ் சேவைகளிலிருந்தும், 2025 ஆம் ஆண்டில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கலந்துகொண்ட ஏனைய பிரதிநிதிகளுக்கும் தனது நன்றியைத் தெரிவித்த மன்னர் சார்ள்ஸ் அவர்கள் கனடிய அரசியல் சாசனத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் பாதுகாவலர்களாக விளங்கும் சகல கனடிய உத்தியோகத்தர்களுக்கும், பரந்த மனப்பான்மையுடன் நன்றி தெரிவித்தார.

மேலும் மன்னர் சார்ள்ஸ் அவர்கள் தனது தாயார் எலிசபெத் இரண்டாம் எலிசபெத் பாராளுமன்றத்தின் அமர்வைத் ஆரம்பித்த காலத்திலிரந்து கனடா "வியத்தகு முறையில் மாறிவிட்டது" என்ற அறிவிப்புடன் தனது உரையை நிறைவு செய்தார்.



# புதிய சட்டங்களின் மூலம் தொழிலாளர் பாதுகாப்பை எமது ஒன்ராறியோ அரசாங்கம் வலுப்படுத்தவுள்ளது என்கிறார் இணைஅமைச்சர் விஜேய் தணிகாசலம்

ஒன்ராறியோ அரசு தொழிலாளர் நலனுக்காகவும் மாநில பொருளாதார வளர்ச்சிக்காகவும் 18 புதிய முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கிய, தொழிலாளர் நலன்சார் ஏழு சட்டம், 2025ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. வேலை மோசடிகளைத் தடுப்பது, வேலையிடப் பாதுகாப்பு மீறல்களுக்கான தண்டங்களைக் கூட்டுவது, கட்டுமானப் பணிகளில் உயிர்காப்புக் கருவிகளை கட்டாயமாக்குவது போன்றவை இச்சட்டத்தின் நோக்கமாக அமையும். இது அபாய நிலையைக் குறைத்து திறன் பயிற்சிக்கான விரைவான அணுகலைப் பரிந்துரைப்பதன் மூலம் பணிக்குறைப்பினால் பாதிப்புக்குள்ளாகும் தொழிலாளர்களுக்கான ஆதரவாக விளங்கும். இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அமைச்சர் விஜய் தணிகாசலம் கருத்துத் தெரிவிக்கும்போது "இந்தச் சட்டம் ஒன்ராறியோவின் உழைக்கும் மக்களுக்கு அவர்கள் பணியிடங்களில் பாதுகாப்பை வழங்குவதுடன் அவர்களுக்கான கண்ணியம் மற்றும் அவர்களுக்கான வாய்ப்பை உறுதி செய்யும்" என்று கூறினார். இச்சட்டம், ஒன்ராறியோ மாநிலத்தை வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், குடும்பத்தை வளர்ப்பதற்கும் சிறந்த இடமாக மாற்றுவதற்கான ஒன்ராறியோ அரசின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.



இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# ஜனாதிபதி அநுர குமாரவின் அரசியல் ஆட்டம் ஆரம்பம்

## இலங்கையின் முன்னாள் அமைச்சர்களும் கொள்ளையர்களுமான மஹிந்தானந்தவுக்கு - 20 வருடம் நளினுக்கு 25 வருட கடூழிய சிறை கொழும்பு நிரந்தர நீதிமன்றம் தீர்ப்பளிப்பு

2015 ஜனாதிபதித் தேர்தலின் போது விளையாட்டு உபகரணங்களை இறக்குமதி செய்ததாக எழுந்த ஊழல் வழக்கில முன்னாள் விளையாட்டு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் இரண்டரை இலச்சம் ரூபா அபதாரம் முன்னாள் வர்த்தக அமைச்சரும் முன்னாள் லங்கா சதோச தலைவருமான நளின் பெர்னாண்டோவுக்கு 25 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் 4 இலச்சம் அபராதமாக செலுத்துமாறு கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்றம் 29ம் திகதி அன்று வியாழக்கிழமை (29) உத்தரவிட்டு தீர்பளித்தது.

குறித்த இருவருக்கும் எதிராக 2014 செப்டம்பர் 1 முதல் டிசம்பர் 31 வரை இறக்குமதி செய்யப்பட்ட 14,000 கேரம் போர்டுகள் மற்றும் 11,000 சதுரங்கப் பலகைகள் சம்பந்தப்பட்ட மோசடி கொள்முதல் ஒப்பந்தத்தை மையமாகக் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு (சிஐஏபிஓசி) CIABOC ஆணையாளர் நாயகத்தால் லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் பிரிவு 70 இன் கீழ் ஆறு கடுமையான குற்றச்சாட்டுகளை உள்ளடக்கி இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

இந்த குறித்த வழக்கு இடம்பெற்று வந்த நிலையில் இன்று கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்ற நீதிபதிகள் மகேீ வீரமன், பிரதீப் அபேரத்ன மற்றும் அமலி ரணவேரா ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு இடம்பெற்றது.

இதன்போது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தவர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட் டுள்ளதாகவும் அரசுக்கு ஏற்பட்ட மொத்த நிதி இழப்பு ரூ.53.1 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.



எனவே குற்றவாளிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் கண்டறிந்தது எனவே முன்னாள் விளையாட்டு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் இரண்டரை இலச்சம் ரூபா அபதாரம் முன்னாள் வர்த்தக அமைச்சரும் முன்னாள் லங்கா சதோச தலைவருமான நளின் பெர்னாண்டோவுக்கு 25 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் 4 இலச்சம் அபராதமாக செலுத்துமாறு நீதிபதிகள் உத்தரவிட்டு தீர்பளித்தனர்.

அதேவேளை வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்காக ஜனாதிபதி வழக்கறிஞர் அனில் சில்வாவும், மஹிந்தானந்த அளுத்கமகேவுக்காக ஜனாதிபதி வழக்கறிஞர் ஷனக ரணசிங்கவும் ஆஜராகியமை குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி சட்டத்தரணிகளில் "நல்லவர்களும்" உள்ளார்கள் "கொள்ளையர்களு"ம் உள்ளார்கள் என்பது இங்கு புலனாகின்றது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணத்தில் பித்தப்பை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

## வடபகுதி வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுபவர்களில் பலர் மரணத்தைத் தழுவுவோர் தொகை அதிகரிக்கின்றதா?

யாழ்ப்பாணத்தில் பித்தப்பை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி இன்றையதினம் உயிரிழந்துள்ளார். ஸமூத்தநயினார் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த துஷ்யந்தன் நிரோஷா (வயது 37) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண்ணுக்கு பித்தப்பை கல் சந்திரசிகிச்சை மேற்கொள்வதற்காக கடந்த 22ஆம் திகதி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். பின்னர் 23ஆம் திகதி பித்தப்பை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் குறித்த பெண் சிலமணி நேரங்களில் மயக்கமடைந்துள்ளார். பின்னர் 25ஆம் திகதி காலை, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இவ்வாறான நிலையில் வடபகுதி வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுபவர்களில் பலர் மரணத்தைத் தழுவுவோர் தொகை அதிகரிக்கின்றதா? என்ற கேள்வி எழுவது தவிர்க்கப்பட முடியாததா என்று பலரும் கேட்கின்றார்கள்.

# யாழ்ப்பாணத்தில் மாரடைப்பினால் திடீரென உயிரிழந்த ஆண்மகன்!

29ம் திகதி அன்றையதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆணொருவர் திடீரென உயிரிழந்துள்ளார். கீரிமலை வீதி, சித்தங்கேணி பகுதியை சேர்ந்த கணேசலிங்கம் ராஜ்குமார் (வயது 37) எனபவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (திருமணமாகவில்லை)

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் புதன்கிழமை அன்றிரவு உறக்கத்துக்கு சென்றுள்ளார். அவர் சங்கானை சந்தையில் வியாபாரம் செய்கின்றவர் என்பதால் அவரை வியாபாரத்துக்கு அனுப்புவதற்கு உறவினர்கள் வியாழன் அன்று காலை எழுப்ப முற்பட்டவேளை அசைவற்று காணப்பட்டார்.

இந்நிலையில் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# திசை மாறிப் போகும் யாழ்ப்பாண மண்!

## யாழ்ப்பாணத்தில் "மின்சார உற்பத்திக்கு" பெயர் பெற்ற சுன்னாகத்தில் போதைவஸ்துகளுடன் பலர் கைது!

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 28ம் திகதியும் 29ம் திகதியும் சுன்னாகம் பொலிஸார் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கைகளின்போது எழுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் மூவர் போதை மாத்திரைகளுடனும், இருவர் ஐஸ் போதைப்பொருளுடனும், இருவர் ஹெரோயின் போதைப் பொருளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் 3 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் ஏற்கனவே 8 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட வழக்கும் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களகடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகர சபைக்கு காளாஞ்சி கையளிக்கும் வைபவம்!

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஜூலை 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், நல்லூர் கந்தன் பெருவிழாவுக்கான ஆலய சூழல் பராமரிப்பு, ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்தல், வீதி தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ். மாநகர சபையினருக்கு ஆலய சம்பிரதாய முறைப்படி அன்றையதினம் (27) பெருவிழா பட்டோலை அடங்கிய காளாஞ்சி ஆலய கணக்குப்பிள்ளையால் கையளிக்கப்பட்டது.







இந்த வைபவத்தின் போது பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகர சபை வளாகத்தில் தோரணங்கள் கட்டி அலங்காரங்கள் அமையப்பெற்றிருந்தது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# பொருளாதார வளர்ச்சிக்காக மக்கள் விரும்பாத செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்த மாட்டோம் — மன்னாரில் கூட்டுறவு பிரதி அமைச்சர் உப்பாலி சமரசிங்க தெரிவிப்பு








- எஸ்.ஆர்.லெம்பேட் (28-05-2025)

மன்னார் மாவட்டத்தில் காற்று, கணிய மணல் போன்ற வளங்கள் காணப்படுகிறது. ஆனாலும் பொருளாதார வளர்ச்சிக்காக மக்கள் விரும்பாத செயற்பாடுகளை செய்ய மாட்டோம் என கூட்டுறவு பிரதி அமைச்சரும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் (28) மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருக்கான உத்தியோகபூர்வ அலுவலக திறப்பு விழா நிகழ்வின் போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த கால அரசாங்கங்கள் ஊடாக இந்த கனிய மணல் அகழ்வில் ஈடுபட இருக்கின்ற நிறுவனங்கள் முறையற்ற முறையில் சரியான அனுமதி பெறாமல் அரசியல் ரீதியான சலுகைகளை வைத்து கொண்டு இந்த செயற்பாட்டுக்கான அனுமதியை பெற்றுக் கொண்டுள்ளனர்.

அவர்கள் இந்த அனுமதியை சும்மா பெறவில்லை. முன்பு இங்கு இருந்த அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், சமூக மட்ட அமைப்புக்களின் அனுமதியை உத்தியோக பூர்வமாக பெற்று அதை நடைமுறைப்படுத்த வருகை தந்திருக்கிறார்கள்.

ஆனால் எங்களுடைய அரசாங்கத்தை பொறுத்த வரையில் மக்களின் பாதுகாப்பு சூழல், மக்களின் விருப்பம் என்பவற்றுக்கு முதன்மை அளிப்போம்.

எங்கள் நாட்டிலே எங்களுக்கு வருமானத்தை ஈட்டி தரக்கூடிய பல வளங்கள் காணப்படுகிறது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தை பொறுத்த வரையில் காற்று என்பது மிக சிறந்த வளம். அதே போன்று இந்த கணிய மணல் மிக சிறந்த வளம்.

விஞ்ஞான ரீதியில் இவ்வகையான செயற்பாட்டினால் இப்பகுதிக்கு அல்லது சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகிறதா? என்பதை ஆய்வு செய்து அதன் பிறகு அதற்கான நடவடிக்கைகள் எடுக்க கூடியதாக இருக்கும்.

பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக நாங்கள் இந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர், அரச ஊழியர்கள் இந்த பிரதேசத்தை சேர்ந்த மக்கள் இந்த சூழல் போன்ற விஷயங்களை கருத்தில் கொள்வோம்.

அதில் பாதிப்பு மக்களிடம் எதிர்ப்பு இருக்கும் என்றால் அவ்வகையான நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபட மாட்டோம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் போது கணிய மணல் அகழ்வுக்கான நவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப் படாது என தெரிவித்த போதும் தொடர்ச்சியாக கணிய மணல் அகழ்வுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மன்னார் அபிவிருத்திக்குழு கூட்டத்தில் புதிதாக முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் உற்பத்தி, கணிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (28-05-2025)



மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உப்பாலி சமரசிங்க தலைமையில் 28ம் திகதி அன்று புதன்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான றிசாட் பதியுதீன், காதர் மஸ்தான், ரவிகரன், முத்து முஹம்மட், ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மாவட்ட அபிவிருத்தி சார்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் புதிதாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி திட்டத்திற்கு பல்வேறு தரப்புக்களினால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

மேலும் மன்னாரில் கனிய மணல் அகழ்வு முன்னெடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளுக்கும் குறித்த கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் கனிய மணல் அகழ்வுக்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் குறித்து எதிர்ப்பு தெரிவித்த தோடு.இதனால் மன்னார் தீவில் ஏற்படப்போகும் அபாய நிலை குறித்தும் தெரியப் படுத்தியதோடு, மன்னார் தீவில் கனிய மணல் அகழ்வுக்கு தமது எதிர்ப்பையும் தெரிவித்தனர்.

இதேவேளை அன்றையதினம் புதன்கிழமை (28) இடம் பெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கனிய மணல் அகழ்வு குறித்து முடிவு எடுக்கப்படும் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட போதும் குறித்த கூட்டத்தில் கனிய மணல் அகழ்வு குறித்து எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.



மேலும் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த கூட்டத்தில் பிரதேச பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், முப்படை பிரதானிகள், அரச பதவி நிலை உத்தியோகத்தர்கள், என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் இலங்கை வங்கி ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை — பொது மக்கள் பாதிப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (29-05-2025)

இலங்கை வங்கி மன்னார் கிளை ஊழியர்கள் 29ம் திகத அன்றையதினம் வியாழக்கிழமை காலை 10.30 மணி முதல் அடையாள தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

அரச வங்கிகளின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டில் அன்று 29ம் திகதி காலை 10.30 தொடக்கம் வங்கி கிளை களை மூடி கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளில் இருந்து விலகியுள்ளனர்.






குறித்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பல்வேறு சேவைகள் நிமித்த வங்கிக்கு வருகை தந்த வாடிக்கையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டதுடன் வங்கி செயற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் பல தூர இடங்களில் இருந்து வருகை தந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

## வீணாவின் கவிக்கணை

ஆறறிவு இருந்தும்,
எல்லாமே
செய்ய முடிந்தும்,
மனம் உடைந்து
தான் செய்யும்
செயல் அறியாதவர்களும்,
சோம்பேறித்தனத்தினால்
தன் வாழ்க்கையை
தொலைத்தவர்களும்,
ஒரு நிமிடமேனும்
அந்த
ஐந்தறிவு படைத்த
எறும்பின் உழைப்பையும்
தேனீயின் சுறுசுறுப்பையும்
பார்த்தாலே போதும்
நாணி குறுகி தங்களை
மாற்றிடக்கூடும்.

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8









26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்






உதயம் 1521 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 30, 2025

# அம்பாறை — பெரிய நீலாவணை விஸ்ணு மகா வித்தியாலத்திலிருந்து பல்கலைக் கழகம் புகுந்த மாணவிகளுக்கு உதவி வழங்கிய கனடா விசு கணபதிப்பிள்ளை



இலங்கையின் கிழக்கு மாகாணம் - அம்பாறை மாவட்டம் - பெரிய நீலாவணை விஸ்ணு மகா வித்தியாலத்திலிருந்து பல்கலைக் கழகம் புகுந்துள்ள மாணவிகளைப் பாராட்டும் வைபவம் 27ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் பெரிய நீலாவணை விஸ்ணு மகா வித்தியாலத்திலிருந்து பல்கலைக் கழகம் புகுந்துள்ள மாணவிகளைப் பாராட்டும்வகையில் அன்பளிப்புக்கள் வழங்கிய கனடா வாழ் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களையும் பாடசாலை அதிபர் திருமதி வாசுகி ஐங்கரன் ஆகியோரையும் பாடசாலைச் சமூகம் வரவேற்றது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## Member of Parliament for Scarborough Centre-Don Valley East, Salma Zahid swears as a MP in Ottawa, with Supporters gathered there.

# தமிழ் மக்களின் நண்பியான பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் ஒட்டாவாவில் ஆதரவாளர்கள் மத்தியில் தனது தொகுதியின் உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.



ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தில் ஒரு அலுவலராக இணைந்த சமூக அக்கறையுடன் செயற்பாட்டும். பல்லினங்கள் சார்ந்த நண்பர்களோடும் அமைப்புக்களோடும் இணைந்து செயற்பட்டு அரசியலில் உயர்ந்தவரும் தமிழ் மக்களின் நெருங்கிய நண்பியுமான பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்கள் ஒட்டாவா மாநகரில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் கடந்த 21ம் திகதி புதன்கிழமையன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். (தொடர்ச்சி 11ம் பக்கம்)



# கனடாவில் "தமிழர் இனப்படுகொலை" முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி சேதமாக்கப்பட்டமைக்கு தமிழகத்தின் இயக்குனர் கௌதமன் கண்டனம்!

ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை வெளிப்படுத்தும் வகையில், கனடாவின் பிரம்டன் நகரில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி திறந்துவைக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் அந்த நினைவுத்தூபியானது இனந்தெரியாத நபர்களால் சேதப்படுத்தப்பட்டது.

அந்த நினைவுத்தூபி உருவாக்க குழுவின் உறுப்பினர்களில் ஒருவரும், பிரபல திரைப்பட இயக்குனரும், தமிழ் பேரரசு கட்சியின் தலைவருமாகிய வ.கௌதமன், குறித்த சம்பவத்துக்கு கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளார். (தொடர்ச்சி 21ம் பக்கம்)

# ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் Aris Babikian அவர்களால் ஏற்பாடு செய்யப்பெற்ற 3வது ஆண்டு "ஆர்மேனியன் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்.

## 3rd Armenian Heritage Month Celebrations, hosted by MPP Aris Babikian at the Legislative Assembly of Ontario



ரொறன்ரோ பெரும்பாகத்தில் வாழும் தமிழ் மக்களுடனும் தமிழர் அமைப்புக்களுடனும் இறுக்கமான தொடர்புகளைப் பேணிய வண்ணம் தனது அரசியல் மற்றும் சமூகப் பணிகளை ஆற்றிவரும் ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் **Aris Babikian** அவர்களால் ஏற்பாடு செய்யப்பெற்ற 3வது ஆண்டு "ஆர்மேனியன் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்.

கடந்த 26-05-2025 அன்று திங்கட்கிழமை ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றமான "குயின்ஸ்பார்க்" வளாகத்தில் இடம்பெற்றது.

(தொடர்ச்சி 20ம் பக்கம்)






# ஆசியாவின் தலைசிறந்த 100 விஞ்ஞானிகளில் ஒருவராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் தெரிவு!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட பௌதிகவியல் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் சிங்கப்பூரிலிருந்து வெளியிடப்படும் முன்னணி "ஆசிய விஞ்ஞானி" எனும் சஞ்சிகை இன் ஆசிய விஞ்ஞானி - 100 பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

ஆண்டுதோறும் வெளியிடப்படும் இந்த பட்டியல், ஆசியாவிலுள்ள தலைசிறந்த விஞ்ஞானிகளின் விசேட சாதனைகளை அங்கீகரிக்கிறது. பொதுவாக, இந்த பட்டியலில் தேர்வு செய்யப்படும் தலைசிறந்த விஞ்ஞானிகள், அவர்களின் தரமான ஆய்வு வெளியீட்டுக்கப்பால் தேசிய அல்லது சர்வதேச விருதை பெற்றிருக்க வேண்டும்.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)